Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 045 | ஞாயிற்றுக்கிழமை | மார்கழி 26 ஆம் நாள் 10 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

முதலில் அவர்கள் கம்யூனிஸ்டுகளைத் தேடி
வந்தார்கள்,
நான் எதுவும் கூறவில்லை.
ஏனெனில் நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல
பிறகு அவர்கள் சோசலிஸ்ட்டுகளைத் தேடி
வந்தார்கள்,
நான் எதுவும் கூறவில்லை.
ஏனெனில் நான் ஒரு சோசலிஸ்ட் அல்ல
பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளைத்
தேடி வந்தார்கள்,
நான் எதுவும் கூறவில்லை.
ஏனெனில் நான் ஒரு தொழிற்சங்கவாதி அல்ல
பிறகு அவர்கள் யூதர்களைத் தேடி வந்தார்கள்,
நான் எதுவும் கூறவில்லை.
ஏனெனில் நான் ஒரு யூதன் அல்ல
பிறகு அவர்கள் என்னைத் தேடி வந்தபோது,
எனக்காகக் குரல் கொடுக்க எவருமே
விட்டுவைக்கப்படவில்லை.

*மார்ட்டின் நீமொய்லர்*

இரவிரவாக மழைக்கும் குளிருக்கும் மத்தியில்

# அதிகாரத் தரப்புக்களின் மிரட்டலுக்கும் அடிபணியாத பல்கலை மாணவர்கள்!

## தனிமைப்படுத்தல் சட்டம் பாயும் என்ற பொலிஸ் எச்சரிக்கையையும் தூக்கிக் கடாசினர்

யாழ்ப்பாணம், ஜனவரி 10

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழித்து துவம்சம் செய்யப்பட்டமையால் உணர்வெழுச்சியுடன் உந்தப்பட்ட மாணவர்கள், பொதுமக்கள் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்பாக போராட்டத்தில் குதித்துள்ளனர். 15



## போர்க்காலச் சின்னங்கள் பல்கலையில் எதற்கு?

கோத்தா அரசு கேள்வி

கொழும்பு, ஜன. 10

பல்கலைக்கழகத்தில் எது இருக்க வேண்டும்? எது இருக்கக்கூடாது? 15

## தமிழர் தாயகத்தில் நாளை ஹர்த்தால்

### அரசியல் கட்சிகள் கூட்டாக அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இரவோடு இரவாக இடித்து 15



## முழு அடைப்புக்கு ஒத்துழையுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 10

நாளை வடக்கு கிழக்கு தழுவிய 15

## மாணவர்களைச் சீண்டுவதற்காக அரங்கேற்றப்பட்ட அராஜகச்செயல்

சம்பந்தன் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜன. 10

தமிழர்களின் அடையாளச் சின்னங்களில் நினைவுத் தூபிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. 15



## புலிகளை நினைவேந்தும் தூபிகளை வடக்கில் கூண்டோடு அழிக்கவேண்டும்

கொக்கரிக்கின்றது மஹிந்த அணி

கொழும்பு, ஜன. 10

அழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளைத் தூபிகள் அமைத்தோ அல்லது பகிரங்க நிகழ்வுகள் நடத் 15

## பல்கலை தூபி இடித்தழிப்புடன் இராணுவத்துக்கு தொடர்பில்லை

கைவிரிக்கின்றார் தளபதி

கொழும்பு, ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத் 15



## தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுநாள்

யாழ்ப்பாணம், ஜன. 10

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் 47ஆவது ஆண்டு நினை 04

## நல்லிணக்கத்துக்கு குந்தகமான போர்ச் சின்னமே அகற்றப்பட்டது

*அதனை இடிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பணிக்கவில்லை*

கொழும்பு, ஜன. 10

யாழ். பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த போர் நினைவுச் சின்னத்தை அகற்றும் தீர்மானம் அப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராலேயே மேற் 04

## பல்கலை மாணவர்கள் இருவரும் விடுதலை!!

யாழ்ப்பாணம், ஜன. 10

கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட, யாழ்ப்பாணப் பல்கலை மாணவர்கள் இரு 15

## சர்வமும் பாதுகாப்புத் தரப்பு; என்னிடம் எதுவுமேயில்லை!!

நழுவுகிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்பான அதிகாரம் தற்போது எமது கையில்இல்லை. அதுபாதுகாப்புத் 15

## கொதித்தெழுந்தது தமிழகம்

(விரிவு 6 ஆம்)



செலான் வங்கியிடமிருந்து உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

செலான் தங்கக் கடன்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது
011 200 88 88
www.seylank.lk

செலான் வங்கி

• அதிகபட்ச இரகசியத் தன்மை • சிநேகபூர்வமான உடனடி சேவை • சிறந்த பாதுகாப்பு

சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka) கம்பனி பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

பல்கலைக்கழகத் தூபி உடைப்பு

# தமிழ் மக்களின் உணர்வை நசுக்குவதற்குச் சமமானது!

## சி.வி.விக்னேஸ்வரன் கண்டனம்



**யாழ்ப்பாணம், ஜன. 10**

**யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது இப்போது இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அவர்களின் உறவுகளுக்காக அமைக்கப்பட்டது.

மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் என அனைத்துத் தரப்பினரும் இணைந்தே அதை அமைத்தார்கள். அதை நிர்மூலமாக்க வேண்டும் என்ற அரசின் உயர் தரப்பினரின் அழுத்தங்களையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம், இராணுவப் பாதுகாப்புடன் அகற்றியிருக்கின்றது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், அவர்கள் மீதான படுகொலைகள் போன்றவற்றின் நினைவுகளை முழுமையாக அகற்றிவிட வேண்டும் என்பது தற்போதைய அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதன் ஒரு அங்கமாகத்தான் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் முன்னெடுக்கும் மிகவும் ஆபத்தான வேலைத் திட்டங்களில் இதுவும் ஒன்று. இதுபோன்ற பல திட்டங்கள் இந்த அரசிடம் இருப்பதாகத் தெரிகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஒருபோதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தி விட முடியாது. இது இராணுவ ஒடுக்குமுறையின் கோரத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கின்றது. அத்துடன் எம்மவரின் பயத்தின் உச்சகட்டமாகவும் காணப்படுகின்றது. இப்பொழுது இங்கு நடப்பது வெகுவிரைவில் சிங்களப் பகுதிகளிலும் ஏதோ ஒருவிதத்தில் நடைபெறப் போகின்றது என்பதை எமது சிங்கள சகோதர சகோதரிகள் உணர்வார்களாக என்றார். (எ-இ)

# அரசின் அடக்குமுறைகளால் இன முரண்பாடே தோன்றும்

## செல்வம் எம்.பி. கண்டனம்!



மன்னார், ஜன.10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிப்புக்கு எனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியானது நேற்றுமுன்தினம் இரவு பொலிஸ், இராணுவத்தின் பாதுகாப்புடன் இடித்தழிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களும் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள்.

அமைதியாக வாழ நினைக்கும் தமிழ் சமூகத்தின் மீது 'அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவது மீண்டும் இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவே வழி ஏற்படுத்திக் கொடுக்கும். இலங்கை அரசு, கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட அனுபவங்களிலிருந்து தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதுடன், இடிக்கப்பட்ட நினைவுத் தூபிகளை அந்த இடத்தில் அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்-என்றார். (ற-213)

# தமிழரின் உணர்வோடு விளையாடுகிறது அரசு

## ஈ.சரவணபவன் கண்டனம்



யாழ்ப்பாணம், ஜன.10

போரில் இறந்த தங்களது உறவுகளை நினைவேந்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த தூபி இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டுள்ளது. அரசு தமிழ் மக்களின் உணர்வுகளோடு விளையாடுகின்றது அவர்களின் மனம் காயப்படுகின்றது. இது கண்டனத்துக்குரியது. இவ்வாறான அடக்குமுறைப் போக்கை அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்றுமுன்தினம் இரவு இடித்து அழிக்கப்பட்டது. அது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போரில் இறந்தவர்களை நினைவேந்துவதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடு இரவாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களின் மனங்களில் பெரும் வடுவை உருவாக்கியுள்ளது.

சிறுபான்மை மக்களின் உணர்வுகளை மதிக்காது அவர்களை நசுக்கும் - அடக்கும் போக்குடன் அரசு நடந்துகொள்வது ஒருபோதும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமை மதிக்கப்பட வேண்டும்.

நினைவுச் சின்னங்களை அழிப்பதன் மூலமும், தூபிகளை இடிப்பதன் மூலமும் தமிழ் மக்கள் மனதில் இருந்து கடந்த காலங்களை அழிக்க முடியாது என்ற உண்மையை அரசும், சிங்கள ஆட்சியாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும். இனிமேலும் சிறுபான்மை மக்களை அடக்கியாளும்போக்கைக் கைவிட வேண்டும். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவுத் தூபியை மீள அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (எ)

# அரசின் நடவடிக்கைகள் இன ஐக்கியத்தைத் தராது

## புளொட் தலைவர் சித்தார்த்தன் கண்டனம்



கொழும்பு, ஜன. 10

அரசின் நடவடிக்கைகள் இலங்கையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தாது என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பல்கலைக் கழகச் சிலை உடைப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி மக்களை நினைவுகூர அமைக்கப்பட்டது. இதை இரவோடிரவாக அரச இயந்திரம் இடித்தழித்துள்ளது. இது மிக மோசமான நடவடிக்கை. தமிழ் மக்களின் ஆன்மாவை உலுக்கும் இந்த நடவடிக்கைக்கு எமது கடுமையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறோம். முன்னைய அரசுகளின் இது போன்ற நடவடிக்கைகள் தான் தமிழ் மக்களை தவிர்க்கவியலாமல் நீண்ட போராட்டத்துக்கு தள்ளின. இந்த அரசும் தமிழ் மக்களை கொந்தளிக்க வைக்கும் நடவடிக்கைகளையே தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இப்படியான அடக்குமுறை செயற்பாடுக்ளை அரசு தொடருமானால், இந்த நாட்டில் நிரந்தர அமைதியை என்றுமே காண முடியாமல் போய்விடும் என்றார். (ம-20)

# தமிழினத்தின் ஆன்மாவையே அழித்த மிகக் கொடூர செயல்!

## மாவை சேனாதிராஜா சீற்றம்



யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமை தமிழினத்தின் ஆன்மாவையே அழித்த மிகக் கொடூரமான செயலாகும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்றுமுன்தினம் இரவு இடித்து அழிக்கப்பட்டது. அது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அரசின் மேலிடத்தின் உத்தரவின் பிரகாரம் பல்கலைக்கழக நிர்வாகத்தால் நேற்றிரவு இடித்தழிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் பெரும் எண்ணிக்கையில் பல்கலைக்கழக நுழைவாயிலில் குவிக்கப்பட்டு அவர்கள் பாதுகாப்பு வழங்க இந்த ஈனத்தனமான செயல் அரங்கேறியுள்ளது. தமிழினப் படுகொலையின் அடையாளமாகத் திகழும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, இடித்து அழிக்கப்பட்டமை தமிழினத்தின் ஆன்மாவையே அழித்த மிகக் கொடூரமான செயலாகும். இந்த அராஜகத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது - என்றார். (ற-22)

அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.

# அபான்ஸ் பொங்கும் சலுகை

வாடகைக் கொள்வனவுகளுக்கு 18 மாதங்கள் வரை வட்டியற்ற தவணைகள்

விசேட விலைக்கழிவுகள்

இலவச பரிசுகள்

கடனட்டைகளுக்கு 60 மாதங்கள் வரையான தவணை கொடுப்பனவு

2021 ஜனவரி 10 - 14 வரை மாத்திரம்

**LG Dual Cool Inverter வளிச்சீராக்கி**
ரூ.109,990 இலிருந்து
2 வருட இலவச உத்தரவாதம் + 3 இலவச சேவைகள்

**LG Wi-Fi Inverter வளிச்சீராக்கி**
ரூ.144,990 இலிருந்து
2 வருட இலவச உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
இலவசம் ப்ரீ ஸ்டான்டிங் குக்கர்

**Abans LED தொலைக்காட்சி** 32"
ABTV32MS316
ரூ.35,999
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 29,999
இலவசம் TV பிரகெட் + அயன் + ரைஸ் குக்கர் + ஃபேன்

**LG FHD தொலைக்காட்சி** 43"
LGTV43LM5500
ரூ.109,999
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 69,999
இலவசம் Hi-Fi சிஸ்டம் மற்றும் ஸ்டான்டிங் பேன்

**JBL Charge 4**
JBLPMJBLCHARGE4BLU
ரூ.51,999
விசேட விலை ரூ. 46,799
டீஷர்ட் ஒன்று இலவசம்

**JBL Sound Bar SB160**
JBLPMSB160BLKEU
ரூ.69,999
விசேட விலை ரூ. 62,999
டீஷர்ட் ஒன்று இலவசம்

**Abans Hi-Fi சிஸ்டம்**
இலவசம் ரைஸ் குக்கர்
ABHIFI1501
ரூ.25,999
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 22,999

**Abans Hi-Fi சிஸ்டம்**
இலவசம் ரைஸ் குக்கர்
ABHIFIVX5002
ரூ.31,999
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 28,999

**Abans குளிர்சாதனப் பெட்டி**
ALG-252NF
ரூ.74,990
வட்டியில்லை 18 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 68,490

**Haier குளிர்சாதனப் பெட்டி**
HRRF2782BS
ரூ.79,990
வட்டியில்லை 18 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 69,990

**LG ஸ்மார்ட் இன்வர்டர் குளிர்சாதனப் பெட்டி**
ரைஸ் குக்கர் இலவசம்
LGRFK272SLBBSHS
ரூ.89,990
வட்டியில்லை 18 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 84,990

**LG ஸ்மார்ட் இன்வர்டர் குளிர்சாதனப் பெட்டி**
ரைஸ் குக்கர் இலவசம்
GL-K272SPTL
ரூ.94,990
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 89,990

**Abans பூரண தானியங்கி சலவை இயந்திரம்**
7.5KG
ரைஸ் குக்கர் இலவசம்
வட்டியில்லை 18 கொடுப்பனவு
AWM-75FA
ரூ.47,990

**ELBA இலெக்ட்ரிக் ப்ரீ ஸ்டான்டிங் குக்கர்**
N55X340DE
ரூ.109,990
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 99,990

**Abans மைக்ரோவேவ் அவன்**
25L
AMS-25LGR
ரூ. 15,990
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 13,990

**PHILIPS மிக்ஷர் கிரைண்டர்**
PLMG7756
ரூ. 15,490
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ. 14,490

**PHILIPS மிக்ஷர் கிரைண்டர்**
PLM374011
ரூ. 8,990
விசேட விலை ரூ. 6,490

Nations Trust Bank, Sampath Cards, HNB, HSBC, NDB bank, DFCC BANK, BOC, People's Bank

0115 999 000 Buy Abans.com
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றிடுங்கள்
Abans

## மோடி தலையிட வேண்டும் வலியுறுத்தினார் ஸ்டாலின்!



சென்னை, ஜன. 10
ஈழத் தமிழர்களின் பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, யாழ் பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூணும் இடிக்கப்பட்டதற்கு எனது கடும் கண்டனங்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழக எதிர்க்கட்சித் தலைவரான ஸ்டாலின்.
இந்தியப் பிரதமர் மோடி இந்த அதிர்ச்சி சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்திட வேண்டும்! இது உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

# நினைவுத் தூபி இடித்தழிப்பு இன அழிப்பின் உச்சக்கட்டம்!

### சார்ள்ஸ் எம்.பி. காட்டம்



**மன்னார், ஜன.10**
**யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் நினைவிடம் இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டமை ஓர் இன அழிப்பின் உச்சக் கட்டம் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்றுமுன்தினம் இரவு இடித்து அழிக்கப்பட்டது. அது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.
அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:
இந்த நாட்டில் போரால் உயிரிழந்த மக்களை நினைவுகூர தமிழ் மக்களுக்கு உரிமை இல்லையா? தொடர்ந்தும் தமிழர்களை அடக்கி அவர்களின் வரலாற்றுச் சின்னங்களை அழித்துவருகின்றனர் சிங்கள ஆட்சியாளர்கள். இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகள் ஒருபோதும் இன நல்லுறவை வளர்க்காது.
இவ்வாறான நினைவுச் சின்னங்களை அழிப்பதன் மூலம் கடந்த கால தமிழ் மக்களின் நியாயங்கள் அவர்களின் மனங்களில் இருந்து ஒருபோதும் அழியாது. எனவே தமிழ் மக்களை விரக்திக்குள்ளாக்கும் செயற்பாடுகளை அரசு நிறுத்த வேண்டும்- என்றார். (ற-213)

## முள்ளிவாய்க்கால் தூபி அழிக்கப்பட்டமை அநீதி

### இம்ரான் மஹ்ரூப் கண்டனம்



யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவு தூபி அழிக்கப்பட்டமை கடும் கண்டனத்துக்குரியது. இது பெரும் அநீதி இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான இம்ரான் மஹ்ரூப்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி என்பது பலியான சகோதர தமிழ் உறவுகளை நினைவூட்டும் ஆத்மார்த்த மனிதாபிமான சின்னம். அது பயங்கரவாதம் சார்ந்த அல்லது படையினரை சாடுகின்ற குறியீடு அல்ல. தென் பகுதியில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்களில் கூட கடந்த கால அரச எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் பலியானவர்களுக்கான நினைவுத்தூபிகள் உள்ளன.
ஆகவே யாழ் பல்கலைக் கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமை கண்டனத்துக்குரியது. இத்தகைய அரசின் இனவாதம் சார் செயற்பாடுகள் ஒருபோதும் நாட்டில் அமைதியை, அபிவிருத்தியை ஏற்படுத்த, வழிசமைக்க மாட்டாது. கடந்தகால வரலாற்றில் அரசு எந்த பாடத்தையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதையே இந்த உடைத்தல், எரித்தல் போன்ற இனவாதம் சார் அரச செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன - என்றுள்ளது. (ம)

## முதலாம் பக்க தொடர்ச்சி

*தமிழாராய்ச்சி...*
வேந்தல் இன்று காலை 9 மணிக்கு, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் முன்பாகவுள்ள நினைவுத் தூபியில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. (ஒ.ரி4)

*நல்லிணக்கத்துக்கு...*
கொள்ளப்பட்டது. அதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை. இவ்வாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.
இலங்கையின் தெற்கு மற்றும் வடக்கின் ஒற்றுமைக்குத் தடையாக அமையும் என்ற காரணத்தாலேயே யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த போர் நினைவுச் சின்னம் அகற்றப்பட்டது. நினைவுச் சின்னத்தை அகற்றும் தீர்மானம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரால் மேற்கொள்ளப்பட்டது.
போரை மையமாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டு இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருந்தது. காலத்துக்குக்காலம் அது புதுப்பிக்கப்பட்டுள்ளது.
யாழ். பல்கலைக்கழகத்தில் ஆயிரத்து 500க்கும் அதிகமான சிங்கள மாணவர்களும், நாட்டின் தெற்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் அதிகமான தமிழ் மாணவர்களும் கற்று வரும் நிலையில், மாணவர்களுக்கு மத்தியில் பிரிவினைகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்தில் இந்தத் தீர்மானம் துணைவேந்தரால் மேற்கொள்ளப்பட்டது.
யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் செயற்பாடு காலத்துக்குப் பொருத்தமானதொன்றாகும். எமக்குப் போரின் நினைவுகள் அவசியமில்லை. சமாதானத்தின், ஒற்றுமையின் நினைவுகளே அவசியமாகும், என்றார். (ஒ.22)

## இனவெறியர்களின் இழிசெயல்: ஓ.பன்னீர்செல்வம் கண்டனம்!



சென்னை, ஜன. 10
இலங்கைப் போரில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக யாழ்ப்பாண பல்கலையில் அமைக்கப்பட்ட நினைவுத்தூண் நள்ளிரவில் இடித்து தகர்க்கப்பட்டுள்ளமை ஓர் இழிச்செயல் என்று கண்டித்துள்ளார் தமிழக்தின் துணைமுதல்வர் ஓ.பன்னீர்செல்வம்.
அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஈழப்போரில் ஈவு இரக்கமின்றி கொத்துக்கொத்தாக கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க போராடிக் கொண்டிருக்கிற வேளையில், தமிழர்களின் உணர்வை மேலும் ரணப்படுத்தும், இனவெறியினரின் இந்த இழிசெயல் கடும் கண்டனத்திற்குரியது. ஏற்றுக்கொள்ள முடியாத இக் கொடுஞ்செயலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றுள்ளது. (ம)

## விக்கி அணியினர் விடாப்பிடி: அவகாசத்துக்கு இணங்கினோம்

### கஜேந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 10
சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறையானது ஒரு அறிக்கையோடு மட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்ற கவலை எம்மிடம் இருந்தாலும், விக்னேஸ்வரன் தரப்பு அந்த விடயத்தில் பிடிவாதமாக நின்றமையால் நாங்கள் ஒரு வருட கால அவகாசத்தோடு அந்த விடயத்தையும் சேர்த்துக் கொள்வதற்கு இணங்கியிருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் தெரிவித்தார்.
ஜெனிவா விடயங்களை கையாள்வதற்கு ஒரு பொறிமுறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது. இதன் நிறைவில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத் தொடரை எதிர்கொள்வது தொடர்பாக வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய சிவில் அமைப்புக்களுக்கும், தமிழ்த் தேசிய பரப்பில் செயற்படுகின்ற அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலைக்கு நீதி விசாரணை தொடர்பாக கடந்த 8 வருடமாக மனித உரிமை பேரவையில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட்டிராத நிலையில் அந்த பொறுப்புகூறல் விடயத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவது என்ற விடயத்தில் இணக்கப்பாடு காணப்பட்டிருக்கின்றது.
அது தொடர்பான அறிக்கையினை கையொப்பமிட்டு அனுப்புவது என்பது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் விக்னேஸ்வரன் தரப்பினர் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். அந்தக் கருத்தானது பிரியோசனம் இல்லை எனவும், மீண்டும் பேரவைக்குள் முடக்கப்படும் என்ற கருத்தை நாம் குறிப்பிட்டு எதிர்த்து வலியுறுத்தினோம்.
எங்களை பொறுத்தவரையில் சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறையானது ஒரு அறிக்கையோடு மட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்ற கவலை எம்மிடம் இருக்கின்றது. ஆனாலும் விக்னேஸ்வரன் தரப்பு அந்த விடயத்தில் பிடிவாதமாக நின்றமையால் நாங்கள் கால அவகாசத்தோடு அந்த விடயத்தையும் சேர்த்துக்கொள்வதற்கு இணங்கியிருக்கின்றோம். அது தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட பிற்பாடு இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என்றார். (ம-6)

# தமிழினத்தின் மீது ஆயுதமற்ற போர்!!

## தமிழர் மரபுரிமைப் பேரவை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஜன.10

தமிழ் மரபுரிமைச் சின்னங்களை இல்லாதொழிப்பது அல்லது திரிவு படுத்தும் அரசியல் நிகழ்ச்சி நிரலை, ஆயுதமற்ற போராக, வடக்கு கிழக்கில், தமிழினம் மீது சிங்கள - பௌத்த அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்த அடக்குமுறைக்கெதிராக எழுச்சிகொள்ள வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்துக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு தமிழர் மரபுரிமைப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்பு தொடர்பில் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முள்ளிவாய்க்கால் அரசியல் வரலாற்றுத் தளத்தில் சிங்கள அரசியல் சொல்லாடலை, பயங்கரவாதத்தின் மீதான வெற்றி என்று கூறி தமிழினப் படுகொலையை மறுத்து வந்துள்ளது. இன்று 11 வருடங்கள் முடிந்த நிலையில் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அகற்றுவதென்பது, அரசின் ஒத்த அரசியல் சொல்லாடலை தக்கவைப்பதோடு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்வதுமாகும்.

தமிழினப் படுகொலையில் இறந்த மக்களை நினைவுகூருவது தமிழ் மக்களின் கூட்டுரிமை சார்ந்தது.

2009 க்குப் பின்னர் ஆயுதமற்ற போரை வடக்கு கிழக்கில் கட்டவிழ்த்த சிங்கள - பௌத்த அரசு,தொடர்ந்தும் தமிழினத்தை அடக்குமுறைக்குள் வைத்துக் கொண்டு, சிங்கள - பௌத்த ஏகாதிபத்தியத்தை வலுப்படுத்துகிறது. தமிழினத்தின் கூட்டுரிமைகளை ஈழத்தமிழ் அடையாளம் சார்ந்து மறுத்து, நிராகரித்து, மீறி வருவதென்பது சிங்கள பௌத்த அரசு தனது அரசியல் நிகழ்ச்சி நிரலிலிருந்து மாறவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது - என்றுள்ளது. (க)

# அடையாளத்தை அழித்தாலும் மனதிலிருந்து நீக்க முடியாது

## சத்தியலிங்கம் நினைவுபடுத்தல்

வவுனியா,ஜன.10

போரில் மரணித்தவர்களது நினைவாலயங்களை அழிப்பதும், நினைவு தினங்களைத் தடுத்து நிறுத்துவதும் நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்பதற்கு ஒருபோதும் உதவப் போவதில்லை. மாறாகப் பிரச்சினைகளை உக்கிரப்படுத்தும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைக்கப்பட்டமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் அரசியல், பொருளாதார, சமூக உரிமைக்காக சிறுபான்மையான மக்கள் முன்னெடுத்த 70 ஆண்டுகள் உரிமைப் போராட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட அடையாளங்களை, அழிப்பதனூடாக மக்கள் மனங்களில் இருந்து அவற்றை அழிக்க முடியாது என்பதை சம்மந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நிலையான சமாதானமும், அபிவிருத்தியும் ஏற்படுவதை அரசு விரும்புமேயானால், இவ்வாறான நடவடிக்கைகளை இனிமேலாவது செய்யாது பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (க-246)

# தமிழர்களை அடிமையாக்க முயலும் கோத்தாபய அரசு!

## பிரதேச சபை உறுப்பினர் கண்டனம்

முல்லைத்தீவு,ஜன.10

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய் கால் நினைவிடத்தை அழித்தமை, தமிழர்களை அடிமைகளாக வாழ நிர்ப்பந்திக்கும் கோத்தாபய அரசின் செயற்பாடே.

இவ்வாறு கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கோத்தாபய அரசின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடே முள்ளிவாய்க்கால் நினைத்தூபி அகற்றப்பட்டமை.

இறந்துபோன எமது உறவுகளின் நினைவிடத்தை அரசு சிதைத்த சம்பவம், எமது மனங்களை ரணமாக்கியுள்ளது.

தமிழர் நிலம் முழுதும் சிங்கள இராணுவ வெற்றி அடையாள தூபிகளை அமைத்துவிட்டு, தமிழர்களின் உறவுகளது நினைவிடங்களை அகற்றி, அடிமைகளாக வாழ நிர்ப்பந்திக்கிறது அரசு.

தமிழர்கள் அடக்குமுறைக்கு ஒரு போதும் அடிபணியமாட்டார்கள் என்பதை சிங்கள தேசம் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

(க-246)






# அடிவருடியாக இருப்பதைவிட பதவி துறப்பதே மேலானது!!

*பசுமை இயக்கத்தின் தலைவர் கண்டனம்*

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டுள்ளது. இந்த ஈனச் செயலை இராணுவத்தினர் செய்யவில்லை. அவர்களின் உத்தரவுக்கு அமைவாக, பல்கலைக்கழக நிர்வாகமே செய்து முடித்திருக்கிறது. துணைவேந்தர் என்பவர் அரசின் அடிவருடி அல்லர். அடிபணிந்து ஒரு ஈனச் செயலைச் செய்வதை விடப் பதவி துறப்பது மேலானது.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நேற்று முன்தினம் இரவு பல்கலைக்கழக நிர்வாகத்தால் இடித்தழிக்கப்பட்டது. இது தொடர்பாக அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பை நிகழ்த்திய ராஜபக்ச சகோதரர்கள் அதற்கான சாட்சியங்களையும், தடயங்களையும் அழித்தொழிப்பதில் முழுவீச்சுடன் செயற்பட்டு வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், அவர்தம் உறவினர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியைத் தற்போது பல்கலைக்கழக நிர்வாகத்தினரைக் கொண்டே இடித்தழித்துள்ளனர்.

நினைவுத்தூபிகள் வெறுமனே சீமெந்தாலும் கற்களாலும் ஆன உயிரற்ற தூண்கள் அல்ல. நினைவுக் கற்களிலும், நினைவுத்தூபிகளிலும் மரணித்துப் போனவர்களின் ஆன்மாக்கள் குடிகொண்டிருக்கின்றன என்றே அவற்றை அஞ்சலிப்பவர்கள் நம்புகிறார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் அ.துரைராஜா ஒரு துணைவேந்தராகப் பல்கலைக்கழகத்தை நல்வழி நடத்திச் சென்ற அதேவேளை, தமிழ் இனத்தின் அரசியல் விடுதலை குறித்த தெளிவான பார்வையுடனும் செயற்பட்டிருந்தார். அதனாலேயே அவர் மாமனிதராகப் போற்றப்படுகின்றார். இப்போதுள்ளவர்கள் மாமனிதர்களாக வேண்டாம். குறைந்தபட்சம் மனிதர்களாகக் கூட நடந்திருந்தால் மரணித்தவர்களின் நினைவுகளைச் சுமந்துள்ள தூபியை இடிப்பதற்கான உத்தரவைச் சிரமேற்கொணடு நிறைவேற்றியிருக்க மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார். (ற-இ)

# நினைவுத்தூபி அழிப்பு வன்முறையைத் தூண்டும்!

*யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையின் தலைவர் தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், ஜன.10**

**யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்தமுள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமை தமிழ் மக்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தியுள்ளது. இதனால் இளைஞர்கள் மத்தியில் மீண்டும் வன்முறை உணர்வு வளரலாம்.**

**இவ்வாறு யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமை தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

1970 களில் தமிழாராய்ச்சி மாநாட்டில் இறந்தவர்களின் நினைவுச் சின்னத்தை மாறிமாறிச் சிதைத்து இளைஞர்கள் மத்தியில் வன்முறையை முன்னைய அரசுகள் தூண்டி அரசியல் லாபம் கண்டார்கள். அதே தவறைத் தொடரவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை அஞ்சலிப்பது வன்முறையைத் தூண்டும் என நினைப்பது தவறானது. மாறாக அஞ்சலிப்பதைத் தடுப்பதால் வன்முறை வரலாம். போரில் இறந்தவர்களின் நினைவுச் சின்னத்தை நாகரிகம் படைத்த நாடெதுவும் அழித்ததாக வரலாறில்லை.

இந்தத் தூபி அனுமதியற்று அமைக்கப்பட்டதால் இடித்தழிக்கப்பட்டது எனக் கூறுவது நியாயமானால், இந்த விடயத்தை சுமூகமாகத் தீர்க்க விரும்பியிருந்தால், அனுமதி பெற்று இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருக்கலாமல்லவா?.

புனித ஆத்மாக்களின் நினைவுச் சின்னத்தை அழிப்பதால் இந்நாட்டுக்கு தோஷம் ஏற்படலாமென அஞ்சுவதால், இதனை அரசு மீள மைத்துக் கொடுத்து தமிழ், சிங்கள மக்களிடையே நல்லுறவைப் பேண முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இந்நேரத்தில் மாணவ சமூகம் அமைதியைப் பேணி, கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறும் அன்போடு கேட்டுக்கொளகிறேன்- என்றார். (ற-இ)

# புதிய தீவிரவாதச் சந்ததியை உருவாக்குவதற்கான முயற்சி

*மங்கள சமரவீர சாடல்*

கொழும்பு,ஜன.10

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் மீண்டுமொரு புதிய தீவிரவாதச் சந்ததியை உருவாக்குவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமை தொடர்பில் தனது ருவிற்றர் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது,

அரசின் இந்தச் செயற்பாடு, மீண்டுமொரு புதிய தீவிரவாத சந்ததியை உருவாக்குவதற்கு செயலாற்றுவது போல் தெரிகிறது. பெரும்பான்மை மதவெறிக்கு அடிபணிந்து, உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதேபோன்று உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு தமிழர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இலங்கை பரிதாபத்துக்குரிய நாடாக இருக்கிறது- என்றுள்ளது. (க)

# நினைவுச் சின்னங்களை இடிப்பது இனப்படுகொலையின் மறுவடிவம்

*அரியநேத்திரன் கண்டனம்*

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை இடித்தழித்தமை இனப் படுகொலையின் மறுவடிவமாகவே நோக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்று முன்தினம் இரவு இடித்து அழிக்கப்பட்டது. அது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

முள்ளிவாய்க்கால் இறுதிப் போராட்டத்தின் போது இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் கண்ணீர் நினைவை பதிவாக்கும் ஒரு வரலாற்று ஆவண நினைவுத் தூபியாக இது வடிவமைக்கப்பட்டிருந்தது.

அந்தத் தூபியை இரவு திடீரென பல்கலைக்கழக நிர்வாகம் கனரக வாகனத்தைக் கொண்டு இடித்தழித்துள்ளது. இது தமிழினப் படுகொலையின் மறுவடிவமாகவே உணரவைத்துள்ளது.

இந்த நினைவுச்சின்னம் விடுதலைப்புலிகளின் நினைவுச்சின்னமில்லை. அது இறுதிப்போரில் இனப் படுகொலை செய்யப்பட்ட எமது அனைத்து உறவுகளையும் நினைவுகூரும் ஒரு நினைவுச் சின்னமாகவே யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்தது.

கடந்த காலங்களில் போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் உரிமை எல்லா மக்களுக்கும் இருந்தது. இதை மறுதலிக்கும் விதமாக தமிழ் மக்களின் உணர்வுகளை அடக்கி ஒடுக்கும் அராஜக செயலாகவே இந்த நினைவுத் தூபி இடிக்கப்பட்டுள் ளது.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் ஏதோ ஒரு அழுத்தம் காரணமாக இந்த நினைவுத் தூபியை இடித்துத் தரை மட்டமாக்கி இருந்தாலும், மீண்டும் இந்த நினைவுத்தூபியை அதே இடத்தில் அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பு - என்றார். (ற-14)

# பல்கலை. தூபி இடிப்பு இன அழிப்பின் நீட்சியே!

*ரவிகரன் கடும் கண்டனம்!*



யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவிட அழிப்பு இன அழிப்பின் நீட்சி என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்றுமுன்தினம் இரவு இடித்து அழிக்கப்பட்டது. இது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழருக்கு எதிரான நெடுங்கால இன அழிப்புகளின் உச்சக்கட்டமாக இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் மனிதப் பேரிழிவாக பன்னாடுகள் பார்த்துக் கொண்டிருக்க, முள்ளிவாய்க்காலில் தமிழ் இன அழிப்பு நிகழ்த்தப்பட்டது.

அழிக்கப்பட்ட இனத்தின் நினைவாக எழுந்த அடையாளம் ஒன்று இன்று அழிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவிட அழிப்பு இன அழிப்பின் தொடர்ச்சியாகும்.

அடக்குமுறைகளால் எம்மை முடக்கி விடலாம் என்ற எண்ணம் வீழ்ந்துபோகும்காலம் தொலைவில் இல்லை.

இனியும் பொறுத்திருந்தால் வரலாறு ஒருபோதும் உங்களைப் போற்றாது. தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்கவும், தொடர்ந்து குற்றங்கள் இழைக்கப்படாமலிருக்கவும் பன்னாடுகள் உடனடியாகத் தலையிடவேண்டும் - என்றார். (ற-246)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பெருமையல்ல, அவமானமே!

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்றுமுன்தினம் இரவு பல்கலைக்கழக நிர்வாகத்தின் உத்தரவுடனும் அனுசரணையுடனும் இடித்தழிக்கப்பட்டிருக்கிறது. இது இலங்கை இனவெறி ஆட்சியாளரின் மனிதநேயத்துக்குப் புறம்பானதும், ஜனநாயகப் பண்பற்றதுமான, நவ சர்வதிகார ஆட்சிப் பொறிமுறையைச் சர்வதேச சமூகத்துக்கு மீண்டும் ஒருமுறை அடையாளப்படுத்தியுள்ளது. அதுவும் இன்னும் சில வாரங்களில் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வில் பங்குகொள்ளவிருக்கும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள அதேசமயம், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல முக்கிய செய்திகளையும் உணர்த்தியிருக்கும் என நம்பலாம்.

பாதுகாப்பு அமைச்சு உட்பட அரசின் உயர்மட்ட அமைப்புகளின் அழுத்தத்தின் காரணமாகவே இந்த இழிவான அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டு வரும் நிலையில், ‘சட்டவிரோதத் தூபியை அகற்றத்தான் வேண்டும்’ எனத் துணைவேந்தர் விளக்கம் அளித்துள்ளார். எனவே அவரினது விருப்பார்வத்துடன்கூடிய கோரிக்கையின் அடிப்படையிலும் இந்த அட்டூழியம் அரங்கேற்றப்பட்டது எனவும் கருத இடமுண்டு.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் ‘இந்த விவகாரம் தொடர்பாகத் தமக்கு எந்த விதத்திலும் சம்பந்தமில்லை எனவும் இது முற்றிலும் பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்த முடிவின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது’ என படைத்தரப்பும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் கூட்டாக அறிவித்துள்ளன. இந்த உறுதிப்படுத்தல்கள் இது தொடர்பாகப் பல வினாக்களை மக்கள் மத்தியில் எழுப்புபவையாக உள்ளன.

இதுவரை காலமும் யாருக்கும் எதுவித இடையூறும் செய்யாது, ஒரு காலக்கொடுமையின் அடையாளமாக, தானுண்டு தன் பாடுண்டு என்றிருந்த நினைவுத்தூபியை இரவோடு இரவாக இடித்தழிக்கும் இழிச் செயலைச் செய்ததன் மூலம் பல்கலைக்கழக நிர்வாகம் எதனைச் சாதித்ததாக நினைக்கிறது?

இந்த நாட்டில் நடைபெற்ற மனிதஉரிமை மீறல் மற்றும் தமிழின அழிப்புத் தொடர்பான ஆதார அடையாளங்களாகக் காணப்படும் தூபிகளையும் சின்னங்களையும் சிதைத்தழிப்பதன் மூலம் தம்மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றங்களை மறைத்து விடலாம், மறக்கடிக்கச் செய்து விடலாம் என அந்த ‘மந்தப் புத்திஜீவிகள்’ நம்புகின்றனர் என்றே எண்ணத் தோன்றுகிறது. சீப்பை ஒளித்துவிட்டால் கல்யாணத்தை நிறுத்திவிடலாம்’ என்பதைப் போன்றதே இதுவும். இவர்கள் எதற்கு அஞ்சி அல்லது எதற்கு ஆசைப்பட்டு இவ்வாறு செயற்படுகிறார்கள் என்ற கேள்விக்கு அவர்களால்கூட நிமிர்ந்து நின்று பதில் கூறவே முடியாது.

ஏனெனில் இதனைச் செய்ய அவர்களை உந்தித்தள்ளுகின்ற அவர்களின் சுயநல அரசியல் அபிலாசைகள் மிகவும் கீழ்த்தரமானவை என்பது நாடறிந்த விடயமே! இம்மாதிரியான தொலைநோக்கற்ற சிந்தனையோ அல்லது மனித உரிமைகளை மதிக்காத பண்புகளோ கொண்ட நடவடிக்கைகளின் மூலம் மக்களின் உணர்வுபூர்வமான விடயங்களைக் கொச்சைப்படுத்த நினைப்பது அநாகரிகமான செயல் என்பதை இவர்கள் அறியாமல் இருப்பதுதான் அறியாமையின் உச்சம்.

தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்டவர்களின் தூபியை எத்தனை தடவை சிதைத்திருப்பார்கள்? மாவீரர் துயிலும் இல்லங்கள் உட்பட எத்தனை நினைவாலயங்களை உழுது அழித்திருப்பார்கள்? திலீபனின் நினைவுத்தூபிக்கு நடந்தது என்ன? ஆனால் நினைவுகள் எல்லாவற்றையும் ஆத்மார்த்தமாக நினைவில் கொண்டிருப்பவர்களை யாராலும் எதனாலும் அழிக்கவே முடியாது. இது வரலாறாகத் தொடரும். அந்த வரலாற்றுடன் அதனை அழித்தவர்களும் நினைக்கப்படவே செய்வார்கள்.

**‘பெருமைக்குரியவர்களாக அல்ல, மாறாக அவமானத்திற்குரியவர்களாக’ நினைவிருக்கட்டும்.**

### இன்றைய கேலிச்சித்திரம்



நன்றி - அவந்த ஆட்டிகல

சிங்கள இனவாதப் பூதத்தின்

# இனஅழிப்பை மறைக்கும் முயற்சியே தூபி இடிப்பு!

நாடு கடந்த தமிழீழ அரசு கண்டனம்

லண்டன், ஜனவரி 10

சிங்கள இனவாதப் பூதத்தின் இன அழிப்பையும், கோரமுகத்தையும் மெல்லமெல்ல அகற்றும் முயற்சியின் ஒரு பகுதியாகவே யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நினைவுத் தூபி அழிக்கப்பட்ட சம்பவத்தை நோக்க முடியும்

இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

நினைவுத்தூபி அழிக்கப்பட்டாலும், சிங்களத்தின் இன அழிப்பின் பெருந்துயர் தமிழர் தேசத்தின் ஆன்மாவில் ஆறா வடுவாய்க் காலாகாலமாகத் தமிழ் மக்களின் கூட்டு நினைவுகளில் நிலைத்திருந்து எழும் பெருந்தழல் சிங்கள இனவாத பூதத்தை என்றோவொரு நாள் சுட்டெரிக்கும்.

சிங்களத்தின் தமிழ் இன அழிப்பின் அடையாளச் சின்னமாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி, சிறிலங்கா அரசின் உத்திரவுக்கிணங்க அழிக்கப்பட்டமையானது, உலகத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கோப உணர்வையும், வலியையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் தேசம் மீதான சிங்கள இனவாதப்பூத ஆக்கிரமிப்பின் மற்றுமொரு கோரமுகமாக தமிழ் மக்கள் இந்தச் செயலை உணர்கின்றனர்

இது தமிழ் மக்களுக்கு தமது அரசியல் உரிமைக்காக போராடிய மாவீரர்களை மட்டுமல்ல, இன அழிப்புக்கு உள்ளான மக்களை நினைவேந்துவதற்கும் உரிய அரசியல்வெளி இல்லை என்பதையே வெளிக்காட்டுகின்றது என்றுள்ளது. (எம)

# நினைவுகளை அழிப்பது மற்றோர் இனஅழிப்பே!

**கனடா பிரம்டன் நகரபிதா தெரிவிப்பு**

பாரிஸ், ஜன. 10

போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் நினைவுகள் அழிக்கப்பட்டிருப்பது இலங்கை அரசினது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் இன்னொரு வடிவமே என்று கனடா ஒன்ராரியோ பிரம்டன் நகர பிதா பற்றிக் வோல்ரர் பிறவுண் தெரிவித்திருக்கிறார்.

போர் நினைவிடம் அழிக்கப்படுவதை கனடாவும் சர்வதேச சமூகமும் தலையிட்டுத் தடுக்கவேண்டும் என்று தனது டுவீற்றர் பதிவில் அவர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளே அமைந்திருந்த போரில் உயிரிழந்தவர்களின் நினைவிடம் புல்டோசர் கொண்டு இடித்தழிக்கப்பட்ட சம்பவத்துக்கு கனடாவில் கண்டனங்கள் வெளியாகி உள்ளன. மக்களின் வரலாற்றை அழித்துத் துடைப்பது இன அழிப்பின் ஒரு பகுதியே என்று குறிப்பிட்டிருக்கின்ற கனடா பிரம்டன் நகர கவுன்சிலர் ஹர்கிரத் சிங், யாழ்ப்பாணச் சம்பவம் தொடர்பாக ஆழ்ந்த கவலையை தனது டுவீற்றர் பதிவில் வெளியிட்டிருக்கிறார்.

கனடாவின் அரசியல்வாதியும் ஒன்ராரியோ மாகாண சட்டமன்றத்தின் உறுப்பினருமாகிய விஜய் தணிகாசலம் இலங்கை அரசின் செயலை வன்மையாகக் கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். விஜய் தணிகாசலம் ஸ்காபுரோ றூஷ் பார்க் பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் கனடாவின் தமிழ் அரசியல் பிரமுகர் ஆவர்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இரவோடு இரவாக இடித்தழித்த செயல் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் கொதிப்பை மேலெழச் செய்துள்ளது. அதற்கு எதிராக சமூகவலைத் தளங்களில் கண்டனப் பதிவுகள் வேகமாகப் பரவி வருகின்றன. புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பலவும் நினைவிடம் அழிக்கப்பட்டதைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. (எ-இ)

# அடக்குமுறையை ஏவினாலும் உணர்வை விலங்கிடமுடியாது



## சீமான் தெரிவிப்பு

**சென்னை, ஜன.10**

**ஆறா ரணத்தையும், கொடும் பேரிழப்பையும் சந்தித்து நிற்கும் தமிழர்களைச் சீண்டும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக் கழத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடம் இரவோடு இரவாக இடித்துத் தகர்க்கப்பட்டுள்ளமை பேரதிர்ச்சி அளிக்கிறது.**

சிங்களப் பேரினவாதத்தால் நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்தக் கோரச் சம்பவம் வன்மையான கண்டனத்ததுக்குரியது இவ்வாறு தமிழகத்தின் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; போர் முடிந்து, அங்கு அமைதி திரும்பிவிட்டது என்றுரைத்தவர்கள் இத்தகைய அடையாள அழிப்புக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்? அன்றைக்கு யாழ் நூலகம் எரிக்கப்பட்டது, இன்றைக்கு யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள நினைவு மண்டபம் அழிக்கப்பட்டிருக்கிறது. ஒற்றை இலங்கைக்குள் சிங்களவர்களோடு இணைந்து தமிழர்கள் வாழ்கிறவரை, சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கீழ் இருக்கிற வரை எத்தனை ஆட்சி மாறினாலும் தமிழர்களுக்கு இதுதான் நிலை என்பதை இந்தச் சம்பவத்தின் வாயிலாக உலகத்தார் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எங்கள் மொழியைச் சிதைக்கலாம்;, இனத்தைச் அழிக்கலாம், உரிமைகளைப் பறிக்கலாம், நிலங்களை ஆக்கிரமிக்கலாம், அடக்குமுறையை ஏவலாம், ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடலாம், பயங்கரவாதிகளென பழிசுமத்தலாம் ஆனால், எங்கள் உணர்வுகளுக்கு எந்த வல்லாதிக்கத்தாலும், பேரினவாதத்தாலும் விலங்கிட முடியாது. என்றார். (எ-ம)

# தூபி அழிப்புச் சம்பவம் வேதனைக்கு உரியது!!

*பா.ஜ.க மகளிர் அணி தலைவி கவலை*

சென்னை, ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அழித்தமை வேதனைக்குரிய விடயம் என்று பா.ஜ.க தேசிய மகளிரணித் தலைவி வானதி சீனிவாசன் கவலை வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மேம்படுத்தும் முயற்சிகளே தேவை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது சமீபத்திய இலங்கை விஜயத்தின்போது தமிழர்கள் குறித்து கருத்து வெளியிட்டிருந்தார் எனவும் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ம-ற)

# நினைவுத்தூபி இடிப்பு கோழைத்தனமானதே !

*தமிழ்ப் பேரரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கண்டனம்*

சென்னை, ஜன. 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் கட்டியெழுப்பப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை ஒரே இரவில் இடித்துத் தள்ளியிருப்பது கோழைத்தனத்துடன் கூடிய காட்டுமிராண்டித்தனம் என்று தெரிவித்துள்ளார் தமிழ்ப் பேரரசுக் கட்சியின் செயலாளர் வ.கௌதமன்.அவரின் கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எப்பொழுதுமே நேர்மையற்ற, அறமற்ற முறையில் இனப்படுகொலை செய்யும் சிங்கள அதிகார வர்க்கத்துக்கு இந்தச் செயல் ஒன்றும் புதிதல்ல. முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை அழித்துவிட்டால் தமிழர்களின் மனதிலிருக்கும் நினைவுச் சுவடுகளை அழித்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். வடக்கிலோ, கிழக்கிலோ இருக்கின்ற எம் இனத்தின் இளைய தலைமுறையினரின் மனதிலிருக்கும் வலி மிகுந்த யுத்த வடுக்களை ஒருபோதும் அழிக்க முடியாது.

வரலாறு கூட சில நேரங்களில் மறைக்கப்படலாம் அறிவியலை ஒருபோதும் மறைக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது என்பதையும், ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்பதையும் சிங்கள ஆட்சியாளர் மனதில் நினைவில் வைக்க வேண்டும். என்றார். (எ-இ)

# நினைவுகளை என்ன செய்வீர்

நடிகர் கமல் ஆவேசம்

சென்னை, ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நேற்றுமுன்தினம் இரவு இடித்தழிக்கப்பட்டமைக்குக் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார் தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகரும் மக்கள் நீதி மையத்தின் தலைவருமான கமல்ஹாசன்.

தனது சமூக வலைத்தளங்களில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொத்துக்கொத்தாக அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை மறக்க முடியாது. சரணடைய வந்தவர்களையும் சாகடித்தது மறவாது. முள்ளிவாய்க்கால் நினைவிடம் என்பது வெறும் கட்டுமானம் கிடையாது. வரலாறு மாறாது. நினைவுச் சின்னத்தை இடித்தவர்களே, நினைவுகளை என்ன செய்வீர்கள்? - என்றுள்ளார். (ம)

# இலங்கை அரசின் மாபாதகச் செயல்

## தமிழக முதல்வர் எடப்பாடி கொதிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டமைக்கு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது கீச்சகத்தில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்டப் போரில் இரக்கமின்றிக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இரவோடு இரவாக இடிக்கப்பட்டமை பேரதிர்ச்சியை அளிக்கிறது.

உலகத் தமிழர்களைப் பெரும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ள இலங்கை அரசின் இந்த மாபாதகச் செயலுக்கும், அதற்கு துணைபோன யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கும் எனது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது. (ம-ற)

# விரும்பத்தகாத விளைவை இலங்கை சந்திக்க நேரும்

## தினகரன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 10

தமிழர்களின் உயர்வையும், உள்ளடக்கிய வளர்ச்சியைப் பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக இப்படி சர்வாதிகாரமாக நடந்து கொள்வது விரும்பத்தகாத விளைவுகளையே இலங்கைக்கு ஏற்படுத்தும் இவ்வாறு எச்சரித்துள்ளார் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் இரவோடு. இரவாக இடிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. இது கடும் கண்டனத்துக்குரியது.

இலங்கையின் பூர்வீக குடிகளான தமிழர்களின் உணர்வுகளோடு விளையாடும் இத்தகைய நடவடிக்கைகள் சரியானவையல்ல. தமிழ் மக்களின் எண்ணங்களில் நிறைந்திருக்கும் போராட்டத்தின் நினைவுகளை, சின்னங்களை அழிப்பதன் மூலம் அகற்றிவிட முடியாது.

தமிழர்களின் உயர்வையும் உள்ளடக்கிய வளர்ச்சியைப் பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக இப்படி சர்வாதிகாரமாக நடந்து கொள்வது விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும். இதனை இலங்கை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்' என்றார். (ம)

# இலங்கைத் தூதரகம் முற்றுகையிடப்படும்

## வைகோ எச்சரிக்கைத் தொனி



யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டதற்காக சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூண் இடிக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து எதிர்வரும் 11ஆம் திகதி சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறும். படுகொலையின் அடையாளங்கள்கூட இருக்கக்கூடாது என்பதற்காக நினைவு முற்றத்தை சிங்கள அரசு இடித்துள்ளது - என்றார். (ம-த)

## இன்றைய நாள்

**மேடம்:** பணம் வந்தாலும் சேமிக்கவில்லை என்று ஆதங்கப்படுவீர்கள். பழி வர வேண்டாம் என்றால் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பயணம் செல்ல நேரிடலாம். முயற்சியில் வெற்றி உண்டு.

**இடபம்:** மற்றவர்களுக்கு உதவி செய்து நற்பெயர் எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையின் முயற்சி மூலம் லாபம் கிடைக்கும். மற்றவர் பொருளைக் கையாளும்போது கவனமாக இருங்கள்.

**மிதுனம்:** மனச்சஞ்சலம் நீங்கி மகிழ்ச்சியும், நிம்மதியும் கிடைக்கும். உங்களைக் குற்றம் சொல்ல நினைப்பவர்கள் மாறுவார்கள். முன்பு வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள்.

**கடகம்:** வேலைச்சுமை குறையும். போராட்டமான நிலை மாறும். எந்தத் செயலையும் வேகமாக முடிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். சில விடயங்களில் அவசரமாக செயல்படத் தோன்றும்.

**சிம்மம்:** நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். பொறுமை வெற்றிக்கு வழிவகுக்கும். பொழுதுபோக்கு அதிகரிக்கும். சோம்பலைக் குறைத்து பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். எப்போதும் பணிவாக இருங்கள். உதாசீனப்படுத்தியவர்கள் உங்கள் உதவியை நாடி வருவார்கள். தடைப்பட்ட சுபமான விடயங்கள் எல்லாம் தானாகக் கூடிவரும்.

**துலாம்:** உயர் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். குழப்பத்துக்கு தீர்வுகாண நல்லவர்களின் உதவியைப் பெறுவீர்கள். குழப்பம், தடுமாற்றம், அவநம்பிக்கை ஆகியவை நீங்கும்.

**விருச்சிகம்:** உள்ளூரில் நல்ல விஷயங்கள் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். நண்பர்களுக்காக பஞ்சாயத்து விடயங்களில் ஈடுபடுவீர்கள். தொழிலில் சிறு மாறுதல்கள் செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**தனுசு:** பெற்றோர் எதிர்பாராத சாதனைகளை நீங்கள் செய்து காட்டுவீர்கள். உடல்நலம் காரணமாக விரக்தியில் இருப்பவர்கள் குணமடைவர். அலைச்சல், மருத்துவச் செலவு குறைந்து நிம்மதி வரும்.

**மகரம்:** மனதில் இருக்கும் குற்ற உணர்வில் இருந்து மீள்வீர்கள். இளைஞர்கள் சில சாதனைகள் செய்து புகழ் அடைவீர்கள். அலுவலகத்தில் உரிய கவனத்துடன் இருப்பது அவசியமாகும்.

**கும்பம்:** சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் முடிவுக்கு வரும். கவலைகள் தீர்ந்து மனம் விட்டு சிரித்துப் பேச ஆரம்பிப்பீர்கள். சொத்து சம்பந்தமாக திடீரென்று ஒருமித்த கருத்து ஏற்படும்.

**மீனம்:** வீட்டின் அமைப்பை மாற்றுவதன் மூலம் நன்மை ஏற்படும். பழைய வீட்டு உபயோகப் பொருள்களை விற்று வேறு வாங்குவீர்கள். பணியிடத்தில் உங்களின் சில செயல்கள் பாராட்டப்படும்.

# வவு. நகருக்கு இரு வாரங்களுக்குள் வந்த பொதுமக்கள் தொடர்புகொள்க

*சுகாதார சேவைகள் பணிமனை அறிவிப்பு*

**யாழ்ப்பாணம், ஜன. 10**

**கடந்த இரண்டு வாரங்களுக்குள் வவுனியா மாவட்டத்தின் நகர்ப் பகுதியில் உள்ள பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி மற்றும் மில் வீதிகளில் பொருள்கள் வாங்குவதற்கு சென்றவர்கள் யாவரும் தங்கள் பிரிவு சுகாதார மருத்துவ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பட்டுள்ளதாவது:

வவுனியா மாவட்டத்தின் நகர்ப் பகுதியில் உள்ள பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி மற்றும் மில் வீதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரிபவர்கள் 54பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே வவுனியா நகருக்கு மிகவும் அவசியமின்றி வருகை தருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். கடந்த இரண்டு வாரங்களுக்குள் மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருள்கள் வாங்குவதற்குச் சென்றவர்கள் யாவரும் தங்கள் பிரதேச சுகாதாரப் மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு தம்முடைய தகவல்களை தெரிவிப்பதுடன் கொரோனாத் தொற்றை அறிந்து கொள்வதற்கான பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ள முடியும்.

அவ்வாறு தகவல் வழங்குவதில் ஏதும் சிரமங்களை எதிர்கொள்பவர்கள் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர அழைப்பெண்ணான 021 222 6666 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் விவரங்களை தெரியப்படுத்துவீர்களாயின் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும், சமூகத்தையும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கான கடமையைச் செய்தவர்களாவீர்கள்.

வவுனியா மாவட்ட நகர்ப் பகுதியூடாக போக்குவரத்துச் செய்பவர்கள் வவுனியா நகர்ப்பகுதிக்குள் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள், என்றுள்ளது. (ஒ.5)

# பி.சி.ஆருக்கு ஒத்துழைக்காத கடைகள் மூடப்பட்டன

*யாழ்., வவு. நகரில் நேற்றுச் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் சில மூடப்பட்டன. பி.சி.ஆர். சோதனைக்கு ஒத்துழைக்க மறுத்தமையால் அவை மூடப்பட்டன என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். கடந்த வாரம் யாழ்ப்பாண நகர நடைபாதை அங்காடி வர்த்தகர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஓர் வர்த்தக நிலையத்தினர் மாத்திரம் ஒத்துழைக்கவில்லை. இந்த நிலையில் அங்கு பணியாற்றிய மூவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். கடைகளும் மூடப்பட்டன.

மேலும் வவுனியாவில் நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் ஹொரவப்பொத்தானை வீதி, மில் வீதி, கந்தசாமி கோவில் வீதி, முதலாம் குறுக்குத்தெரு, சூசைப்பிள்ளையார் வீதி என்பன பொலிஸாரால் முடக்கப்பட்டு அந்தப் பகுதி வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு ஒத்துழைப்பு வழங்காத வர்த்தக நிலையங்களை மூடும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். அங்கு கடமைபுரிபவர்கள் பி.சி.ஆர். பரிசோதனை செய்யும் வரை வர்த்தக நிலையங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் சுகாதார பிரிவினரால் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக ஒட்டப்பட்டு வருகின்றன. (ஒ.18,20)

# பி.சி.ஆர். பரிசோதனையின் பின் கடைகள் திறப்புப் பற்றி ஆராய்வு

*வவுனியா நகர பாடசாலைகள் நாளை திறக்கப்படாது*

வவுனியா, ஜன. 10

வவுனியா நகரில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகள் கிடைக்கப்பெற்றதன் பின்னரே வவுனியா நகரின் முடக்க நிலை தளர்த்தப்படும் என்று வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஸ்குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் 204 பேரிடம் நடத்திய எழுமாற்றுப் பரிசோதனையில் 54 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பான அவசர கலந்துரையாடல் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகரில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் பணிபுரிபவர்களின் சுகாதார நிலையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரை நகரின் சில பகுதிகளை மூடி வைத்திருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வவுனியா மருத்துவமனை சுற்றுவட்ட சந்தியிலிருந்து இறம்பைக்கும் மகளிர் பாடசாலை வரையான சந்தி, தமிழ் மத்திய மகா வித்தியாலயம் வரையான பகுதி மற்றும் காமினி மகா வித்தியாலத்தை உள்ளடக்கிய பகுதிகள் ஆகியன இன்றிலிருந்து நேற்றிலிருந்து மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன.

இதேவேளை மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படாத நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள், சதொச நிறுவனம் மற்றும் மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முதற்கட்டமாக பி.சி. ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனையில் ஈடுபடுபவர்கள் நாளை (இன்று) தொடக்கம் காமினி மகா வித்தியாலய மைதானத்தில் சந்தையை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வீதியோரங்களில் வியாபாரம் மேற்கொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு நகரில் அமைந்துள்ள வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் , சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம் மற்றும் ஆரம்ப பாடசாலை, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, காமினி மகா வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் ஆரம்பப் பாடசாலை ஆகிய ஏழு பாடசாலைகளை மறுஅறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்றார். (து10)

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

தலைமுடி வளரவேண்டுமா? பேன். பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி. இலாமிச்சை வேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா**


எடை கூட வேண்டுமா?. கணச்சூடா?. பலகீனமா?. ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?. மார்பு கூட வேண்டுமா?. உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### நவரட்ணம் கேசவராஜ்

(ஈழத்து திரைப்பட இயக்குனர்)

அரியாலையை பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஈழத்து திரைப்பட இயக்குனருமான நவரட்ணம் கேசவராஜ் நேற்று (09.01.2021)சனிக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - கனகாம்பிகை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற தில்லையம்பலம் - தனபாக்கியம் தம்பதியரின் மருமகனும். கமலராணியின் அன்புக் கணவரும். ஜனந்தன். குயிலினி. கோகிலன். பேராளன். டிலக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும். சியாமா - துரைரட்ணம். மஞ்சுளா - சேகரசேயோன் ஆகியோரின் அன்புச் சகோதரனும். ஜெயராணி. சஜீதரன். பங்கஜன். பவித்திரன். சேந்தன் ஆகியோரின் மாமனும். உத்தமராணியின் பெறாமகனும். கனகலிங்கம். சண்முகநாதன். சண்முகரட்ணம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் தற்காலிக முகவரியான No.31. மதவடி வீதி. சுதுலை வடக்கு மானிப்பாயில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல்: குடும்பத்தினர்**
077 916 2719

## மரண அறிவித்தல்

**மலர்வு** 07 . 01 . 1941



**உதிர்வு** 08 . 01 . 2021

### சிவசோதி பாலசுப்பிரமணியம்

(ஓய்வுநிலை எழுதுவினைஞர்)

யாழ்ப்பாணம் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் இல.618. மானிப்பாய் வீதி. ஓட்டுமடம். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசோதி பாலசுப்பிரமணியம் (C.S. பாலா) 08.01.2021 வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசோதி அகிலாண்டம் ஆகியோரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற விமல அருளேஸ்வரியின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் முத்துக்குமாரு (கனடா) பூலோகசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தசந்தன் (பொறியியலாளர்-அவுஸ்திரேலியா) வசந்தன் (Egait (Pvt) LTD) கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும். பிரியா (பல்வைத்தியர்-அவுஸ்திரேலியா) றமா (வங்கி அலுவலர்-கொமர்ஷல் வங்கி. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும். றெவின். சிவோன் (அவுஸ்திரேலியா). திவ்வியா. கஜானன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்: பா.வசந்தன்**
**077 230 0006**
**021 222 8033**

# எழுமாற்றான பரிசோதனையில் சாவகச்சேரி வாசிக்குத்தொற்று

யாழ்ப்பாணம், ஜன. 10
சாவகச்சேரி எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

242 பேருக்கு மருத்துவபீடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருவருக்குத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் ஒருவர் கொழும்பு சென்றுவரும் மந்துவிலைச் சேர்ந்த நபர். எழுமாற்றுப் பரிசோதனையிலேயே இவர் தொற்றாளராக இனங்காணப்பட்டார். தொற்றுக்கு உள்ளான இன்னொருவர் பருத்துறையைச் சேர்ந்தவர். பருத்தித்துறையில் ஏற்கனவே தொற்றுக்கு உட்பட்ட புலோலியைச் சேர்ந்த நபருடன் அவர் தொடர்பில் இருந்தவர். இவர் பண்டாரவளையில் ஆசிரியராக கடமையாற்றி 23ஆம் திகதி அங்கிருந்து இங்கு வந்துள்ளார். குறித்த நபர் பருத்தித்துறை கிராமக்கோட்டில் சலூன் ஒன்றுக்குச் சென்று வந்ததையடுத்து குறித்த சலூன் சீல் வைக்கப்பட்டதுடன் சலூன் உரிமையாளர் மற்றும் சலூனுக்குச் சென்றவர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்

(ம26)

**IT Training**

நீங்களும் Software, Web, Android Deveoper ஆகலாம்.
மேலதிகமாக Data Entry, Hardware, Networking,
IT Marketing பயிற்சிகளும் வழங்கப்படும்.

வேலைவாய்ப்பு சந்தர்ப்பத்துடன் கூடிய தொழிற்பயிற்சி.



C#, VB, Java, PHP, Android,
MongoDB, SQL Server, Access,
Flutter, Spring, Angular, React, Laraval,
HTML, CSS, JavaScript, Bootstrap, Wordpress...

நீங்களே முழுமையான Project செய்வதற்கான பயிற்சிகள்!
இலவச அறிமுக வகுப்புகளுடன் அடிப்படையிலிருந்து ஆரம்பம்.

DEWMAS Call, Viber, Whats App : 074 138 3368
Call : 075 022 6733
Tel : 021 315 2500 51, Amman Road, Nallur, Jaffna.

## மரண அறிவித்தல்

### திருமதி யோகராணி கனகரட்ணம்

**தோற்றம் : 19.02.1953** **மறைவு : 08.01.2021**



யாழ். இணுவிலை பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி கனகரட்ணம் 08.01.2021 வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும். கனகரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கம் பாக்கியலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஆவார். திரு.அருளானந்தம் (லண்டன்) செல்வராணி (அமரர்). திரு. பரமானந்தம். திரு.உதயகுமார் (லண்டன்). திரு. விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும். டாக்டர். அமிர்தகஜானன். திரு. செந்தூரன் (லண்டன்). செல்வி. அருள்ஜெனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் ஆரம்பமாகி நண்பகல் 12 மணியளவில் நிறைவுபெற்று பொக்கனை இந்து மயானத்தில் உடல் தகனம் செய்யப்படும்.

இந்த தகவலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் அறிய தருகின்றோம்.

**தொடர்பு:- 077 226 9895,**
**077 239 5523**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி குணலட்சுமி யோகசர்மா

காரைநகரை பிறப்பிடமாகவும். யாழ்ப்பாணம் வேம்படி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணலட்சுமி யோகசர்மா நேற்று (09.01.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அன்னமுத்து தம்பதிகளின் புதல்வியும். அமரர் யோகசர்மா அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற மாரிமுத்து அபூர்வரத்தினம் தம்பதிகளின் மருமகளும்.

வாசுகி (ஜேர்மனி). வளர்மதி (லண்டன்). சேந்தன் (கனடா). வானதி ஆகியோரின் அன்புத் தாயாரும். மகாதேவன். துரைசிங்கம். சௌதாமினி. நரேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும். நடராசா. விநாயகமூர்த்தி. ராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும். நர்மதன். பிரணவன். சகானன். மோகனன். அஞ்சனன். அக்சயன். சகானா. ஆரபி. சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் பொன்னம்பலம் வீதியிலுள்ள இல்லத்தில் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**க.விநாயகமூர்த்தி (சகோதரன்)**
**காரைநகர்.**

**077 088 6145**

## மன்னாரில் இருவருக்கு கொரோனா

மன்னார், ஜன. 10
மன்னார் எருக்கலம்பிட்டியில் மேலும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் மன்னார் எருக்கலம்பிட்டியில் ஐந்து பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதனையடுத்து எருக்கலம்பிட்டி தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்டது. கொரோனா நோயாளர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தனரென 298 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 202 பேரின் பி.சி.ஆர் அறிக்கை கிடைத்துள்ளது. அவர்களில் இரண்டு பேருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(த213)

## வீடு வாடகைக்கு

கந்தர்மடம் Damro Showroom பின் வீதியில் 3 பல்கலைக் கழக மாணவர்/தொழில்புரியும் ஆண்களுக்கும் மற்றும் கைதடியில் சித்தவைத்திய பெண் மாணவர்க்கும் தங்குமிடமுண்டு.

**078 567 9674, 075 372 5089**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த அத்த நட்சத்திரம் 4 ஆம் பாதம். பாவக் கிரகம் 27½ உள்ள விவாகரத்தான பட்டதாரி ஆசிரியருக்கு மணமகன் தேவை.

**076 051 6861**

## காணி விற்பனைக்கு

சுழிபுரம் சந்திக்கு அருகில் மானிப்பாய் காரைநகர் பிரதான வீதி உடன் உள்ள 6 பரப்பும் 3 குழியும் உள்ள காணி பரப்பு 21 லட்சம் ரூபாவிற்கு விற்பனைக்கு உள்ளது.

**077 773 2413**

யாழ் நகரில் இயங்கும் பிரபல

## விடுதியொன்றிற்கு

பின்வரும்

## வேலையாள்கள் தேவை

01. காவலாளி 02. சாரதி
03. தகவல் தொழில் நுட்பவியலாளர் (IT)
04. துப்பரவு பணியாளர்

**077 780 3203**

## யாழ் நகரில் உள்ள பிரபல உணவகத்துக்கு

நன்கு சமையல் அனுபவம் உள்ளவர் தேவை.

தகுந்த சம்பளமும் தங்குமிடவசதியும் கொடுக்கப்படும்

**076 353 6820**

## வீடு வாடகைக்கு / பண்ணைக்கு வேலையாள்கள் தேவை

**புங்கன்குளம்** வீதியில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. **நாரந்தனையில்** பண்ணைக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் விரும்பத்தக்கது.

**077 442 4240**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையமொன்றிற்கு கீழ்வரும் வேலைகளுக்கு பெண் வேலையாட்கள் தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

*Computer Billing *Accounts

**தொடர்பு: 077 419 5015**

## காணி விற்பனைக்கு

வவுனியா ஓமந்தை (A9 வீதி) கமநல சேவை நிலையத்திற்குப் பின்புறமாக இரண்டு ஏக்கர் மேட்டுக்காணி (அளிப்பு உறுதி)
பூந்தோட்டம் நாவலர் வீதியில் 4 1/2 பரப்பு மேட்டுக்காணி உடன் விற்பனைக்குண்டு

**076 868 0194**

## தொடர்புகொள்ளவும்

**மரணக் கிரியைகள்** மற்றும் **அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கு** எம்மை தொடர்புகொள்ளவும்

ச. ஸ்ரீராம் குருக்கள் **074 061 8739**

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஊர்கோழி குஞ்சுகள் : Rs 75/=
2-3 மாத குஞ்சுகள்,
காடை குஞ்சுகள் : Rs 25/=
வான்கோழி குஞ்சுகள் : Rs 390/=

**JERI Farm** திருநெல்வேலி
**077 354 9140/077 2741 206**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1989 இல் பிறந்த அரச வங்கி முகாமையாளராக கடமையாற்றும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 998 9656**

## வேலையாள்கள் தேவை

வரவேற்பாளர் தேவை (Receptionist) ஆண்,பெண் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **Gnanams Hotel**

**077 630 9947, 076 222 0632**

## சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்துக்கு வருகை தந்து மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை.

**AAA Gold Center - T.P: 076 568 4346**

## வாடகைக்கு

**Hotel and Resturant**
வாடகைக்குண்டு

**077 741 2713, 077 724 2427**

## சமையலாளர்கள் தேவை

Hotel ஒன்றிற்கு சமையலாளர்கள் தேவை முன் அனுவம் விரும்பத்தக்கது.

**077 741 2713, 077 724 2427**

## வீடு வாடகைக்கு

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக் குண்டு. அத்துடன் அறைகளும் உள்ளன.

**077 741 2713, 077 724 2427**

## வீடு வாடகைக்குத் தேவை

**யாழ்ப்பாணம், சாவகச்சேரி** ஆகிய நகரை அண்டிய பகுதி களில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 930 7774**

## பிரத்தியேக வகுப்புக்கள்

**ஆங்கிலம்**
**தரம்: 5 - 11** வரையான மாணவர்களிற்கு ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

**076 361 3059** யாழ்ப்பாணம்

## வீடொன்று வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் வீடொன்று வாடகைக்கு தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
**076 294 3805, 077 326 7769**

## ஒத்துமாறல்

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில் முகாமைத்துவ உதவியாளராக (பொது) கடமையாற்றுபவர் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவருடன் ஒத்து மாற விரும்புகின்றார்.

தொடர்புகளுக்கு-**077 5060476**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபாய்.

தொடர்புகளுக்கு: **077 334 1281**

## Personal Classes

Grade 10, 11 and A/L Maths Personal Classes உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
B.Sc (Hons) in Maths
பட்டதாரி ஆசிரியர்

**Contact Number 077 1666 297**

## மணமகள் தேவை

இந்து கௌரவக் குடும்பத்தில் 1983.10.28 இல் பிறந்த சொந்தமாக வீடும் தென்னந் தோட்டமும் உள்ள செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. பெற்றோர் மாத்திரம் தொடர்புகொள்ளவும்.


**070 271 3564**

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகம் மற்றும் வீட்டு வேலைகளுக்குமான கீழ்வரும் வேலையாட்கள் தேவை. தங்குமிட வசதி கவர்ச்சிகரமான சம்பளம், நிரந்தர தொழில் வாய்ப்பு.

1) உணவு பரிமாறுபவர்கள்
2) சமையல் பகுதி வேலையாட்கள் அனைத்துக்கும்
3) ரீமேக்கர்
4) மரக்கறி வெட்டுபவர்கள்
5) பில் கிளார்க்
6) முகாமையாளர்
7) வீட்டு மரக்கன்று வளர்த்து பராமரிப்பவர்.
8) சாரதி (தங்கிநின்று இலகுரகவாகனம் வயது 40க்கு மேல்)
9) அலுவலக உதவியாளர் (படித்த பெண்கள்)
10) தங்கி நின்று சமையல் செய்து கொடுக்கக்கூடிய (பெண்கள்)

**தொடர்பு:077 791 7753**
7/4, யாழ் வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.



## அவசர பணத்தேவையா? அல்லது அடகு வைத்த நகைகள் அறுதியாக போகின்றனவா?

F.A.Ads

எந்தவொரு வங்கிகளில் அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா 15000/= மேலதிகமாகவும்**
**70 சதமான அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு 0776 445322 இலக்கத்திற்கு WhatsApp மூலம் அனுப்பிவையுங்கள்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாளைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1982 இல் பிறந்த அரச உத்தியோக பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை. கிரகபாவம் 20½. நட்சத்திரம்-ரேவதி. உயரம் 5-2 அரச உத்தியோகம் விரும்பத்தக்கது. குறிப்பு மற்றும் புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம்.

**தொலைபேசி இல- 077 127 6260**
**Tel/ Viber - 077 325 5474**

## வேலையாள்கள் தேவை

**பூநகரியில்** அமைந்துள்ள
**தென்னை எஸ்டேட்**
ஒன்றிற்கு **தங்கி நின்று** வேலை செய்யக்கூடிய வேலையாள்கள் தேவை.
வயதெல்லை 18 - 55
சம்பளம்: பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்பு: **077 331 5400, 077 818 9450**

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

## Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

## STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Hotline: 0777-761 346**


**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1928



மறைவு 06 . 01 . 2021

### திரு. இராஜரட்ணம் தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற தலைமை, லிகிதர் (Chief Clerk) சுகாதாரத்துறை,
பழைய மாணவர் - நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை)

யாழ். காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் தர்மலிங்கம் 06-01-2021 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற இராஜரட்ணம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற தம்பையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியம்மாள் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற திசைவீரசிங்கம் அவர்களின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கணேசன் (கனடா), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), வத்சலா (சுவிஸ்), வசந்தி (இலங்கை), விஜியேந்திரன் (சுவிஸ்), சிறீதரன் (சுவிஸ்), யசோதா (கனடா), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரராணி, மாலினி, திருக்கைலாயவாசன், ஜனார்த்தனன் (வசந்தியா எலக்ரிகல்ஸ் - சுன்னாகம்), சரோயாதேவி, ரதிவதனி, சிறீசண்முகராஜா, சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயலட்சுமி, சுகிர்தலட்சுமி, காலஞ்சென்ற தவலட்சுமி, தவராஜசிங்கம், கிருபாலட்சுமி, கமலவேணி, திருக்கைலாயவாசன், யோகலட்சுமி, தவக்குமார், லோகநாதன், குகதாஸ், சுவேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாய் மாமாவும், கணேஷியா, அஜந்தன்- எழில், அகிலன், விஜய்நாத், வாஷினி, வினோத், திபாகர், திவ்யா, தினேயா,ஆர்த்தி-அனோஜன், அருண்பிரசாத், அபிர்ஷன், ஐஸ்வர்யா, கரிகஜன், நிஷானி, டயாளினி, சிவாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (10-01-2021) ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புஇலக்கம்:**
**ஜனார்த்தனன் வசந்தி**
**(076 991 9195)**

**தகவல்:**
**மனைவி மற்றும் பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

தோற்றம் . 10 . 08 . 1941



மறைவு . 09 . 01 . 2021

### ஏரம்பு தியாகராசா

(முன்னாள் ஆசிரியர், யூரி குறுப் தமிழ் கலவன் பாடசாலை, பசறை,
முன்னாள் அதிபர், யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு)

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 5ம் வட்டாரம், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஏரம்பு தியாகராசா அவர்கள் நேற்று (09.01.2021) சனிக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.ஏரம்பு (தலைமை ஆசிரியர்), தங்கம்மா அவர்களின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான அ.ந. தம்பிராசா (ஓய்வுபெற்ற லிகிதர், கிராம அலுவலகம் - புங்குடுதீவு) காமாட்சி ஆகியோரின் அன்பு மருமகனும், தி. யோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கலாநிதி (திருமதி) யசோதா (சிரேஷ்ட விரிவுரையாளர், இராசாயனவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) உருத்திரா (மருந்தாளர்-மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா), நடனசபேசன் (நிதி முகாமையாளர், Norwegion Peoples Aid-Afghanistan) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி சு.பிரபாகர் (சிரேஸ்ட ஆய்வு விஞ்ஞானி, கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனம் -கொழும்பு), உமா நந்தினி (மருந்தாளர், மாவட்ட பொது வைத்திய சாலை - வவுனியா), தரங்கா (IELTS Instructor) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஏ.ஜெகதீஸ்வரன் மற்றும் ஏ.சண்முகானந்தராஜா, ஏ. கணேசானந்த ராஜா, காலஞ்சென்ற முருகானந்தராஜா அவர்களின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற தவராசா மற்றும் சங்கர்ராஜா, து.நகுலேஸ்வரி, ஜெ.விக்னேஸ்வரி, ச.ராஜேஸ்வரி, க.ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்சீவ், மயூரி, அபிஜித், லயுக் சாயினி, அபிநயன், தர்கேஷ், கல்பேஷ், ரூபேஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.21/2, புகையிரத நிலைய வீதி (குளங்கரை வீதி), கொக்குவில் கிழக்கு கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (10.01.2021 ) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**யசோதா** - 0770 711 700
**உருத்திரா** - 077 340 5569
**சபேசன்** - +93 72810 5720

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 11 . 1956



மறைவு 06 . 01 . 2021

### துரைசிங்கம் மனோகரன்

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் மனோகரன் கடந்த 06.01.2021 புதன்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - ரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், குணமலர் (பபி) அவர்களின் அன்புக் கணவரும், அனுஜா, பானுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், Graham அவர்களின் அன்பு மாமனாரும், Dominic, Jemimah அவர்களின் அன்புப் பேரனும் ஆவார். சரவணபவானந்தம் (செல்லப்பா), சித்திரா, சுபத்திரா (லண்டன்), நிர்மலா, சிறீதரன் (லண்டன்), குணசேகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி பிற்பகல் 01.00 மணிக்கு** Divinity Funeral Care, Kenton Road, UK **இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக பிற்பகல் 4.00 மணியளவில்** Hendon Crematorium Holders, Hendon, UK **இற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.**


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்.
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
**கணேசலிங்கம்** CIC - மைத்துனர் - 077 772 5625
**தவச்செல்வி** செல்வம் - மைத்துனி - 077 823 8954
**நிர்மலா** சகோதரி - 077 557 6067

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 04 . 1946



மறைவு 09 . 01 . 2021

### தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரசாமி (குஞ்சரம்)

(கண்ணா ரொபி - கண்ணா கற்பூர உரிமையாளர்- மானிப்பாய்)

மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, தொண்டைமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரசாமி நேற்று (09.01. 2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற அரியரத்தின ஐயர் மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், சத்தியவாணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சண்முகராஜா, பொன்னம்பலம், கனகசபை மற்றும் நாகேந்திரம் (சுவிஸ்), சிவலிங்கம் (அவுஸ்திரேலியா), மனோரஞ்சன், காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அருமைச் சகோதரனும், லோகேஸ்வர ஐயர் - பரிமளகாந்தி, தியாச்சர ஐயர் - இரத்னசோதி (நோர்வே) செந்தீஸ்வர ஐயர் - வதனஶ்ரீ (பிரான்ஸ்), காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் புனிதவதி, விக்னேஸ்வரி, கீர்த்திராணி, சிவரூபி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் மங்களேஸ்வரி, ஒட்றி, காராளசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செல்வச்சந்நிதி**
**தொண்டைமானாறு**
T.P.: Viber 077 340 9384
077 319 5488

**தகவல்:**
**மனைவி.**

## மேலும் 535 பேருக்கு கொரோனா தொற்று!

இலங்கையில் நேற்றும் 535 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 44 ஆயிரத்து 89 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது (ம-22)



# ஈழத்துத் திரைப்பட இயக்குநர் கேசவராஜன் நேற்று உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜன. 10

ஈழத்தின் பிரபல திரைப்பட இயக்குநரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் 'நிதர்சனம்' நிறுவனத்தின் திரைப்பட உருவாக்கப் பிரிவுப் பணியாளருமான ந.கேசவராஜன் (வயது 59) மாரடைப்பால் நேற்று உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் சுதுமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அவரின் பூதவுடல் சுதுமலையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தயாரான முதல் வீடியோ முழுநீளத் திரைப்படமான தாயகமே தாகம், மரணம் வாழ்வின் முடிவல்ல ஆகிய திரைப்படங்களைத் தயாரித்ததோடு அவற்றில் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்தவர். அவரின் இந்த இரு படங்களையும் யாழ். திரையரங்குகளில் திரையிட நிதர்சனம் அனுசரணை வழங்கியிருந்தது. அன்னாரது முழுநீளத் திரைப்படமான பனைமரக்காடு 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற யாழ். திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அதனை இயக்கியதோடு அதில் முக்கிய பாத்திரத்தையும் ஏற்று நடித்திருந்தார். அந்தத் திரைப்படம் சர்வதேச அரங்கில் திரையிடப்பட்டது. அங்கு நடைபெற்ற சில திரையிடல்களில் அவர் நேரில் கலந்து சிறப்பித்திருந்தார்.

இவர் 2009ஆம் ஆண்டுக்கு முந்திய காலத்தில் திசைகள் வெளிக்கும், பிஞ்சுமனம், கடலோரக்காற்று, அம்மா நலமா போன்ற பிரபலமான போர்க்காலத் திரைப்படங்களை இயக்கியிருந்தவர். திரைப்படத்துறையில் தமிழர்கள் தடம் பதிக்கவேண்டும் என்று பல்வேறு மாணவர்களுக்கும் தனது அனுபவங்களை பயிற்சிகள் ஊடாக கற்றுக்கொடுத்தவர். போருக்குப் பின்னரும் தொடர்ந்தும் திரைப்படத் துறையில் செயற்பட்ட அவர், பெருமளவிலான குறும்படங்களை இயக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### கொரோனாச் சாவு 229ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் நால்வர் உயிரிழந்தனர். கல்கிஸை பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய பெண் ஒருவரும், காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடைய ஆண் ஒருவரும், வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய ஆண் ஒருவரும், ஒபநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ம-22)


## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கௌண்டன், அரச உயர் பதவியில் உள்ளோர், அரச உத்தியோகத்தர், ஆசிரியர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப்பொருத்தமாக உடன் தரப்படும்.

021 222 9306,
077 138 7596

5, ஐந்தாம் ஒழுங்கை பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளருமான காலாநிதி (திருமதி).யசோதா பிரபாகர் அவர்களது அன்பு தந்தையாரான

**திரு. ஏரம்பு தியாகராசா**

**(ஓய்வு பெற்ற அதிபர், யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை)**

அவர்கள் நேற்று 09.01.2021 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை, இல : 21/2 கொக்குவில் கிழக்கு கொக்குவில். யாழப்பாணம் என்ற முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## கண்ணீர் அஞ்சலி




**திரு. ஏரம்பு தியாகராசா**

நேற்று (09.01.2021) சனிக்கிழமை இறைபதமெய்திய ஏரம்பு தியாகராசா அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு.ந.பத்மநாதன் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**இராசையா சிவசுப்பிரமணியம்**

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவசுப்பிரமணியம் கடந்த (08.01.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு மு.ப 10.00 மணியளவில் தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 540 1288** — **தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



**கதிர்காமநாதர் வைரவநாதர் (சந்திரா)**

டச்சு வீதி, மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமநாதர் வைரவநாதர் நேற்று (09.01.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் மயூரன், மதனிகா (சுவிஸ்), மயூரதன், மதிவண்ணன் (சுவிஸ்), மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனிசியன், அன்சிகா ஆகியோரின் பேரனாரும், கனகசிங்கம் (கனடா) அமரர் கதிரேசுவின் தம்பியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 01 . 1956



இறப்பு 05 . 01 . 2021

**திரு. சின்னையா தவயோகம் (யோகர்)**

கண்டாவளையை பிறப்பிடமாகவும் இணுவில், கனடாவையும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னையா தவயோகம் (05.01.2021) அன்று காலமானார்.

அன்னார் கண்டாவளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னையா ராசம்மா தம்பதியரின் மகனும், இணுவில் மேற்கு வட்டுவினியை சேர்ந்த காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் தங்கம்மாவின் மருமகனும், ராஜகுமாரி (வரதா) யின் பாசமிகு கணவரும், துவாரகா (கௌசி), நிரோஜிதா, துலக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நாச்சியப்பன், சமித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரித்தித், சாய்மீனாட்சி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2021) காலை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 546 8086
077 8532 377
077 7579 708

தகவல்:
குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவலைகளில்...!

**10.01.2021**

**பேராசிரியர், கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம்**



முன்னாள் விரிவுரையாளர் - ஆங்கில இலக்கியம், தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழகம். பேராசிரியர்- எதியோப்பியப் பல்கலைக்கழகம், ஆபிரிக்கா.)

கென்னடி!
வாழ்க்கையில் விலைமதிக்க
முடியாத பல அநுபவங்களை
ஆழ்மனதில் இருந்து
வெளிக்கொணர்ந்தாய்!




அணையாத தீபமென ஒளிர்ந்தாய்!
அழகான வாழ்க்கைப் பாடங்களை
அறிவால் அள்ளிக் குவித்தாய்!
வாழ்க்கை என்பது நிலவு போன்றது
தேய்பிறை வளர்பிறை என வந்தாலும்
வாழ்வில் அனைத்தும் ஒரு நாள்
மறைந்து போகும் என நிரூபித்தாய்!
காலத்தை வென்று அன்பர்கள்
கருத்தினுள் நிறைந்து வாழ்கின்றாய்!
மறைந்தது பல ஆண்டுகள்
மனதினுள் உறைக்கவில்லை.
இன்று போல நிழலாடுகின்றாய்
என்றும் நினைவில் உறைந்து நில்.
சிதம்பர நடேசன் பாதத்தில் சுகித்திரு.
சித்தத்தை வைத்து இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

"சண்முகனின் வாசம்",
நீலிப்பந்தனை, காரைநகர்.

குடும்பத்தினர், நண்பர்கள்,
உறவினர்கள், ஆசிரியர்கள்,
புலம்பெயர்வாழ் நண்பர்கள்.

# 15ஆம் ஆண்டு நினைவலைகள் 10ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் செல்லையா வீரசிங்கம்**

**திதி: 10.01.2021 துவாதசி**

**அமரர் திருமதி இராசமணி வீரசிங்கம்**

ஆண்டுகள் கோடி ஓடி மறையும்
அழிந்திடுமோ உம் நினைவலைகள்
நாம் வாழ்ந்திடும் காலம் முழுவதும்
எம் நெஞ்சினில் நிலையாய் வாழ்வீர்
மாண்டவர் மீண்டிலர்
என்பது உண்மை
உம் காலடிகளை தொழுதே
வாழ்கிறோம்.

உங்கள் நினைவுகளுடன்
மகன் சிறிதரன்
ஸ்ரீராம் ஜுவல்லர்ஸ்
கொணிக்கா

இல.14, சிறிவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

எகிறிய மீற்றர் வட்டி

## தவறான முடிவெடுத்து முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 10

மீற்றர் வட்டிக்குப் பணம் வாங்கி அதைத்திரும்பச்செலுத்த முடியாததால் 60 வயதான முதியவர் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்தார்.

ஆடியபாதம் வீதி திருநெல்வேலியைச் சேர்ந்த நபரே உயிரிழந்தவராவார். மரண விசாரணையை ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## திலீபனின் அண்ணா அசோகன் மறைவு!



ஒட்டாவா, ஜன. 10

உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின்அண்ணா அசோகன் கனடாவில் நேற்று உயிரிழந்தார்.

அவருக்கு வயது 61. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக நேற்று அதிகாலை 3.30 மணியளவில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)


### உடனடி வேலை வாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு யாழ். வவுனியா. மன்னார். கிளிநொச்சி. முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் விற்பனைத்துறையில் அனுபவமுள்ள ஆர்வமுள்ளவர்கள் ஆண்கள் தேவை.

TP-0761124145, 0777130025

### விற்பனைக்கு

யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் ரக்கா லேனில் 10 பரப்பு காணியும் வீடும். யாழ் நாவலர் வீதியில் இலுப்பையடி சந்திக்கு அண்மையில் 3பரப்பில் அமைந்த காணியும் புதிய மாடி வீடும். யாழ் பிறவுண் வீதியில் 3பரப்பில் அமைந்த காணியும் புதிய மாடி வீடும். யாழ் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 3 பரப்பில் காணியும் வீடும். யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

T.P:- 077 723 2535

### விற்பனை/ தேவை

தேங்காய் எண்ணை நல்லெண்ணை ஊற்றும் மரச்செக்கு. மில் உபகரணங்கள் விற்பனைக்கு. மேலும் பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு: 077 174 6101

### வாகனம் விற்பனைக்கு

பாவனையில் உள்ள Toyota Town AC வாகனம் (52-xxxx) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 352 9435

### விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில் 4 பரப்புக் காணியும் ஆறு பரப்பு காணியும். யாழ் பலாலி வீதியில் 6 பரப்புக் காணியும் 4 பரப்புக் காணியும் வீடும். யாழ் K.K.S. வீதியில் நாச்சிமார் கோயிலடிக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும். யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் கோயில் வீதியில் 6 பரப்புக் காணியும் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு

தொடர்பு - 0777 232 535

### வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு
★**விற்பனை உதவியாளர்**
வயது 18 - 32
தேவைப்படுகின்றனர்.
நேர்முகத்தேர்வு :-12.01.2021-15.01.2021
10 am - 4 pm

தொடர்புகளிற்கு: 077 623 1295
இல.175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

### வேலையாள் தேவை

எமது நிறுவனத்திற்கு மர அரிவு இயந்திரம் (Wood Mizer) இயக்குபவர் தேவை. பழகுபவர்களும் தொடர்பு கொள்ளலாம் (A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது).

தொடர்பு:- ஆர்க் தளபாட நிலையம்
இல.35, கொட்டைகாடு ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு. (பஸ்டிப்போ அருகாமை)
T.P: 077 300 1763

### இரசாயனவியல் (Chemistry)

பிரபல பாடசாலையின் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் தனி மற்றும் குழு வகுப்புகளாக தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 021 8959

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 1965. சிம்மம். உத்தரம் முதலாம் பாதம். கனடா பிரஜாஉரிமை. விவாகரத்து பெற்றவரும். தற்போது இலங்கையில் அரசசேவையில் பணிபுரியும் MBBS டாக்டருக்கு சூரி/செவ்வாயுள்ள மணமகள் தேவை.

T.P: 0772537860

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் 13 பரப்பளவு உள்ள காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும்.

தொடர்பு : 077 772 2215

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி விவேகானந்த நகரில் 04 அறைகள் சமையலறை. 02 ஹோல் உடன் அமைந்த பெரிய வீடு நிறுவனங்களுக்கு. அல்லது குடும்பங்களுக்கு வாடகைக்கு உடன் விடப்படும்.

தொடர்பு: 0777 111 716

### வேலையாள் தேவை

**மிக்சர், இனிப்பு வகைகள்**
மற்றும் **பைக்கிங் வேலை**
தெரிந்தவர்கள் தேவை. **(பெண்கள்)**

074 055 0567

### வேலைவாய்ப்பு

நல்லூர். கொக்குவிலில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு
★நல்லூர் - மேற்பார்வையாளர்.
வயது- 30 - 45
★கொக்குவில் - விற்பனை உதவியாளர்
வயது 18-32
★சமையலாள் - வயது 40 ற்கு மேல். தேவைப் படுகின்றனர்.

தொடர்புகளிற்கு: 077 477 3481

### வேலையாட்கள் தேவை

அரியாலையில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பொதிகள் செய்யக் கூடிய பெண் பிள்ளை தேவை.

தொடர்புகளிற்கு:
076 841 2883, 077 881 7317


### பெறுகை அறிவித்தல்

**வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையினை நடாத்துதல் மற்றும் உணவு வழங்கலுக்கான கேள்வி கோரல்**

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்குகின்ற சிற்றுண்டிச் சாலையினை 01.02.2021 - 31.12.2021 வரையான காலப்பகுதிக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் நடாத்துவதற்கும் உணவு வழங்குவதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. படிவக் கட்டணம் - ரூபா 500.00 (மீளளிக்கப்படாதது) கேள்வி வைப்பு - ரூபா 5.000.00 (மீளளிக்கத்தக்கது) படிவ விநியோகம் - 11.01.2021 - 25.01.2021 திகதி வரை (அலுவலக நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை) விண்ண ப்ப முடிவு -26.01.2021ம் திகதி 15.00 மணி

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல 021 226 0161)

அ. பார்த்திபன்
வலயக் கல்விப் பணிப்பா
வலயக கல்வி அலுவல
வடமராட்சி

## அதிகாரத் தரப்புக்களின்...

ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு, பொலிஸார் குவிக்கப்பட்டு, சிறப்பு அதிரடிப் படையினரால் போராட்டக்காரர்கள் முற்றுகையிடப்பட்டனர். அச்சுறுத்தல் மிரட்டல்களுக்கு அடிபணியாத போராட்டக்காரர்களை, கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை காண்பித்து பொலிஸார் எச்சரித்தனர். அதனையும் தாண்டி சுமார் 20 மாணவர்கள் தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தமிழர்களின் கல்விக் கருவூலமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த, இனவழிப்பின் சாட்சியான - உயிரிழந்த ஆத்மாக்கள் உறங்கும் இடமான - தமிழர்களின் ஆழ்மனது வடுவின் வெளிப்பாடான- முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, இரவோடு இரவாக -கரவாக இடித்து மண்ணோடு மண்ணாக்கப்பட்டது.

ஈழத் தமிழர்கள் மாத்திரமல்லாது, உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களும் வேதனையால் துவண்டனர். இந்த கொடும் பாதகச் செயலுக்கு எதிராக சீற்றமுற்றனர். இதனால் பல்கலைக்கழக சூழலில் நேற்றுமுன்தினம் இரவிலிருந்தே பெரும் பதற்றமான சூழல் நிலவியது.

பாதுகாப்புத் தரப்பினர் அங்கு குவிக்கப்பட்டதால் மேலும் பதற்றம் அதிகரித்தது. பல்கலைக்கழக நுழைவாயில் பூட்டப்பட்டது. அரசியல் தரப்பினர், மாணவர்கள், பொதுமக்கள் இணைந்து நுழைவாயிலில் போராடினர்.

'ராணுவம் உள்ளே, மாணவர்கள் வெளியே' என்ற கோசத்தை எழுப்பினர். அத்துடன் இடித்தழிக்கப்பட்ட தூபி மீளவும் அமைக்கப்படவேண்டும் எனவும், பாதுகாப்புத் தரப்பினர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற வேண்டும் எனவும் கோரினர். சிறிது நேரத்தில் பொலிஸார், போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாதுவிடின் கொரோனா தடுப்புச் சட்டத்துக்கு அமைவாக அவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று எச்சரித்தனர். அங்கு கூடியிருந்தவர்களைப் பொலிஸார் வீடியோ எடுத்தனர்.

'நாம் எமது சமூகத்தின் மீதான அக்கறை கொண்டவர்களாகவும் நாம் வன்முறையாளர்கள் அல்ல என்பதனை சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறுவதற்காகவும் அடக்கு முறைகளுக்கு எதிராக வன்முறைகளை வெளிக்காட்டாமல் அமைதியாக போராட்டத்தை இடைநிறுத்துகின்றோம். இங்கு யாருடைய ஆட்சி நடைபெறுகின்றது என்பதும், அவர்கள் என்ன நினைத்தாலும் செய்துவிடுவார்கள் என்பதும் அனைவருக்கும் தெரியும். இங்கிருக்கும் அனைவரின் நலன்கருதியும் எமது சக மாணவர்களின் நலன் கருதியும் இந்த முடிவை எடுத்துள்ளோம்' என்று கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் இதன் பின்னர் அறிவித்தார்.

ஆனாலும், பல்கலைக்கழக மாணவர்கள் 20பேர் வரையில் தொடர்ந்தும் அங்கிருந்து போராடினர். அவர்கள் நேற்று இரவு கொட்டகை அமைக்க முற்பட்ட போது அங்கு வந்த பொலிஸார் தடுக்க முயற்சித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு வருவதைக் கண்டதும் மெதுவாக அகன்றனர்.

இரவிரவாக மழைக்கு மத்தியிலும், கடும் குளிருக்கு மத்தியிலும் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். (ஒ,த,5,7,20,26,ரி4)

## தமிழர் தாயகத்தில்...

அழிக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் தழுவிய முழு கதவடைப்புக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட எட்டு தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் மற்றும் மதத் தலைவர்கள் கூட்டாக அழைப்பு விடுத்தனர். தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்கள், மதத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சியில் நடைபெற்றது. அங்கு சென்ற யாழ் .பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைக்கப்பட்டமைக்கு நீதி கோரி எதிர்வரும் 11ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய ரீதியிலான கதவடைப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அனைத்துத் தரப்பினரும் கலந்துரையாடலில் இருந்தமையால் உடனடியாகவே மாணவர்களின் கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு ஊடகச் சந்திப்பில் கட்சிகளின் பிரதிநிதிகள் சார்பில் எம்.ஏ. சுமந்திரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் மாணவப் பிரிநிதிகளும் கூட்டாக கோரிக்கை விடுத்தனர். அதன் அடிப்படையில் நாளை திங்கட்கிழமை வடக்கு கிழக்கு தழுவியதாக முழு கதவடைப்பு போராட்டத்துக்கு பேருந்து உரிமையாளர்கள், வர்த்தகர்கள் உள்ளடங்கலாக அனைவரையும் ஒத்துழைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஒ,26)

## முழு அடைப்புக்கு...

ரீதியில் இடம்பெறும் கதவடைப்பு போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் முழுமையான ஆதரவளித்து வெற்றியடைய வைக்க வேண்டுமென அறைகூவல் விடுத்துள்ளார் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா. (ஒ,5)

## புலிகளை...

தியோ நினைவேந்துவது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெரும் குற்றமாகும். விடுதலைப் புலிகளை நினைவேந்தும் தூபிகள் வடக்கில்எங்கெல்லாம்இருக்கின்றனவோ அவற்றை முழுமையாக இடித்தழிக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக்கழத்தில் அமைக்கப்பட்டிருந்த தூபியைத் துணைவேந்தர் இடித்து அகற்றியுள்ளார். இது அவரின் தற்றுணிவை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதிப்போரில் உயிரிழந்த பொதுமக்களை நினைவேந்தும் தூபி என்ற பெயரில் அங்கு அமைக்கப்பட்டிருந்தது புலிகளை நினைவேந்தும் தூபியே இதுவாகும். இதைப் பல்கலைக்கழத்தில் வைத்திருப்பது சட்டவிரோதமானது. அதற்கமைய நல்லதொரு தீர்மானம் எடுத்து அந்தத் தூபியைத் துணைவேந்தர் இடித்துள்ளார்.

மூவின மாணவர்களின் நன்மை கருதி இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்திருப்பார் என நான் நினைக்கின்றேன். எனவே, மாணவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் கல்வியைத் தொடர வேண்டும், என்றார். (ஒ,5,22)

## போர்க்காலச்....

என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு உண்டு. இதை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. அந்தவகையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ். பல்கலைக்கழத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த போர்க்காலச் சின்னமான நினைவுத்தூபியை துணைவேந்தர் அகற்றியுள்ளார். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். பல்கலைக் கழகத்தில் நினை வுத் தூபி உடைக்கப்பட்ட விவகாரத்தை தமிழ்க் கட்சியினர் தமது சுயலாப அரசியல் பரப்புரைக்கு பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இதற்கு மாணவர்கள் எவரும் துணைபோகக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும்.

பல்கலைக்கழகம் ஒரு கல்விக்கூடம். சகல இனத்தைச் சேர்ந்த மாணவர்களும் ஒற்றுமையாகக் கற்கும் இடம். அங்கு அரசியலுக்கு இடமில்லை.

யாழ். பல்கலைக்கழகம் ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கியது. கடந்த அரசின் காலத்திலும் அந்த எண்ணத்தில் சில மாணவர்கள் அங்கு செயற்பட்டார்கள். பல்கலைக் கழக வளாகத்தில் வைத்து விடுதலைப் புலிகளைப் பகிரங்கமாக நினை வேந்தினார்கள். அந்தக் காலம் மாதிரி இப்போதைய காலத்தை மாணவர்களும், தமிழ் அரசியல்வாதிகளும் எடைபோடுவது தவறானதாகும், என்றார். (ஒ,5,22)

## மாணவர்களை...

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினை வுத் தூபி இடித்தழிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய உணர்வுடன் அன்று தொட்டு இன்று வரை செயற்பட்டு வரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களை மீண்டும் சீண்டிப் பார்க்கும் வகையில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட அராஜக செயலே இது. இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அங்கு உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களின் உறவுகள் ஆகியோரின் நினைவாகவே யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களால் நினைவுத் தூபி அமைக்கப்பட்டது. இதன் புனிதத் தன்மையைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பல்கலைக்கழக நிர்வாகம், இந்தத் தூபியை இரவோடிரவாக இடித்தழித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பாதுகாப்புத் தரப்பு உட்பட்ட பல்வேறு தரப்புக்களால் தொடர்ந்து முன்வைக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாகவே நினைவுத்தூபியை இடித்தோம் என்று துணைவேந்தர் கூறியுள்ளார். ஆனால், நினைவுத்தூபியை அகற்ற முடிவெடுத்தது பல்கலைக்கழக துணைவேந்தர்தான் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார். நினைவுத்தூபி இடிக்கப்பட்டமைக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அப்படியெனில் இந்த நினைவுத்தூபி யாரின் உத்தரவின் பேரில் இடித்தழிக்கப்பட்டது? ஒட்டுமொத்த தமிழர்களையும் பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ள இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை நடைபெற வேண்டும். உரிய தரப்பினர் பொறுப்புக்கூற வேண்டும். இந்தச் செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இது தற்போதைய நிலைமையில் தேவையற்ற செயல். ஒரு குழப்பத்தை ஒரு புதிய பிரச்சினையைத் திட்டமிட்டு உருவாக்குகின்ற செயல், என்றார். (ஒ,22)

## பல்கலை தூபி...

தூபி இடிக்கப்பட்டமைக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை, பல்கலைக்கழக நிர்வாகத்தின் தீர்மானம் என்று தெரிவித்துள்ள அவர், அந்த விடயத்துக்கும் இராணுவத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவம் இந்த விடயத்தில் தலையிடப் போவதில்லை. பல்கலைக்கழகத்துக்குள் அமைதியின்மை ஏற்பட்டு, அதனைப் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாத பட்சத்தில் மாத்திரமே இராணுவம் களமிறங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,த)

## சர்வமும்...

தரப்பின் கையில் உள்ளது என்று துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் துணைவேந்தரை நேற்றுக் காலை சந்தித்தனர். அதன்போதே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார் என்று, மாணவர் ஒன்றியத் தலைவர் இ.அனுசன் ஊடகங்களுக்கு கூறினார். 'முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடித்தழிக்குமாறு மேலிடங்களிலிருந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாலேயே அது உடைக்கப்பட்டது. அதனை திரும்பக் கட்டுவதோ, பல்கலைக்கழகப் பகுதியிலிருந்து இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வெளியேறுவது தொடர்பில் என்னால் கூறமுடியது' என்றும் துணைவேந்தர் கூறினார் என்று ஒன்றியத் தலைவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்தது எனவும் அந்தத் தூபி அகற்றப்படவேண்டியதொன்று என்றும், அந்தத் தூபியை அகற்றியிருக்காவிட்டால் ஏனைய தூபிகளையும் அகற்றியிருப்பார்கள் என்றும் துணைவேந்தர் நேற்றைய தினமும் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,த,26)

## பல்கலை...

வரும் விடுவிக்கப்பட்டனர்.

தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒவ்வோர் ஆள் பிணையில் யாழ்ப்பாணம் நீதிமன்று அவர்களை விடுவித்தது. அத்துமீறி யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்தமை மற்றும் கலகம் விளைவித்தனர் என்று இரண்டு குற்றச்சாட்டுகள் மாணவர்கள் இருவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டன. மாணவர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன் மன்றுரைத்து பிணை விண்ணப்பத்தை முன்வைத்தார். நீதிவான் பிணை வழங்கினார். வழக்கு தவணையிடப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்படும் தகவல் அறிந்து பல்கலைக்கழகம் முன்பாக கூடியபோதே அவர்கள் கைதானமை குறிப்பிடத்தக்கது. (ஒ,த,26)

# பழைய கோத்தாவை மக்கள் எதிர்பார்க்கின்றனர்

## அவரே நேற்றுத் தெரிவிப்பு

அம்பாறை, ஜன. 10

விடுதலைப் புலிப் பயங்கரவாதிகள் என்னை இலக்குவைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தினர். அதைச்செய்த பயங்கரவாத தலைவருக்கு நேர்ந்த கதியை மக்கள் அறிவார்கள். நந்தசேன கோத்தாபய ராஜபக்ச அல்லது கோத்தாபய ராஜபக்ச என்ற எந்த ஆளுமைக்கு ஏற்பவும் செயற்படத் தயார். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

அம்பாறை, உஹனவில் உள்ள லாத்துகல கிராமத்தில் இடம்பெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சியில் நேற்று பங்கேற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். தவறு செய்தவர்களைத் தண்டிப்பது சட்டத்தின் கடமையாகும். அதில் தலையிட்டு முந்தைய அரசு செய்ததைப் போல அரசியல் பழிவாங்க தான் தயாராக இல்லை. மக்களை தவறாக வழிநடத்தாமல் நியாயமான அரசியலில் ஈடுபடுமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

மகா சங்கத்தினர் உட்பட மக்கள் தான் ஜனாதிபதியாக வருவதற்கு முன்பு இருந்த பாதுகாப்பு செயலரின் வகிபாகத்தை எதிர்பார்க்கின்றனர் எனவும் குறிப்பிட்டார். (ஒ.இ)

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கோண்டாவில் இராச வீதிச் சந்தியில் கோண்டாவில் வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

**077 288 0152**
**077 805 1655**
**077 505 8561**

### வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ் நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வேலைசெய்ய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

**076 564 6282**

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள **இலத்திரனியல் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் (ஆண்/பெண்), சாரதி, மணிக் கூடு திருந்துநர், பழக விரும்புவோர்** தேவை.

**070 304 3633, 074 103 6285**

### 999 வியாபாரத் தொடர்புகள்

(தொழில் முகவர்)

உங்களுடைய சொந்த, வணிக தேவைகளுக்கான மனித வழங் களைப் பெறலாம்.

**ஆட்சேர்ப்புச் சேவை**
Eg:-அலுவலக ஊழியர்கள்

**மனித வலு வழங்குதல்**
Eg:- கட்டுமான ஊழியர்கள், துப்பரவு பணியாளர்கள்

நிரந்தர தற்காலிக ஊழியத்தை வழங்குதல்

நாம் அரச பதிவு செய்யப்பட்ட நிறுவனம், ஒப்பந்தங்களால் கட்டுப்படுத்தப்பட்ட பின்புலம் ஆய்வு செய்யப்பட்ட திறன் கொண்ட மனித வளங்களைப் பெறலாம்.

தொடர்புகளுக்கு: 077 440 1606
www.999businesscontacts.com
Team@999businesscontacts.com

16, பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் மேற்கு கட்டுடை சந்தியில் இருந்து நவாலி வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக. தரகர் தேவையில்லை.
(பரப்பின் விலை 5 லட்சம்)

**074 075 4204**
**077 623 4204**

### வீடு வாடகைக்கு

பலாலி வீதி திருநெல்வேலி (விவசாய பண்ணை, அம்மாச்சி உணவகம் முன்பாக) விசாலமான வீடு. களஞ்சியசாலை மற்றும் நிறுவனங்களுக்கு உகந்தது.

மாதவாடகை 40000/- (நாற்பதாயிரம்)
முற்பணம் 500,000/- (ஐந்து இலட்சம்)

**தொடர்பு: 077 978 9571**

### மின்னிணைப்பாளர் தேவை

மின்னிணைப்பில் அனுபவம் உள்ளவர்களும் வேலை பழக விரும்புபவர்களும்
தொடர்புகொள்ளவும்

**077 723 8292**

### IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் **IELTS** (Academic and General), A1 UK Exame (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். Guarnteed to 7.5 in IELTS Exame

**Online Classes**
**Jaffna College**
**Ungraduate Department**

**Please contact:**
**Tel:077 780 3970 / 074 007 1970**

### விற்பனையாளர்கள் தேவை

கிளிநொச்சியில் மக்கள் வங்கிக்கு முன்பாக இருக்கும் **நியூ ஆனந்தா நகைமாளிகைக்கு** விற்பனையாளர்கள் தேவை. ஆண்கள், பெண்கள் இருபாலாரும் விரும்பத்தக்கது (நேரில் சமுகமளிக்கவும்)

**நியூ ஆனந்தா நகைமாளிகை**
A9 **வீதி, கிளிநொச்சி.**

### பிரத்தியேக வகுப்பு

**தமிழ் மொழியும் இலக்கியமும்**
**தரம்: 6 - 11**

**தமிழ் இலக்கிய நயம்**
**தரம்: 10 - 11**

*தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்*

- அலகு ரீதியான மாதாந்த பரீட்சை
- தவணை பரீட்சை என்பன நடைபெறும்

**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
ஆசிரியர் : S. **ரகுபதி**

**077 938 9478**

### பொருளியற் கல்லூரி

**நாவலர்றோட்** **யாழ்ப்பாணம்**
K.K.S **றோட்** **சுன்னாகம்**
BARATHY - **சித்தங்கேணி**

எமது மூன்று நிறுவனத்திலும் வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன


**ZOOM CLASS**

**A/L 2021,2022**
**கலை, வர்த்தகப் பிரிவுகள்**

குறிப்பு:
***வெளிமாவட்ட மாணவர்கள் கவனத்திற்கு***
**பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் ஆரம்பித்ததும்** ZOOM CLASSES A/L 2021, 2022 பிரிவினருக்கு பரீட்சைக்கு செல்லும் வரை மாணவர்கள் நன்மைகருதி தொடர்ந்து நடைபெறும் **இலங்கையின்** எந்த மாவட்டத்திலிருந்தும் தொலைபேசி ஊடாக **இணைந்து** கொள்ளமுடியும்

**மேலதிக விவரங்களுக்கு: Director**

**077 376 3511**






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2051
மார்கழி : 26
ஞாயிற்றுக்கிழமை (10.01.2021)
சிகரம் : 30

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

புல்லாகிப் பூடாகிப் புழுவாகித் துடிதுடிக்க தமிழ்க்குடியை
பொல்லாதன செய்து கொத்தாகக் கொன்றதை – கல்லாக்கி
கசிந்துருகும் கண்ணீரோடு நினைவெலாம் ஏந்தியதை
பொசிந்திட்ட பதவிக்காய் இடித்தார் இழியோர் அறி!

கொரோனாச் சித்தர்



# ஆமி வேந்தர்களின் காடு

ஆதித்த கரிகாலன்

மின்குமிழ்களை அணைத்துவிட்டு சொந்த வீட்டிலேயே திருடித்தின்னும் வளர்ப்புப் பூனையொன்றைப் போல யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மத்திய வளாகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை- நினைவேந்தல் தூபி இடித்துடைத்து அகற்றப்பட்டிருக்கின்றது. வளாகத்தின் பொறுப்பதிகாரி என்ற வகையில் "சட்டவிரோத கட்டடங்களை"அகற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்புரையை தான் நிறைவேற்றியதாகவும் ஆர்வக்கோளாற்றில் வாசலருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை (மாணவர்கள் உட்பட) கையாளுகின்ற விதத்தில் கையாளுவேன்" என்றும் இந்த வருடத்தின் ஆகப் பொறுப்புமிக்க பதிலுரைத்துவிட்டு உறங்கிப் போனார் துணைவேந்தர். மாணவர்களும்- தன்னெழுச்சியாக திரண்ட பொது மக்களும்தமிழ் அரசியல் தலைவர்களும் விடிய விடிய பல்கலைக்கழக பிரதான வாசலில் இருந்தனர். பேயரசிடமிருந்து பதில் பூச்சியம். இராணுவமயமாக்கலை வெட்கமில்லாமல் அமுல்படுத்தும் ஆகப்பிந்திய நாடு என்ற பெருமை ஸ்ரீ லங்கா மாதாவுக்குண்டு.

தமிழர்களின் இனவிடுதலைப் போராட்டத்தை - ஆயுத ரீதியான ஒடுக்குமுறைக்கு உட்படுத்திய யுத்த வெற்றியாளர்களின் குடும்பத்தினருக்கும் இன்னும் அவர்களின் மூன்று தலைமுறைகளுக்கும் சிங்கள தேசக்காவல் உரிமையை அறுதியுறுதி எழுதிக் கொடுத்துள்ள பௌத்த சிங்களப் பெரும்பான்மை மக்களின் மனங்கோணாமல் ஆட்சிபுரிய வேண்டுமாயின் அதற்கான ஏகத்தெரிவாக முடிந்திருப்பது பிரகடனப்படாத 'இராணுவ ஆட்சி' ஒன்றே தான். சிறுபான்மையினரான தமிழர்கள்- முஸ்லிம்கள் ஆகிய இரு வேறு அச்சுறுத்தும் சக்திகளிடமிருந்து சிங்கள தேசம் தேடும் ஒரே நல்லாட்சித் தெரிவு- இராணுவ ஜனாதிபதி- இராணுவ அமைச்சரவை இராணுவ நிர்வாகம்- இராணுவ ஆட்சி. இந்த அறிவு வறட்சியுடைய முரட்டுத் தீர்மானத்துக்கு சிங்கள மக்கள் அனுபவிக்கப் போபவை தனியான பெரும் பட்டியலிலிருந்தாலும் , தற்காலிக இனஒடுக்கலுக்கு உள்ளாகும்சிறுபான்மைச் சமூகங்களின் வேதனையும் - ஆற்றாக் கொடுமைகளும் - அவர்கள் அழும் கண்ணீரும் தான் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் குரூரப் பசியாற்றும் சோளப் பொரிகள். தொடர்ந்தும் ' ராஜபக்ச' குடும்பத்துக்கே வாக்குச் சீட்டில் மைபூசும் மந்தைகளாக பெரும்பான்மைச் சிங்கள மக்களின் மனங்களைப் பெட்டி கட்டி வைத்திருக்க வேண்டுமாயின் இராணுவ ஆட்சியின் 'சீன மொடல்' திட்டமுன்மொழிவுகளை செயற்படுத்த வேண்டியது கட்டாயம்.

இராணுவ மயமாக்கலின் பாதக விளைவுகளை கேள்வி கேட்கும் சொற்ப வீதமுள்ள சிங்கள ஜனநாயகவாதிகளின் ஆகக் குறைந்த நியாயங்களையும் படுகொலை செய்ய வேண்டுமாயின், ஏற்கனவே தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் 'இலங்கை இராணுவம்' என்ற மீயுயர் மனிதாபிமானக்கழகம் சம்பாதித்து வைத்துள்ள கொலை வெறிக் குருதிப் பசிப் பெயரை கொஞ்சம் கொஞ்சமாக புனிதப் பூச்சுக் கொண்டு தீந்தையிட்டு மறைக்க வேண்டும்.

மிகச் சுலபமாகச் சொல்வதானால் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலாப் பயணம் வரும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தவறாமல் வரும் நல்லூரிலுள்ள தனியார் ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்துக்கு முன்னால் திலீபன் நினைவுத்தூபி ஏன் அங்கிருக்கக் கூடாதோ, அதே சம காரணத்துக்காகத்தான் மெல்ல மெல்ல மாணவர் எண்ணிக்கையில் பெரும்பான்மையாகிக் கொண்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடுவில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியும் இருக்கக் கூடாது! மே 18 நினைவேந்தலும் நடக்கக் கூடாது!

முக்கியமாக படித்துக் கொண்டிருக்கின்ற அல்லது கல்வியறிவின் காரணமாக வழக்கமான பௌத்த சிங்கள மனோநிலையிலிருந்து கூர்ப்படைந்து ஆகக் குறைந்த சமத்துவ சிந்தனையுடனாவது சிந்திக்க ஆரம்பிக்கின்ற சிங்கள மக்கள் சமூகமொன்று எதிர் காலத்தில் உருவாகுமானால் - அன்றைய மக்களும் இன்றைய இளைஞர்களுமாயிருக்கின்ற சிங்கள இளஞ்சமூகம் தப்பித் தவறியும் இத்தீவின் சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்பட்ட ,இன்னமும் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற மனிதகுலத்துக்கு எதிரான அநீதிகளை தட்டிக் கேட்காமல் இருக்க வேண்டுமாயின் ,காலத்தினால் எச்சமாக காணப்படும் பௌத்த- சிங்களப் பேரினவாதப் போர்வெறியின் குருதிச் சுவடுகளை முற்றிலும் இல்லாதொழிக்க வேண்டாமா?

அரசமைப்புக் கோட்பாடுகளில் மையவாக்கச் சிந்தனைகள் ஜனநாயகத்துக்கு எதிரானவையென துறை சார்ந்து சொல்லப்படுவன. அதிகாரம் ஓரிடத்திலேயே குவிந்து கிடப்பது- மையவாக்கம் எனப் பொருள் கொள்ளப்படும். மன்னராட்சி/ சர்வாதிகாரம் ஆகிய நம்பியார் காலத்து 'டெக்னிக்குகள்' மையவாக்கச் சிந்தனைகளுடையவை. 'மீள்மையவாக்கம்' என்பது அதிகாரக் குவிப்பை பரம்பலடையச் செய்வது - நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகாரங்கள் இந்த வகைக்குரியவை- மையத்திலிருந்து மீள்பவை.

இவ்வாறான மீள் மையவாக்க சிந்தனைகள், ஜனநாயகக் காப்பு மூலம் அரசமைப்புப் படமாக்கப்படுவதன் காரணமாக தனது நாட்டின் சிறுபான்மையினரிடமும் சென்று சேரும் சொற்ப ஆதாரங்கள் பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்கு மாறானது - என்று தலையால் நின்று நிரூபிக்கும், தற்போதைய இலங்கை போன்ற அரசுகள் ஜனநாயகப் பண்புகளை முற்றியும் புறந்தள்ளி 'மையவாக்கம்' தேடுவது தேச அமைதியின் சாவுமணி எச்சரிக்கையே.


இராணுவ வலுவாக்கல் மூலம் இலங்கையின் ஆட்சியதிகார கட்டமைப்புக்களை மையவாக்கம் செய்யும் பேரினவாத சிந்தனை வறட்சியில் தமிழர்களின் எதிர்ப்புக் குரல்கள் வெறும் சிறுதுளிகளே. நன்கு கட்டமைக்கப்பட்ட சிறுபான்மை இன ஒடுக்கலையும் இனவழிப்பையும் கச்சிதமாக நிறைவேற்றிவரும் 'பக்ச' சகோதரர்களிடம் கொடுக்கப்பட்ட தங்களது கடிவாளங்களுக்காக பேரன்புடைய சிங்களச் சகோதரர்கள் வருந்தும் நாள் விரைந்து வரும். சீன மேலாதிக்கத்துக்கும் சீன மொழித் தேசியத்துக்கு எதிராக இலங்கையின் தமிழ்த் தேசிய மக்களிடம் சிங்களச் சமூகம் உதவி கேட்கும் தருணம் வரை எதுவுமே மாறாது.

அதுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர், வடக்கு கிழக்கு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத் தலைவர்கள், அரச ஒட்டுக் குழுக்களின் அங்கத்தவர்கள், பௌத்த சிங்கள பேரினவாத தேசியக் கட்சிகளின் தமிழ் முகவர்கள் போன்ற விடம் பூசிய அம்புகளின் பிழைப்புவாதத்தை கெடுக்காதிருப்போம். பாவம் அவர்களுக்கும் பசிக்குமில்லையா?



சஞ்சீவி

10 ஜனவரி 2021



# ஓராண்டுகால ஆட்சி ஒரு மதிப்பீடு

நிலாந்தன்

ஜனாதிபதியால் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட சில அபிவிருத்தி நடவடிக்கைகளை சில அமைச்சர்கள் அரைவாசி அளவுக்குக்கூட நிறைவேற்றத் தவறியிருக்கிறார்கள். இந்த நிலைமை இப்படியே தொடர்ந்தால் ஒவ்வொரு அமைச்சுக்கும் அபிவிருத்திக்கான மேலதிக செயலாளர்களாக மூத்த படை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்". மேற்கண்ட தொனிப்படக்கூறியிருப்பவர்.ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி ஜெயசுந்தர. கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதியின் செயலகத்தில் நடந்த அமைச்சுக்களின் செயலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.


இதேவேளை ஜனாதிபதி ஏற்கனவே ஒவ்வொரு மாவட்டச் செயலர் பிரிவுக்கும் அபிவிருத்திக்கான மாவட்ட இணைப்பாளர்களாக படை அதிகாரிகளை நியமித்திருக்கிறார்.மாவட்டச் செயலர்களின் திறனற்ற திருப்தியற்ற நிர்வாகம் காரணமாகவே இவ்வாறு 25 படை அதிகாரிகளை ஜனாதிபதி மாவட்ட இணைப்பாளர்களாக நியமித்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

கொவிட் 19 நோய்த்தொற்றுச் சூழலுக்குள் அதிகாரத்தை அதிகம் மத்தியில் குவித்த நாடுகளில் ஒன்றாகவும், குறிப்பாக அதிகரித்த அளவில் படைமயப்படுத்தப்பட்ட ஒரு நாடாகவும் இலங்கை காணப்படுகிறது. ஒரு நோய்த்தொற்றுச் சூழலை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கோத்தாபய ராஜபக்ச தன்னை மேலும் பலப்படுத்தி வருகிறார். சிங்கள ஊடகவியலாளரான குசல பெரேரா கூறுவதுபோல படைத்தரப்புக்கும் ராஜபக்சவுக்கும் இடையிலான உறவு சிமெந்தால் கட்டப்பட்ட ஒன்று. எனவே ராஜபக்சக்கள் தங்களைப் பலப்படுத்துகிறார்கள் என்றால் அது இன்னொரு விதத்தில் படைத்தரப்பை பலப்படுத்துகிறார்கள் என்று பொருள்.

நாட்டில் இப்பொழுது கொவிட் 19 சூழலைக் கையாள்வதற்குஉருவாக்கப்பட்ட விசேட செயலணியின் பணிப்பாளராக ஒரு படைத்தளபதியே இருக்கிறார். இவர் அமெரிக்காவால் பயணத்தடை விதிக்கப்பட்ட ஒருவர். அதேபோல பாதுகாப்பு அமைச்சு உட்பட மொத்தம் ஐந்து அமைச்சுக்களின் செயலர்களாக ஓய்வுபெற்ற படைப்பிரதானிகளே உள்ளார்கள். இதைத் தவிர ஊடகங்களில் நோய்த்தொற்று தொடர்பான அல்லது நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்ச்சிகளில் படை அதிகாரிகளே மருத்துவர்களுடன் அமர்ந்திருந்து கருத்துக் கூறுகிறார்கள். ஒரு வைரசுக்கு எதிரான யுத்தம் நாட்டில் நடக்கின்றது எனவும் ஏற்கனவே விடுதலைப்புலிகளை வெற்றி கொண்ட ஒரு படைத் தரப்பு வைரஸுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கின்றது எனவும் ஒரு தோற்றம் கட்டி எழுப்பப்படுகிறது. ஏற்கனவே அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த எமக்கு வைரசைத் தோற்கடிப்பது ஒரு பெரிய காரியம் அல்ல என்ற தொனிப்படக் கூறியிருந்ததை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.



போர்க் குற்றம் தொடர்பிலும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலும் அரசாங்கத்தின் படைத்தரப்பை குற்றம் சாட்டும் சில மேற்கத்திய நாடுகளின் தூதுவர்கள் அதே படைக்கட்டமைப்பின் பிரதானிகள் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் அவர்களோடு உரையாட வேண்டிய உத்தியோகபூர்வ தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இதன் மூலம் அரசாங்கம் மேற்கு நாடுகளுக்கு ஒரு கூர்மையான செய்தியை வெளிப்படுத்த விரும்புகிறது.எந்தப் படைக்கட்டமைப்பை நீங்கள் விசாரிக்க வேண்டும் என்று கூறுகிறீர்களோ அதே கட்டமைப்பின் பிரதானிகள்தான் இப்பொழுது நாட்டில் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடுதான் நீங்கள் உரையாட வேண்டும். அதாவது அவர்களை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். இது மிகத் தெளிவான ஒரு செய்தி.



முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்"நாட்டின் முழுச் சிவில் நிர்வாகமும் இராணுவமயப்படுகிறது" என்று அண்மையில் கூறியிருக்கிறார்.

இவ்வாறாக கடந்த ஆண்டு முழுவதிலும் கோத்தாபய ராஜபக்ச எதை அதிகமாகச் செய்திருக்கிறார் என்று தொகுத்துப் பார்த்தால் முதலாவதாக, அவர் படைத்தரப்பை தண்டிக்கப்பட முடியாத ஒரு தரப்பாக அல்லது தண்டனைவிலக்களிக்கப்பட்ட ஒரு தரப்பாக மாற்றும் உள்நோக்கத்தோடு படைப் பிரதானிகளுக்கு முக்கிய பொறுப்புகளை வழங்கி வருகிறார். இதன்மூலம் மேற்கத்தைய நாடுகள் அவர்களை மறைமுகமாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைமையை ஏற்படுத்துகிறார்.

இரண்டாவதாக, நாட்டின் சிவில் நிர்வாகக்கட்டமைப்பை முன்னெப்போதையும் விட அதிகரித்த அளவில் படைமயப்படுத்தி வருகிறார்.

மூன்றாவதாக, தமிழ் மக்களுக்கு எதிராக கிழக்கில் தொல்லியல் செயலணி மேய்ச்சல் தரை விவகாரம் போன்றவற்றில் நீண்டகால நோக்கில் திட்டமிட்டு செயல்படுகிறார்.

நான்காவதாக,முஸ்லிம்களுக்கு அச்சமூட்டும் விதத்தில் நாட்டை நிர்வகித்து வருகிறார். இலங்கைத்தீவின் வரலாற்றில் முஸ்லிம்களின் பண்பாட்டுரிமைகள் முன்னெப்பொழுதும் இந்த அளவுக்கு மறுக்கபட்டதில்லை.

மேற்கண்ட நான்கு நடவடிக்கைகளையும் தொகுத்துப் பார்த்தால் அவை நான்கும் ஒரே புள்ளியில் சந்திப்பதைக் காணலாம். எப்படியென்றால், அவர் தனக்கு வாக்களித்த தனிச் சிங்கள வாக்காளர்களைக் கவரும் விதத்தில் நாட்டை நிர்வகித்து வருகிறார்.படைத்தரப்பைப் பலப்படுத்துவதன் மூலமும் படைத் தரப்பை தண்டனை விலக்களிக்கப்பட்ட ஒரு தரப்பாகக் கட்டிஎழுப்புவதன் மூலமும் தனிச் சிங்கள வாக்காளர்களைத் திருப்திப்படுத்தலாம். அதேபோல தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராக நிர்வாக நடைமுறைகளை தீவிரமாக்குவதன் மூலம் தனிச் சிங்களவாக்காளர்களைத் திருப்திப்படுத்தலாம்.

அவர் நினைத்தது போலவோ அல்லது கெஹலிய ரம்புக்வெல கூளுரைத்ததைப் போலவோ கொவிட் 19 உம், புலிகளும் ஒன்றல்ல என்பதைக் கடந்த ஆண்டு எண்பித்திருக்கிறது. அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி,சமூக நெருக்கடி, உளவியல் நெருக்கடி போன்றவற்றை திசை திருப்ப அவருக்கு இது உதவும். எப்படியென்றால் கொவிட் 19 இன் விளைவுகளிலிருந்து பெரும்பான்மை சிங்கள பௌத்த வாக்காளர்களைத் திசை திருப்ப தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒரு தலைவராகத் தன்னைக் கட்டமைத்து வருகிறார். இதன் தொடர்ச்சியாகவே அடுத்த ஜெனிவாத் தொடரையும் அவர் கையாளப் போகிறாரா?

ஜெனிவா கூட்டத் தொடரும் அதிகம் உணர்ச்சிகரமானது.கொவிட் 19 இன் சமூகப் பொருளாதார உளவியல் விளைவுகளிலிருந்து சிங்கள-பௌத்த பெரும்பான்மையின் கவனத்தைத் திசை திருப்ப அது அவருக்கு உதவும். அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

இம்முறை ஜெனிவா கூட்டத்தொடரை வேறு யாரையும் அனுப்பி எதிர்கொள்வதே நல்லது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார் என ஒரு தகவல் உண்டு. ஏனெனில் வரும் கூட்டத்தொடரில் அரசாங்கத்துக்கு எதிரான நிலைமைகள் அதிகமாக இருக்கின்றன என ஒரு பொதுவான அவதானிப்பு உண்டு. தமிழ்த் தரப்பிலும் ஒரு பகுதியினர் மத்தியில் அவ்வாறான ஓர் எதிர்பார்ப்பு உண்டு.

ஆனால் ராஜபக்சக்களைப் பொறுத்தவரை அது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். ஏனெனில் உள்நாட்டில் கொவிட்-19இன் விளைவாக ஏற்பட்டிருக்கும் சமூகப் பொருளாதார உளவியல் நெருக்கடிகளிலிருந்து சிங்கள-பௌத்த பெரும்பான்மையின் கவனத்தைத் திசை திருப்புவதற்குஜெனிவா ஒரு நல்ல சந்தர்ப்பம். அதிலும் குறிப்பாக மாகாணசபைத் தேர்தலை வெற்றிகரமாகக் கடக்க அது உதவக்கூடும். ஏனெனில் மாகாணசபைத்தேர்தல் நடக்குமாக இருந்தால் இந்த அரசாங்கத்துக்கு கடந்த தேர்தல்களில் கிடைத்ததைப் போல பிரமாண்டமான வெற்றி கிடைக்கும் வாய்ப்புகள் குறைவு என்றே பரவலாக நம்பப்படுகிறது. கொவிட்-19இன் தொகுக்கப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் உளவியல் விளைவுகள் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் அரசாங்கத்துக்கு எதிராகத் திரும்பியிருக்கிறார்கள். மஹரச் சிறைச்சாலை வாசலில் பொலிஸாரின் கால்களில் விழும் ஏழைத் தாய்மாரின் கண்ணீரில் அது தெரிகிறது. மஞ்சள் இல்லாத சமையலறைகளிலும் அது தெரிகிறது.முஸ்லிம்கள் மத்தியிலும் அதே நிலைமைதான். எனவே மாகாணசபைத் தேர்தல் என்று ஒன்று நடந்தால் அதில் முன்னைய ஜனாதிபதித் தேர்தலின் போதும் பொதுத்தேர்தலின் போதும் பெற்ற அதேயளவு வெற்றியை இம்முறை பெறுவது கடினமாக இருக்கலாம் என்று ஓர் அவதானிப்பு தென்னிலங்கையில் உண்டு.

(23ஆம் பக்கம் பார்க்க)

# சிவ வேடதாரி

## சைவக் கோயில்களில் பூவரசம் இலை அமர்ந்த விபூதி, சந்தனம், குங்குமத்தின் இன்றைய நிலை



### மரபுரிமைகளைப் பறைதல்

- வேண்டான் நம்பி


சிவசின்னங்கள் யாவை? என நாவலர் அவரது சைவ வினாவிடையின் அங்கமாகிய விபூதியியலிலே கேட்டு, சிறுவர்களுக்கு சிவசின்னங்களில் முதன்மையான விபூதி பற்றிப் போதித்தார். அவரது போதனைமுறையை அடியொற்றி சைவசமயப் பாடப்புத்தகங்களும் இடைவிடாது அதே கேள்வியையும், விடையையும் திரும்பத் திரும்பக் கேட்டுப் பதிலும் சொல்கின்றன.. சிவசின்னத்தில் முதன்மையான விபூதி 'புனிதமான சாம்பல்' (திருநீறு) எனப் பொருள்படுவது.. புராணிக ரீதியாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் அதனுடைய இடம் சைவசமயத்தில் முக்கியமானது. அது 'சுந்தரமாவது' மட்டுமல்ல - 'மந்திரமாவதும்' 'வானவர் மேலதும்' என சைவசமய அடியவர்களால் 'துதிக்கப்படுவது'. அது 'சுடலைப் பொடி பூசியனான' சிவனின் முதன்மைச் சின்னமும் - குறியீடும் ஆகும். விபூதி அணியும் மேற்படி வழக்கமானது, பெரும்பாலும் மூத்த சைவப் பிரிவான கபாலிகத்திடம் இருந்து வந்திருக்கவேண்டும். ஏனெனில் கபாலிகர்கள் அடிப்படையில் சுடலையாடிகள்.


இதேநேரம், திருநீற்றை 'திரிபுண்டரமாக' (முக்குறியாக) அல்லது 'உத்தூளனம்' எனும் பரவிப் பூசுதல் எனும் முறையிலோ அணிய வேண்டுமென சைவசமயச் சாத்திரநூல்கள் கூறுகின்றன. 'நீறு இல்லா நெற்றி பாழ்' என்ற முதுமொழிக்கிணங்க நெற்றியை விபூதி பூசுதலுக்கான பிரதேசமாகவே சைவ சமயம் இட ஒதுக்கீடு செய்து வைத்துள்ளது. அதே சமயம் ஆறுமுகநாவலர் சைவத்திருவுடலைக் கட்டியமைக்கும் பிரதான காட்சிப் பொருளாக விபூதியையே கண்டார்.

இதன்வழி சைவ சமயத்தவர்கள் பலநூறு வருடங்களாக விபூதி தரித்தலைத் தமது சமய பண்பாட்டு வாழ்வின் பிரதான பகுதியாகக் கொண்டிருக்கிறார்கள். அதேவேளை அதனை உடல் உபாதைகளுக்கான ஒரு மாமருந்தாகக் கொண்டு வாயிற்போட்டு 'சிவ சிவா' எனக்கூறி மெல்லுபவர்கள் பலரை இன்றும் காணலாம். அது கோமயம் என நன்நாமம் சூட்டப்பட்ட மாட்டின் சாணத்தில் இருந்து தயாரிக்கப்படுவது. சுமார் 50 வருடங்களுக்கு முன்புவரை விபூதியை வீடுகளிலேயே தயாரிப்பர். என்னுடைய சிறு பராயத்தில் என்னுடைய தாய்வழிப் பேர்த்தியார் சாணகத்தை தட்டிக் காயவைத்து வறட்டியாக்கிப் பின்னர் நெருப்பிட்டு எரித்து திருநீற்றை எடுப்பதைப் பலவருடங்களாகப் பார்த்து இருக்கிறேன். எங்களது வீட்டில் மட்டுமின்றி, அப்போது ஏறத்தாழ அனைத்து சைவசமயத்தவர் வீடுகளிலும், கோவில்களிலும் இச்செயற்பாடு பெரு வழக்காய் இருந்தது. இன்று இல்லாமற் போன பலவற்றைப் போல, அவ்வழக்கத்தையும் இன்று பெரும்பாலும் காணமுடியவில்லை; அதுவும் காணாமற்போய்விட்டது. அதற்குப் பதிலாக இன்று கடைகளில் பழனிமுருகன் அடிவாரத்து ஜவ்வாது விபூதிகள் தொடக்கம் உள்ளூர் விபூதிப் பொதிகள் வரை தாராளமாகக் கிடைக்கின்றன.

ஆனால், இவை கோமயத்தில் செய்யப்படுபவை அல்ல என்பது ஒன்றும் இரகசியமல்ல.. அவை உமி. கோதுமை மா முதலான இன்னோரன்ன மூலப்பொருள்களால் ஆக்கப்படுபவை. நறுமணம் வேண்டி இரசாயனங்கள் கலக்கப்பட்டவை. இதனால் சருமத்துக்கும் உடலின் பிற பாகங்களுக்கும் தீங்கு பயப்பவை. அதன் சமய சமூக ரீதியான அடிப்படைகள் எதுவும் அதன் உற்பத்தியாளர்களுக்கு முக்கியமானதல்ல. உற்பத்தியாளர்களுக்கு மட்டுமல்ல அதனை 'பூசுவதும் வெண் நீறு' என துதித்துப் பூசும் அடியவர்க்கும் இல்லை என்பதுதான் இதிலுள்ள முரண்பாடு. திருநீறு மட்டுமல்ல சந்தனத்தின் நிலையும் இதுதான். முன்நுதல் புறணியின் (Prefrontal Cortex ) வெம்மையைப் போக்கிக் குளிர்ச்சி தரும் சந்தன மரப்பொடி போய், அதற்குப் பதிலாக மரவள்ளிக்கிழங்குப் பொடி முதல், மேலும் அதற்கு வாசனையும் நிறத்தையும் தரவேண்டி இரசாயனப் பதார்த்தங்கள் கலந்து செய்யப்படும் ஒன்றாக அது மாறிவிட்டது. அதுபோலவே மஞ்சள் , வெண்காரம், படிகாரம், கஸ்தூரி மஞ்சள் முதலியவற்றின் இணைப்பால் உருவாக்கப்படும் குங்குமமும் அதன் மூலப்பொருள்களை விடுத்து. செயற்கை இரசாயனங்களால் தயாரிக்கப்படுகிறது. குங்குமம் வைக்கும் பலர் இதனால் நெற்றி கறுத்தல் மற்றும் சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்குக் கூட ஆளாகின்றமையைப் பரவலாகக் காணமுடிகிறது.







**பசு மாட்டு சாண வறட்டி**
**சாண வரட்டி - பூவரசமிலையில் விபூதி**

மேற்படி பிரசாதங்கள் மட்டும் வீழ்ச்சி அடையவில்லை. அத்துடன் இம் மூன்றையும் ஈழத்துச் சைவக்கோவில்களில் பெரும்பாலும் பூவரசம் இலைகளில் வைத்து பிரசாதமாகத் தரும் மரபும் இழக்கப்பட்டு வருகிறது. (கோவில்களைப் பொறுத்து சில வேளை இவ்விலைகள் மாறுவதுண்டு). இன்று மிக அருந்தலாகவே பூவரசம் இலையேறிய விபூதிப் பிரசாதத்தைக் காணமுடிகிறது. ஆனால், இலைகளுக்குப்; பதிலாக இன்றைய ஈழத்துக் கோவில்களில் பிளாஸ்ரிக் உறைகள் அல்லது அச்சடிக்கப்பட்ட காகிதங்களில் விபூதிப் பிரசாதங்கள் பொதியிடப்படுகின்றன. சிலவேளை கோவில்கள் தம் பெயர்களை அவற்றில் அச்சிட்டுத் தம் 'விலாசத்தையும்' பறைசாற்றுகின்றன. அவற்றின் புதிய பகட்டுக்கு இலைப் பிரசாதங்கள் சிறப்பினைத் தரா போலும்.

தென் இந்தியாவில் திருச்செந்தூர் முருகன் கோவிலில் பன்னீர் இலையில் தரப்படும் 'இலை விபூதி' கண்கண்ட மருந்தாகப் போற்றப்படுவதுடன். அக்கோவிலின் அடையாளமாகவும் தனித்துவமாகவும் இன்றுவரை பேணிப் பாதுகாக்கப்படுகிறது.

'வான்பூங் குடசம்' என சங்ககால இலக்கியமான குறிஞ்சிப்பாட்டு சுட்டும் தாவரமே இன்று பூவரசு என அழைக்கப்படுகின்றது என கருதப்படுகிறது. அத்துடன் யாழ்ப்பாணத்து தாவர மரபில் அது தனியிடம் வகிப்பது. வேலிக்கால யாழ்ப்பாணத்தின் முக்கிய மான வீட்டு மரமாகவும் (dome stic tree) அது காணப்பட்டது. இவ்விதமான வரலாற்று நீட்சியுடையதும், இயற்கை மரபுரிமை மற்றும் பண்பாட்டு மரபுரிமைச் சின்னமாகவும் இருக்கும் பூவரசைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியவர்களாலேயே அது ஒதுக்கப்பட்டு வருகிறது என்பது தமிழ் பண்பாட்டுக் குழுக்களுள் உள்ள இரண்டக நிலைமைகளின் வெளிப்பாடு எனக் கொள்ளலாமா?

இந்தநிலை மாற்றங்கள் அடிப்படையில் மூன்று வகையான பிரச்சினைகளை சமூகத்தில் உருவாக்கியுள்ளன. இதில் முதலாவதும் முக்கிய மானதும், ஈழத்துச் சைவமரபுரிமை அடையாளங்களின் அழிவு மற்றும் அழிப்பாகும். அதாவது விபூதி, சந்தனம், குங்குமம் என்பவற்றை மலினமான பொருள்கள் மூலம் உருவாக்குதலூடாக உள்ளூர் மரபுகள் அழிக்கப்படுவதோடு, சமயப் பயில்வுகளும் கேலிப் பொருளாக்கப்படுகின்றன. இந்தக் கேலியாக்குதலின் இன்றைய உச்சபட்ச நடவடிக்கைகளில் ஒன்றை இதனோடு கோர்த்துக் கூறுதல் பொருத்தமானது என நினைக்கிறேன். இப்போதெல்லாம் கோவிலுக்கர்க எதனையாவது வாங்கப்போனால் 'கோயிலுக்குத் தானே' என்று கேட்டுவிட்டு தரங் குறைந்தவற்றை கோவிலுக்கானதாத முன்வைக்கின்றனர்.. உதாரணமாக நெய்யை எடுத்துக் கொண்டால் - "சாப்பாட்டிற்கா" அல்லது "பூசைக்கா" எனக் கேட்டுவிட்டு தரங்குறைந்தவற்றை கோயிலுக்கானதாகத் தருகின்றனர்.


சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு வரை முதல் விளைச்சல், உள்ளதிலேயே ஆகச் சிறந்தவற்றை கோவில்களுக்குத் தருதல் என்ற நடைமுறையே இருந்தது. இந்த மனமாற்றங்களின் தொடர்ச்சியே கோவில் பிரசாதங் களை வெறுமனே ஏனோதானோ எனக் கொள்ளுதலின் அடிப்படை போலத் தோன்றுகிறது.

இரண்டாவது, இதனூடாக நிகழும் உடலியல் ரீதியான பிரச்சினைகள்.

(21ஆம் பக்கம் பார்க்க)

> **விபூதி, சந்தனம், குங்குமம் என்பவற்றை மலினமான பொருள்கள் மூலம் உருவாக்குதலூடாக உள்ளூர் மரபுகள் அழிக்கப்படுவதோடு, சமயப் பயில்வுகளும் கேலிப் பொருளாக்கப்படுகின்றன.**

# கடவுளாலும் முடியாது!




ந.பரமேஸ்வரன்

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதே இப்போது ஈழத்தமிழர்களால் முன்வைக்கப்படும் கேள்வி. கடந்த புதன் கிழமை இலங்கை வந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சந்தித்து கலந்துரையாடிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ்குணவர்தனவுடன் இணைந்து ஒரு ஊடகவியலாளர் மகாநாட்டை நடத்தியுள்ளார். இந்த ஊடகவியலாளர் மகாநாட்டில் ஜெய்சங்கர் 'இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்திசெய்யப்படவேண்டும். இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லுறவை இந்தியா ஊக்குவிக்கும். ஒற்றையாட்சி முறையின் கீழ் தமிழர்கள் சரிசமமாகவும், கௌரவமாகவும், கண்ணியமாகவும் நடத்தப்படவேண்டும். அர்த்தமுள்ளஅதிகாரப்பகிர்வு தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டும் "எனக் கூறியுள்ளார்.

### அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு

இப்போது தமிழ்க்கட்சிகளின் முன்னால் உள்ள வரலாற்றுக்கடமை, அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் அடங்கியதாக ஒரு அரசியல் யாப்பு வரைபைத் தயாரித்து அதை ஜெய்சங்கரிடம் கையளிக்க வேண்டும். இந்த இடத்தில் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டிய ஒரு விடயத்தை தமிழ்க்கட்சிகள் அல்லது அரசியல்வாதிகள் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள



வேண்டும். அதாவது ஜெய்சங்கர் கூறிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு (meaningful devolution) என்ற சொல்லை முதன்மைப்படுத்தியதாக 13க்கு அப்பால் சென்று ஒரு வரைபை தமிழ்க்கட்சிகள் தயாரிக்கவேண்டும். ஏனென்றால் 13 இல் ஒன்றுமே இல்லை என்பது தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளை விட ஜெய்சங்கருக்கு நன்கு தெரியும். அதனால் தான் அவர் "அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு' என்ற சொல்லைப் பாவித்துள்ளார்.

### வெறுங்கையுடன் திரும்பியவர்கள்

ஜெய்சங்கர் 13ஐ முழுதும் கரைத்துக் குடித்தவர். இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளைவிட ஜெய்சங்கர் முற்றுமுழுதாக அறிந்து வைத்திருக்கிறார் என்று சொன்னால் மிகையாகாது என நினைக்கிறேன்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை தமிழ் அரசியல்வாதிகளுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். யுத்தம் முடிந்த கையுடன் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இந்தியப் பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று டெல்லி சென்றனர். அங்கு எமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை வரவேற்றவர் இதே ஜெய்சங்கர்தான். அப்போது எமது தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளிடம் , "முதலில் நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு உங்களுக்குள் ஒரு தீர்மானத்தை எடுங்கள். அதன் பின்னர் பிரதமர் மோடியுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பேசலாம் "என ஜெய்சங்கர் தெரிவித்திருந்தார். ஆனால் 'ஒற்றுமைக்கு உதாரணமாக' விளங்கும் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளால் ஒரு மித்து ஒரு முடிவை எடுக்க முடியவில்லை. டெல்லியில் நின்று வாதப்போர் புரிந்தபின், 'வெறுங்கை



யுடன் இலங்கை புக்கான் இலங்கை வேந்தன் ' என்பதுபோல் திரும்பி வந்தனர் ஈழத்தமிழர்களின் அபிமானத்துக்குரிய தலைவர்கள். அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை இடித்துரைத்து விட்டுச் சென்றிருக்கிறார் ஜெய்சங்கர்.

### ஜெய்சங்கரும் பார்த்தசாரதியும்

தற்போது ராஜபக்ச அரசு பதவியேற்றவுடன் கடும் போக்கு கொள்கைகளை கொண்ட தினேஷ் குணவர்த்தனவை வெளிவிவகார அமைச்சராக நியமித்துடன் மாகாண சபைகளை ஒழிக்க வேண்டுமெனக் குரல் கொடுத்து வரும் மிலிந்த மொறகொடவை இந்தியாவுக்கான விசேட இலங்கை தூதுவராகவும் நியமித்தது. இந்த நிலையிலேயே, இந்தியப் பிரதமர் மோடியும் 'உங்களது இராஜதந்திரத்துக்கு நானும் சற்றும் குறைந்தவனல்லன்' என்பது போல் இலங்கைப் பிரச்சனையில் ஆழ்ந்த அறிவைக்கொண்ட ஜெய்சங்கரை வெளிவிவகார அமைச்சராக நியமித்துள்ளார். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த காலத்தில் இடம்பெற்றது போன்ற ஒருசூழல் தற்போது உருவாகியுள்ளது. இலங்கையில் உள்நாட்டுயுத்தம் ஆரம்பித்தகாலத்தில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இலங்கைத் தமிழர் பிரச்சினையை கையாள்வதற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய பூரண அறிவைக் கொண்டிருந்த ஜி.பார்த்தசாரதியை தனது இலங்கை தொடர்பான பிரதிநிதியாக நியமித்திருந்தார். ஈழத் தமிழர்களின் துரதிர்ஷ்டம் இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட தும் ஜே. ஆர் "பார்த்தசாரதியை விட்டுவிட்டு வேறு யாரையாவது அனுப்புங்கள்" என ராஜீவ்காந்தியிடம் கூறினார். அரசியலில் போதிய அனுபவமில்லாத ராஜீவ்காந்தியும் ஜே. ஆரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ரொமேஷ் பண்டாரியை அனுப்பினார்.

### திரளத் தொடங்கும் வெண்ணெய்

ஜே.ஆர் கேட்டது போல் ராஜபக்ச சகோதரர்கள் கேட்கமாட்டார்கள். எனவே இப்போது வெண்ணெய் திரளத் தொடங்கிவிட்டது. சட்டியை உடைக்காமல் திரண்டுவரும் வெண்ணெயை பக்குவமாக கையாண்டு திரட்டி எடுக்க வேண்டிய வரலாற்றுக் கடமை தமிழ் அரசியல்வாதிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. தமிழ் அரசியல்வாதிகள் வெண்ணெயை திரட்டி எடுப்பார்களா அல்லது ....?

1948ல் தமிழ்த் தலைவர்கள் இழைத்த தவறை இப்போதும் இழைத்தால், கடவுளாலும் ஈழத்தமிழர்களை காப்பாற்ற முடியாதுதான்.

---

அன்றாடங்காய்ச்சி

# சொல்லி வேலையில்லை



சுரண்டலும் அதீத இலாபமீட்டலும் முதலாளியத்தின் அத்திபாரங்கள். அமெரிக்கா கொரோனாவால அழிஞ்சு அல்லாடுது. அங்கை நிறையச் சனம் வேலை இழந்து போச்சு... லட்சக்கணக்கான மக்களுக்கு அன்றாடச் சீவியமே அங்கை கஷ்டமாகிப் போச்சு. அமெரிக்க அரசாங்கம் மக்களுக்கு காசு குடுத்து வாழச் சொன்னாலும் அமெரிக்க ஏழையள் 'காணாது' எண்டு அழுகுதுகள். அங்கை சாவுகளும், வேலையில்லாமையும் கூடிக்கொண்டே போகுது. அதுக்குள்ள அதிகாரவெறியும், பதவிப்பசியும் டொனால்ட் ட்ரம்புக்கு கொஞ்சமும் குறையேல்லை. தனக்கு சப்போர்ட்டான சனங்களைத் தூண்டி நாடாளுமன்றுக்குள் நுழைந்து அட்டகாசம் போடச் செய்துள்ளார்.

இந்தக் கலவரத்துக்குள்ள அம்பிட்டு ஐஞ்சு பேர் செத்தும் போச்சினம். ஜனாதிபதித் தேர்தலில ஜோ பைடன் வெண்டதை ட்ரம்ப் ஏற்றுக் கொள்ளாமல் தேர்தலை மோசடியெண்டு சொல்லிக் கொண்டிருந்தார். பைடன்ர வெற்றியை உறுதிப்படுத்தும் விவாதம் நாடாளுமன்றத்திலை நடந்த நேரத்திலை ட்ரம்ப்பின்ரை ஆதரவாளர்கள் உள்ளுக்குள்ளை நுழைந்து அட்டகாசம் போட்டாலும், ஜோ பைடனின் வெற்றி சரியானதுதான் எண்டு நாடாளுமன்றம் சான்று குடுத்திட்டுது. சண்டித்தனக்காரர் எல்லாரையும் வெளியேற்றிவிட்டு விவாதம் செய்து சான்று குடுத்திட்டினம். பொலிஸ் சுட்டு செத்தவை ஏன் செத்தினம் எண்டது வெறும் விசாரணையாகவே தொடரும். ஜோ பைடன் இந்த மாசம் 20ஆம் திகதி பதவியேற்று புதிய ஜனாதிபதியாவார். உலகத்திலேயே பெரும் வர்த்தகப் புள்ளியான ட்ரம்ப் மீண்டும் தன்ரை தொழிலைத் திறம்படத் தொடங்கிவிடுவார்.

சிலவேளை செத்தவையின் குடும்பங்களுக்கு கிள்ளித் தெளிப்பினம். எல்லாம் மறந்த கதையாகிவிடும். மீண்டும் மீண்டும் அமெரிக்க அதிகாரத்திலுள்ளோர் சனநாயகம் பற்றி பாடம் எடுப்பர். சொல்லி வேலையில்லை. பழைய சினிமாப்பாடல் ஞாபகம் வருகிறது. "சொன்னாலும் வெட்கமடா, சொல்லாவிட்டால் துக்கமடா" முதலாளியம் வெட்கமோ துக்கமோ இல்லாமல் எல்லாம் செய்யும்.



# அதிர்ஷ்டக்கார இல்வாரை!

○ விஷ்ணு

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் புகழின் உச்சிக்கு போன இடமென்றால் அது இல்வாரைதான். கேரளாவை நினைவூட்டக் கூடிய இதன் புவியியல் அமைவிடம் சட்டென யாழ்ப்பாணத்து இளசுகள் மனதைக் கவர்ந்துவிட, கூட்டம் கூட்டமாக எல்லோரும் படையெடுத்து, இல்வாரையைக் கொண்டாடித் தீர்த்துவிட்டனர். ஒவ்வொருவருக்குமே தத்தம் கிராமம், பிரதேசம், மாவட்டம் என்றவாறு பிறப்பிடம் வாழ்க்கை முழுவதும் முக்கியம் பெற்று விடுகின்றது. அத்தகைய கிராமங்களில் மனித மனங்களைக் கவரக்கூடியதான ஏதாவதோர் அம்சம் இருக்குமாயின் பிரதேசத்தில் அது பேசுபொருளாகிவிடும். அதுவே சற்று சிறப்பாக அமைந்துவிட்டால், எல்லைகளைத் தாண்டி அனைவரையும் கவர்ந்திழுக்கும். அப்படித்தான் இல்வாரையும் பேசப்படும் இடமாக மாறியது.

## இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?

யாழ்.மாவட்டத்தில் இயற்கைக் காடுகளைத் தன்னகத்தேகொண்டுள்ள பிரதேசம் என்றால் அது தென்மராட்சிதான். குழைக்காடு என்றுகூட அழைக்கப்படுகின்றது. தென்மராட்சியில் ஏ-9 வீதி சாவகச்சேரியிலிருந்து வடக்காக ,சாவகச்சேரி மகளிர் கல்லூரி அமைந்துள்ள பெருங்குளம் வீதியில், சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் மேற்கே போனால் வந்துவிடும் இல்வாரை.

> கடந்த பல தசாப்தங்களாகவே அந்தக் குளத்தை எவரும் கண்டுகொள்ளவில்லை. அதனால் மாரிகாலத்து மழைப்பூச்சிபோல பருவகாலத்தில் மட்டும் குறிப்பிட்டளவு தண்ணீரை தேக்கி வைத்திருந்து பின்னர் வறண்டுபோய்விடும். அந்தச் சரிதம் இப்போது இல்வாரையில் தலைகீழாகிவிட்டது.

கடந்த பல தசாப்தங்களாகவே அந்தக் குளத்தை எவரும் கண்டுகொள்ளவில்லை. அதனால் மாரி காலத்து மழைப்பூச்சி போல பருவகாலத்தில் மட்டும் குறிப்பிட்டளவு தண்ணீரை தேக்கிவைத்திருந்து பின்னர் வறண்டு போய்விடும். அந்தச் சரிதம் இப்போது இல்வாரையில் தலைகீழாகிவிட்டது.

## மழை வெள்ளமே ஆறாக...!

ஆங்காங்கே பெய்யும் மழை, வெள்ளமாகி சாவகச்சேரி மருத்துவமனையை அண்மித்துள்ள கண்டுவில்குளம், கற்குளம், பெருங்குளம், கிராம்புவில் குளம் ஆகியவற்றினை நிரப்பிக் கொண்டு இல்வாரை பெரிய குளத்தில் சேருகின்றது. இல்வாரை பெரிய குளம் சுமார் 10 ஏக்கரில் அமைந்துள்ளது. இது நடுப் பகுதியில் சுமார் 12 அடிக்கும் கரையோ ரத்தில் சுமார் 5 அடி வரையிலும் தண்ணீர் நிரம்பிய ஆழமான குளம். இந்தக் குளம் நிரம்பினால் மேலதிக தண்ணீர் கால்வாய் ஊடாக சென்று இல்வாரை சின்னக் குளத்தைச் சென்றடைகின்றது. இந்த இரண்டு குளங்களுக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 300 மீற்றர். இல் வாரை சின்னக்குளம் சுமார் 8 ஏக்கரில் அமைந்துள்ளது. சுமார் 6 அடி அளவு உயரத்துக்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. இதுவும் நிரம்பும் போதுதான் கால்வாய் ஊடாக நெடுங்குளம் வீதியை குறுக்கறுத்து இல்வாரை சின்னக்குள கால்வாய் என்ற இடத்தினூடாகப் பாய்ந்தோடுகின்றது. இந்த இடமே தற்போது பலர் மனங்களையும் தொட்டுச் செல்கின்றது.

இவ்வாறு ஓடும் வெள்ளம் வேலவளிக்குளம், மாத்துளாய்குளம், இந்திரிகிராய் ஆகிய குளங்களினூடாக சரசாலை குருவிக்காடு பகுதியைச் சென்றடைகின்றது. அங்கிருந்து முள்ளிவெளி ஊடாக தொண்டைமானாறு ஏரிக்குச் செல்கின்றது.

அது இல்வாரையிலிருந்து வெளியேறிச் செல்லும் அழகு ஆறு போன்று கொள்ளை அழகுதான். அதற்கு மெருகூட்டும் வகையில் கால்வாயோரம் வளர்ந்து நிமிர்ந்திருக்கும் சுமார் 20க்கும் மேற்பட்ட மருத மரங்கள் கிளைபரப்பி விரிந்து குடையைத் தூக்கிப் பிடித்தாற்போல் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.

## மழையும் துணை

இல்வாரைக் குளம் 2019 இல் கமநலசேவைகள் திணைக்களத்தால் தூர்வாரப்பட்டு கால்வாயும் சீராக்கப்பட்ட பின்னரே இயற்கையின் கொடையால் பலரிடம் பேசுபொருளாகிவிட்டது.

வழமைக்கு மாறாக இந்த வருட மாரியில் யாழ்ப்பாணத்திலும் மிக அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. 12 வருடங்களுக்குப் பின்னர் டிசெம்பரில் அதிகளவாக ஆயிரத்து 714.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது என்கின்றது புள்ளி விவரம்.

திடீரென்று இவ்வாறு பிரபலமான இல்வாரையை ரசிக்கவேண்டுமென்று பலரும் படையெடுக்கின்றனர். "சும்மா இருந்த இடம்தான். இயற்கையின் கொடையால் அழகாகியுள்ளது. நாளாந்தம் சுமார் 500 பேர் வரையில் வந்துபார்த்துச் செல்கின்றனர். இது பிரபலமானவுடன் இங்கு 'செல்பி', 'போட்டோ' எடுப்பதே பெரும்பாடாக இருந்தது. விலகமுடியாத அளவுக்கு பார்வையாளர்கள் திரண்டி ருந்தனர்." என்று கூறுகின்றார் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஓர் இளைஞர். இப்போதும் நாளாந்தம் நூற்றுக் கணக்கானவர்கள் அங்கு சென்றுவருகின்றனர். இளையோரும், சிறார்களுடன் பெற்றோருமே அதிகம் வந்துசெல்கின்றனர்.

## தடைக்கு மத்தியிலும்..!

அங்கு வருபவர்களுக்கு வாய்க்கு இதமாக நடமாடும் கச்சான் கடைகளும் வந்துவிட்டன. இல்வாரைக்கு ஏராளமானோர் படையெடுத்ததால், கொரோனா பரவும் என்ற அச்சத்தால் அங்கு செல்லத் தடை என்றும், சென்றால் தனிமைப்படுத்தப்படவேண்டி வரும் என்றும் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை எச்சரித்திருந்தது. அதையும் மீறி முகக்கவசங்களுடன் சனக் கூட்டம் இன்னும் இல்வாரையில் அலைமோதுகின்றது.

கால்வாய் மட்டுமன்றி, அதனோடு இணைந்ததாக பச்சைப்பசேல் என்று வயல்களும் கண்களுக்கு விருந்தாகின்றன. இல்வாரை சின்னக் குளம் சீரமைப்பின்றி இருந்தமையால் கடந்த வருடம்வரை அந்தப் பகுதியில் பெருமளவில் வயல்செய்கை இருக்கவில்லை. காரணம், மழைவெள்ளம் வயல்களுக்கு மேலாக கடல்போல் தேங்கிநிற்கின்றமையே. "குளம் மற்றும் கால்வாய் சீரமைக்கப்பட்டமையால்தான் இந்தமுறை வயல் செய்கையும் அதிகரித்துள்ளது "என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். இல்வாரைக் கால்வாயோரம் சிறிய நாச்சிமார் கோவில். அதுவும் அந்த இடத்தில் ஓர் அமைதியை, பக்குவத்தை அங்கு வருபவர்களிடம் தக்கவைத்துவிடுகின்றது. கால்வாயில் தண்ணீரைத் தேக்கிவைக்கக்கூடிய தடுப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், தண்ணீர் விரைவில் ஓடிஒளிந்துவிடவும் முடியாது.

## சுற்றுலா மையமாக மாறுமா?

மிகக் குறுகிய காலத்தில் யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாக பிரபலமாகிவிட்ட இல்வாரையை சுற்றுலா மையமாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தும் தற்போது முன்வைக்கப்படுகின்றது. அதன் அவசியமும் உணரப்படுகின்றது. தற்போதைய அரசுகூட பெரும் வருமானம் ஈட்ட, அந்நியச் செலாவணியைப் பெற சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற முனைப்போடு தீவிரமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வெளிநாட்டிலிருந்து சுற்றுலாப் பயணிகளை வரவழைத்துள்ளது. வந்த ஏராளமானோரில் இதுவரை 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்படுத்தப்பட்டபோதும், அது எதிர்பார்த்த விடயம்தான் என்றுகூறிவிட்டு செயற்படுகின்றது அரசு.

எனவே, இல்வாரையை உள்ளூராட்சி சபை சுற்றுலாத்தளமாக மாற்றியமைக்கலாம். அந்தப் பகுதியில் வேறு சுற்றுலா மையங்கள் பெரிய அளவில் இல்லை. இல்வாரை குளங்கள் உள்ள பகுதி சாவகச்சேரி நகர சபைக்கும் குளத்திலிருந்து நெடுங்குளம் வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் பகுதி சாவகச்சேரி பிரதேச சபைக்கும் உரிமை உடையது. ஆனால், அந்தப் பகுதியில் சிறுவர் அரங்கு அமைப்பதோ அந்த இடத்தை பொழுதுபோக்கு மையமாக மாற்றவோ காணி இல்லை என்று சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் கூறுகின்றார்.



தனியார் காணிகள் தாராளம் உள்ளன. யாராவது காணி தந்தால் அமைப்பது பற்றிப் பரிசீலிக்கலாம் என்றும் அவர் கூறுகின்றார்.

பார்ப்போம், இல்வாரைக்கு இன்னும் அதிர்ஷ்டம் அடிக்கிறதா என்று.

# யாழ்ப்பாணக் கம்பஸ் பெரிய ஐயாவுக்கு…



## அவசரமா ஒரு கடுதாசி

வணக்கம்.

முந்தநாள் இரவு முழுக்க முழிப்பிருந்து சரியாக் களைச்சுப் போயிருப்பியள். பரவாயில்லை,'சக்கரைக்' கட்டியோட ஒரு பிளேன்ரீயைக் குடிச்சபடியாவது இதை வாசிச்சு முடியுங்கோ.

நீங்கள் புது 'வீசி'யா வந்தவுடன அம்மாளாச்சி சத்தியமா எனக்கு வலுபுளுகம். கனநாளைக்கு பிறகு கம்பஸுக்கு ஒரு நல்ல மனுசன், முள்ளதண்டுள்ள கல்விமான் சரியான பதவிக்கு வந்திட்டார் , இனிக் கம்பஸ் உருப்படும் எண்டு நினைச்சன். ஆனால் உங்கட முதல் கூட்டத்திலயே , வாயில விரலை வைச்சு ஊடகக்காரரை 'அமெரிக்க ஜனாதிபதி' ரேஞ்சில உங்களை நீங்களே பீத்திக் கொண்டு வெருட்டினதைப் பார்க்க ஒரு மாதிரியாக் கிடந்திச்சு. கதிரைச் சுகம் குடுத்த தினவில அப்பிடி தெரியாத்தனமா நடந்திட்டியள் எண்டு நானே எனக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டன்.

ஆனா முந்தநாள் இரவு நீங்கள் செய்த வேலையை நினைச்சு இன்னும் எனக்கு நித்திரை வரேலை. 'முள்ளிவாய்க்கால் தூபியை, கள்ளர் -காடர் மாதிரி , லைட்டெல்லாம் நூத்துப் போட்டு, இருட்டோட இருட்டா இடிச்சுத் தள்ளியிருக்கிறியள். அதுக்கு ஒரு விண்ணான விளக்கம் வேற குடுத்தியள். " நாங்கள் இடிக்காட்டி வேற ஆரும் வந்து இடிச்சுப் போடுவினம். அதால தான் நாங்களே இடிச்சிட்டம்"

இந்த விளக்கத்தை கேக்க சுரணை யில்லாத மாட்டுக்கு கூட புல்லரிக்குதாம். அடுத்தவன் வந்து எங்கட வீட்டை கொளுத்தப் போறான் எண்டிட்டு நாங்களே அதை எரிச்ச கதை மாதிரித்தான் இது கிடக்குது. அடுத்தவன் எங்கட காணிக்கை கால் வைக்காமல் பாக்க வேண்டியதுதான் , ஒரு நிறுவனத்தின்ர தலைவரான உங்கட பொறுப்பே தவிர, இப்பிடி இருக்கிறதுகளை அழிக்கிறதில்லை.

முள்ளிவாய்க்கால்ல செத்த சனத்தை , அதுகளுக்காண்டி வைச்ச தூபியை இடிச்சு இன்னொருக்கா சாகக்கொண்டு போட்டியள். சண்டை எண்ட பேரில அப்பாவியளை வகை தொகையில்லாமல் கொண்ட இனப்படுகொலையாளியளுக்கும், உங்களுக்கும் இப்ப வித்தியாசம் இல்லாமல் போச்சே. அந்தச் சனங்கள் செத்த பிறகாவது நிம்மதியா இருக்க விடாமல் இப்பிடி அந்தரிக்க வைக்கிறீங்களே? ஒரு இனத்தின்ர ஆன்மாவை சிப்பிலியாட்டுறதுக்கோ பெரிய்ய்ய படிப்பெல்லாம் படிச்சனியள். வயம்ப, ஜெயவர்த்தனபுர கம்பஸுகளில எல்லாம் உந்த ஜே.வி.பி காரரின்ரை தூபியள் எல்லாம் பென்னம் பெரிசா கட்டித்தானே வைச்சிருக்கிறாங்கள். அதை ஒருத்தரும் உடைக்கேலையே. ஏனெண்டா அங்க இன்னமும் முதுகெலும்புள்ள துணைவேந்தர்மார் இருக்கினம். அவையிட்ட ஒருத்தரும் வாலாட்ட முடியாது கண்டியளோ.

ஆனா இஞ்ச அரசாங்கத்துக்கு ஆர் கூட வாலாட்டுறது எண்டெல்லோ பிரச்சினை. கடைசியா நீங்களும் அந்த வாலாட்டிக் குரூப்பில சேர்ந்திட்டீங்கள் எண்டதுதான் எனக்குக் கவலை . இதை வாசிக்கேக்க உங்களுக்கு கோபம் வராது எண்டு எனக்குத் தெரியும் ஐயா. ஏனெண்டால் அதெல்லாம் சூடு, சுரணை, மானம் எண்ட உணர்ச்சியள் இருக்கிற ஆக்களுக்குதான் வருமாம். மெய்யோ?

அன்புடன்,
அப்பாவி அன்னமுத்து.

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்



## இடியப்பச்சிக்கல்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முடிவு கட்டி, மாகாணசபை முறைமையை கழுத்தறுப்பு செய்யுமாறு கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும், பௌத்த தேரர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பில் ஆளுங்கட்சிக்குள்ளும் இருவேறு நிலைப்பாடுகள் உள்ளன. இதனால் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்ப்பலைகளையும்மீறி மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தினால் மண்கவ்வவேண்டிவரும் என்ற அச்சத்தாலேயே அரசாங்கம் தேர்தல் விடயத்தில் தந்திரோபாயப் பின்வாங்கலைச் செய்துள்ளது. ஆக, புதிய அரசமைப்புவரும்வரை மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறாது என்றே கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகள் நம்புகின்றனர். அதேபோல மாகாணசபை முறைமை ஒழிக்கப்படும் எனவும் கருதுகின்றனர்.

ஆனால் மாகாணசபை முறைமை இல்லாதொழிக்கப்படாது என்ற உத்தரவாதம் ஆளுங்கட்சியால் வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சரிடமும் இது உறுதியளிக்கப்பட்டுள்ளது. 13 விடயத்தில் டில்லியிடமிருந்து தொடர் இராஜதந்திர அழுத்தங்கள் வருவதால் புதிய அரசமைப்பு ஊடாக மாகாணசபை முறைமையை பலவீனப்படுத்தும் நடவடிக்கையையும் அரசாங்கத்தால் முன்னெடுக்க முடியாது.

கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், பௌத்த தேரர்களுக்கும் தலைசாய்த்துச் செயற்படும் இந்த அரசாங்கத்துக்கு '13' விடயத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே.

## புதிய அரசமைப்பு எப்போது?

புதிய அரசமைப்பு தொடர்பான சட்டவரைபை இவ்வருடம் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான யோசனைகள் அடங்கிய வரைவு நகலை முன்வைப்பதற்காக அரசாங்கத்தால் 11 பேரடங்கிய நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது.




மேற்படி குழு பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் மின்னஞ்சல் மற்றும் பதிவுத்தபால் மூலம் கருத்துகளைக் கோரியது. இதன்படி பல தரப்பினரும் யோசனைகளை முன்வைத்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி உட்பட பல கட்சிகளும் காத்திரமான முன்மொழிவுகளை அனுப்பிவைத்துள்ளன.

புதிய அரசமைப்புக்கான இக் குழுவின் யோசனை எதிர்வரும் மார்ச்சில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான சட்டவரைபு தயாரிக்கப்பட்டு, அமைச்சவை அனுமதி உட்பட சட்டபூர்வமான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியான பின்னர் அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

தனது இரண்டாவது பதவிக் காலம் முடிவடைவதற்குள் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இதன்படி 2021 க்குள் புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனவும் அறியமுடிகின்றது.

சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாத வகையில் புதிய அரசமைப்பை இயற்றுவதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது. தேசியக்கொடி, தேசிய கீதம் உட்பட 12 பிரதான விடயங்களை மாற்றுவதாக இருந்தால் மட்டுமே சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும். எனினும், அந்த 12 விடயங்களில் மாற்றம் ஏற்படாது என தெரிய வருகின்றது.

அ.நிக்ஸன்



# இந்தியாவும் 13 ஆவது திருத்தச் சட்டமும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு என்ற அடிப்படையில், கடல்சார் கூட்டுப் பாதுகாப்பு ஒத்துழைப்பு (Maritime Domain Awareness MDA) நடவடிக்கைகளை சில நாள்களுக்குள் இலங்கை ஆரம்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கின்றார். இதனைக் கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு உட்பட 13ஆவது திருத்தச் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவதே சிறந்தது என்றும் ஜெய்சங்கர் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் கூறியிருக்கிறார். ஆனால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் கொழும்பில் தனிப்பட்ட முறையில் நடத்திய கலந்துரையாடலின் போது, கடல்சார் கூட்டுப் பாதுகாப்புப் பற்றியே பேசியிருப்பார் என்பது வெளிப்படை. எனினும் வெளியுறவு அமைச்சர் தினேஸ் குணவர்த்தவுடன் இடம்பெற்ற சந்திப்பில் 13 பற்றிப் பேசியிருக்கலாம். இந்திய வெளியுறவுச் செயலாளர் அஜித் டோவால் கடந்த டிசெம்பர் மாதம் கொழும்புக்கு வந்து பேசியதன் தொடர்ச்சியே ஜெய்சங்கரின் வருகையும். அதாவது கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தி, மற்றும் கடல்சார் கூட்டுப் பாதுகாப்பு- ஒத்துழைப்புப் பற்றிய விடயங்களே அவரது கொழும்பு வருகையின் பிரதான நோக்கங்கள் எனலாம். வந்த இடத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி ஜெய்சங்கர், அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுடன் உரையாடியிருக்கிறார். அவ்வளவுதான். இது ஒன்றும் ஈழத்தமிழர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியல்ல.

"13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துங்கள்" என்ற வாசகம் மன்மோகன் சிங் காலத்தில் இருந்தே இந்தியாவால் கூறப்படுகிறது. இன்னும் ஒருபடி மேலேபோய் கூறுவதானால், 1994 ஆம் ஆண்டு சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்றபோதும், இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஞாபகப்படுத்தியிருந்தது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அவ்வப்போது கொழும்புக்கு வந்து செல்கின்ற இந்திய வெளியுறவு அமைச்சர்கள், இந்திய தேசிய பாதுகாப்புச் செயலாளர்கள் என அனைவருமே 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றியே கூறிச் சென்றிருக்கின்றனர் என்பதும் வரலாறு.

2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது மாத்திரம் இந்தியா இந்த 13 பற்றி எதுவுமே பேசவில்லை. ஆனால் பேச்சுகளின் போது எடுக்கப்படுகின்ற முடிவுகள், மற்றும் வன்னிக்குச் சென்று பேசுகின்ற ஒவ்வொரு விடயங்களும் புதுடில்லிக்குத் தெரியப்படுத்தப்பட்டன என அப்போது சமாதானத் தூதுவராகச் செயற்பட்டிருந்த எரிக்சொல்கெய்ம், சமீபத்தில் லண்டனில் இடம்பெற்ற கருத்தரங்கில் வெளிப்படையாகவே கூறியிருந்தார். அதுமட்டுமல்ல புலிகள் இந்தியாவைப் பகைத்துக் கொண்டமை தவறு எனவும் சொல்லியிருந்தார்.

சமாதானப் பேச்சுக்காலம் பற்றி இங்கு கூறுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் அன்றில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்து சென்றதுவரை, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களில் இந்தியா எப்படிச் செயற்பட்டிருந்தது என்பது தொடர்பாகவும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா வாய்ப்பாடாக வைத்திருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதுமே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி செய்யப்பட்டது இந்திய- இலங்கை ஒப்பந்தம். இதன் மூலமே இலங்கைத் தீவில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துவதற்காக அதிகாரப் பரவலாக்கம் என்ற பெயரில் 13 ஆவது திருத்தச் சட்டமும் இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த கதை.

இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்புக்குள்ளேதான் 13 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுமிருந்தது. ஈழத்தமிழர் அரசியல் விடுதலைக்காக அதிகாரப் பங்கீடுதான் அன்று கோரப்பட்டிருந்தது. இன்று வரை கோரிக்கை அதுதான். அதாவது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சிதான் தீர்வு என்று தமிழர் தரப்பு அடித்துக் கூறி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் முன்வைத்த புதிய அரசியல் யாப்புக்கான பரிந்துரைகளில்கூட சுயநிர்ணய உரிமை பிரதானப்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தன் தங்கள் வரைபை ஜெய்சங்கரிடம் சென்ற வியாழக்கிழமை கொழும்பில் வைத்துக் கையளித்துமிருக்கிறார்.

ஆனால் ஜெய்சங்கர் செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வந்தது வரை இந்திய மத்திய அரசு 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில்கூட 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பின்னால் இந்தியா நின்றது, இப்போதும் நிற்கின்றது என்பதும் தெரியாததல்ல. மகிந்த ராஜபக்ச 2010 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது 13 பிளஸ் என்றொரு கதையைக் கூறியிருந்தார்.

2006 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த தீர்வுத் திட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றியிருந்த சம்பந்தன், அந்தத் திட்டம் தமிழர்களின் சுயமரியாதைக்கு விழுந்த அடி என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை தும்புத் தடியால்கூடத் தொட்டுப் பார்க்க முடியாதென்றும் சம்பந்தன் அடித்துக் கூறியிருந்தார். ஆனாலும் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிட்டு வெற்றியடைந்து மாகாண சபையின் ஆட்சியையும் நடத்தியிருந்தமை வேறு கதை.

13 ஆவது திருத்தச் சட்டத்தோடு ஈழத்தமிழர்கள் அமைதியடைந்து விட வேண்டும். இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையைத் தங்கள் பக்கம் வைத்திருக்க வேண்டுமானால், ஈழத்தமிழர்கள் இலங்கை அரசுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாதென்பது இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு. இந்திய அரசின் பிரதிநிதிகள் கொழும்புக்கு வந்து செல்லுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இந்த நிலைப்பாடு வெளிப்படும்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இருந்து கடந்த பத்து ஆண்டுகளில் மன்மோகன் சிங், நரேந்திர மோடி ஆகிய இந்தியப் பிரதமர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறைந்தது 5 தடவைகள் சந்தித்திருக்கிறது. இந்திய வெளிவிவகார அமைச்சர்கள், செயலாளர்கள் ஆகியோரும் குறைந்தது ஏழு தடவைகள் சந்தித்திருக்கின்றனர். ஆனால் இதுவரை இலங்கை அரசு எந்தவொரு மாற்றத்தையும் செய்யவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்ற காணி, பொலிஸ் அதிகாரங்கள் இதுவரை நடைமுறையில் இல்லை. 18, 19 ஆவது திருத்தச் சட்டங்களும் அந்தத் திருத்தச் சட்டங்களை ரத்துச் செய்து 2020 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாகவும் மாகாணங்களுக்குரிய பொலிஸ் ஆணைக்குழு முறை செயலிழந்துள்ளது. காணிக் கொள்கைக்காக மாகாணங்களை உள்ளடக்கிய தேசிய காணி ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை.

மாகாண சபைகளுக்குரிய தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் கொழும்பின் தலையீட்டால் செயலிழந்துள்ளது. கொவிட்19 பரவலைத் தடுக்கும் ஏற்பாடுகளின் கீழ் மாகாணங்களிடம் இருந்த சுகாதாரத் திணைக்களச் செயற்பாடுகளும் தற்போது கொழும்பை மையப்படுத்தியுள்ளன.

முதலமைச்சருக்கான நிதியம்கூட இதுவரை உருவாக்கப்படவில்லை. இப்படி மாகாணங்களுக்கான பல சட்டங்கள், விதிகள் எங்கே என்றுகூடத் தெரியாது. மாகாணங்களுக்கான ஒவ்வொரு அதிகாரங்களும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அல்லது நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் மூலம் கையாளப்படுகின்றன.

ஆகவே காகம் கொத்தித் தின்று விழுத்திவிட்டுச் சென்ற பப்பாப்பழம் போன்றதுதான் தற்போதைய 13 ஆவது திருத்தச் சட்டம். அப்படிக் கொழும்பு கோதி எடுத்த அதிகாரங்களை மீளவும் வழங்க வேண்டும் என்பது தொடர்பாக ஜெய்சங்கர் கொழும்பில் சம்பந்தனிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைச் சபையின் அமர்வில் தமிழ் இன அழிப்புத் தொடர்பான தீர்மானங்கள் எதனையும் கையளிக்க வேண்டாமென்ற தொனியிலேயே 13 பற்றி ஜெய்சங்கர் பேசியிருக்கிறார் போலும். ஏனெனில் 30/1 தீர்மானம் 13 பற்றியும் சொல்கிறது.

அத்துடன் 13 குறித்து கோத்தாபய ராஜபக்சவோடு ஜெய்சங்கர் காட்டமாகப் பேசியிருக்கவும் வாய்ப்பில்லை. ஆகவே இலங்கை, இந்தியாவின் செல்லப்பிள்ளை என்ற முறையிலான இந்த அணுகுமுறை சிங்கள ஆட்சியாளர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பமாகவே அமைந்திருக்கிறது.

இந்தியாவும் 13 பற்றி சொல்லிக் கொண்டே இருக்கட்டும். ஆனால் இந்தியாவுக்குத் தேவையான இந்தோ பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குரிய ஒத்துழைப்பை மாத்திரம் வழங்கிவிட்டு அற்பசொற்பமாக இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் அப்படியே அமுக்கிவிடுவோம் என்ற தொனியில் சிங்கள ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றமைதான் வரலாறு.

13 ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கூறிய மிலிந்த மொரகொட டில்லியில் தூதுவராகவும், 13 தேவையில்லையெனச் சொல்லுகிற இராணுவ அதிகாரியான சரத் வீரசேகர அமைச்சராகவும் இருக்கின்ற அரசாங்கத்தில், 13 பற்றி ஜெய்சங்கர் சொன்னதற்குச் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் பாராட்டியமைதான் வேடிக்கை. அதுவும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில் முன்னுக்குப் பின் முரண்பாடாகச் செயற்படுகிறார் சுமந்திரன்.



## 29 இற்கான கவிதைகள்

வாகன காளைகளை வசையாகப் பழக்கி அன்று
வாலையர்கள் முதலாக முதியவர்கள் ஈறாக
கூடிக்களித்து நின்ற வீரத் தமிழர் விளையாட்டோ!
அன்றி முப்பாட்டன் கொப்பாட்டன் காத்து வைத்த
பண்பாட்டின் முதுசொம் தானோ!
சவாரித்திடல்களிலே காட்சிகளாய்க் கண்டவை
இன் நாளில் நூல்களிலே ஓவியமாய்
நிலைத்து விட்டனவோ!

**மோ.சேந்தன்**
இல.153/1, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

மாசு தரும் வண்டிதனை
மகிழூர்ந்து என்பனரே
சூழல் நேயம் காக்கும் வண்டி
மாடு இழுக்கும் சவாரி வண்டி
மாசற்ற மாட்டு வண்டி
மாயமாகி மறைந்ததேனோ?

**கனிவிழி காந்தரூபன்**
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

இரட்டை மாட்டு வண்டி பாரீர்!
இது தமிழர்களின் பழங்கால வண்டி
இன்றைய தலைமுறை பயணித்திராத வண்டி
உழவர்களின் பாரம்பரிய வண்டி
வேகமாய் பாய்ந்து ஓடும் காளைகள்
அவற்றின் வேகத்தை மேலும் கூட்ட
வண்டிக்காரன் கையில் சாட்டை
கட கட என ஓடும் வண்டி
அதில் சவாரி செய்வோம் வாரீர்!

**ச.நந்தனா**
இல.159, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## மௌன மொழி 30



**பரிசு பெறும் கவிதை**

மாட்டுவண்டில் மறைந்தாலும்
ஓட்ட (சவாரி) வண்டில் மறையாது
மாடு ரெண்டும் மல்லுக்கட்ட
ஓட்டுபவன் சண்டிகட்ட
ஓடுதுபார் காளை ஓங்கார வேகமாய்
ஒற்றை தடியடிக்கு ஒதுங்கியே
ஓடுதுபார் இரட்டைப் பிறவிகளாம்
இளங்காளைக் கன்றுகளாம்
ஓடுதுபார் ஓங்கார வேகமாய்

**பொன்.துரைராசா**
சுன்னாகம் தெற்கு
சுன்னாகம்

மண்ணை உழும் மாடுகள்
மனித வாழ்வில் மாபெரும்
மாற்றத்தை ஏற்படுத்தின கண்ணை
கவரும் காட்சிகள் கண்ணுலகில்
பல காணினும் தமிழரின் வீரத்தினை
தலை நிமிர்த்த உழைக்கும் ஜல்லிக்கட்டு
காளைகள் போல் வருமா?

**வேலணையூர் சேதுபதி**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்த னையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 16.01.2021**

கவிதைக்கு பரிசு 1000/=

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com
0773165555

**மாட்டுவண்டி மண்ணேற்றி......**
**மடுவமதில் பொங்கலேற்றி.....**
**மணிமான் துதியேற்றி...... என்**
**மனம் தொட்டவள் நினைவேற்றி...**
**மனம் மகிழும் திருநாளுக்காய்....**
**ஓட்டுகிறேன் மாடுகளை......**
**ஓடைக்கரைப் பக்கமாய்......**

**பற்குணன் அம்பிகாபதி**, வவுனியா.

இரண்டு மர சில்லு வண்டில்
இருகாளை மாடுதனைப் பூட்டி
ஒய்யாரமாய் உட்கார்ந்து
வண்டிச் சவாரி போகும் மன்னவனே!
பாரம்பரிய விளையாட்டுத்தனை
பறைசாற்றிடவோ இம் மண்ணுலகில்
நீ வந்துதித்தாய்

**ஆ.பாலமதுஜா**
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

# ட்ரம்ப் கையில் அணுவாயுத 'பாஸ்வேர்ட்'

குமாரதாஸன்
பாரிஸ்.

பொதுவாக நாட்டின் அதிபர்கள் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்கும் சமயத்தில் ரகசியக் காப்பு பிரமாணம் என்ற ஒன்றும் இடம்பெறுவதுண்டு. மிக முக்கிய பாதுகாப்பு ரகசியங்கள், பேரழிவு அணுவாயுதங்களை இயக்குவதற்கு அனுமதிக்கும் கடவுச் சொற்கள்(**nuclear codes**) போன்றவற்றின் பரிமாறுதல்கள் இந்த ரகசியக் காப்புப் பிரமாணத்துள் அடங்கும்.

கண்டங்கள் எங்கும் அணு குண்டுகளை வெடிக்கச் செய்யக்கூடிய அமெரிக்காவின் போராயுதங்களை அவசர வேளைகளில் இயக்குவதற்கு அனுமதிக்கும் கடவுச்சொற்கள் (nuclear codes) இப்போது அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வசம் உள்ளன. அணுவாயுத தாக்குதல் ஒன்றுக்கான உத்தரவை வழங்கும் பொத்தான்கள் (button) அடங்கிய "அணுப் பந்துகள்" (nuclear football) என்னும் இலத்திரனியல் கருவிகள் வெள்ளை மாளிகையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கறுப்பு சூட்கேஸ்களில் வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கருவிகளை அணுகும் அதிகாரம் இன்னமும் அதிபர் ட்ரம்பிடம் தான் இருக்கிறது.

அணு ஆயுதத் தாக்குதல் உத்தரவு ஒன்றை நிரந்தரக் கட்டளைப்பீடங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர் அது தொடர்பாக அதிபர் முதலில் கூட்டுப்படைகளின் தலைமைத் தளபதிக்கு தெரிவிக்க வேண்டும் என்று இராணுவ ஆவணங்கள் கூறுகின்றன.

அண்மைய நாள்களில் ட்ரம்பின் நடவடிக்கைகள் குறித்துக் கவலை கொள்வோர் அணு ஆயுதக் கடவுச்சொற்கள் தொடர்பான அச்சத்தையும் எழுப்புகின்றனர். அதிபர் ட்ரம்ப் குறித்தும் அணு ஆயுத கடவுச்சொற்கள் பற்றியும் அமெரிக்கக் கூட்டுப் படைகளின் தலைமைத் தளபதியுடன் (**Chairman of the Joint Chiefs of Staff**) ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது என்று சபாநாயகர் நான்ஸி பெலோசி (**Nancy**



**Pelosi**) அம்மையார் பரபரப்புத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

"நிதானம் இல்லாத அதிபர் ஓர் இராணுவ மோதலைத் தொடங்குவதற்காக அல்லது அணு ஆயுதத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக அதற்குரிய ரகசிய கடவு இலக்கங்களை அணுகுவதைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக கூட்டுப் படைகளின் தளகர்த்தருடன் ஆலோசனை நடத்தினேன். அதிபர் இனியும் ஆபத்தானவராக இருக்க மாட்டார் என்ற போதிலும், நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் எதிரான நிலையற்ற தன்மை கொண்ட ஆபத்தான அவரது நடவடிக்கைகளில் இருந்து



மக்களைப் பாதுகாப்பதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்." என்று சபாநாயகர் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு அனுப்பிய ஓர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வரலாற்றில் அதிபர் ஒருவர் அதன் தேசிய் பாதுகாப்புத் தொடர்பான இத்தகைய ஐயங்களுக்கு உள்ளாகுவது இதுவே முதல் முறை ஆகும்.

இதேவேளை காங்கிரஸ் கட்டடத்தில் நடந்த சம்பவங்களை அடுத்து அதிபர் ட்ரம்பை சுற்றி உருவாகிய அழுத்தங்கள் மேலும் இறுகி வருகின்றன. ஜோ பைடனின் பதவியேற்பு நிகழ்வில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று அவர் அறிவித்ததை அடுத்து அவருக்கு எதிரான கருத்துகள் தீவிரமடைந்துள்ளன. முகநூல், ருவீற்றர் போன்றவை ட்ரம்பின் கணக்குகளை முடக்கியதால் அவர் மேலும் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறார். அமெரிக்காவில் புதிய அதிபரது பதவியேற்பு நிகழ்வில் பதவி விலகும் அதிபர் கலந்துகொள்ளும் பாரம்பரியம் 19 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. 1869 ஆம் ஆண்டு அன்றைய அதிபர் அன்று ஜோன்சனுக்குப் (**Andrew Johnson**) பிறகு பதவியேற்பு நிகழ்வை புறக்கணிக்கின்ற முதலாவது அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆவார்.

மறுபுறத்தில் பைடன் பதவியேற்பதற்கு முன்னராக மிக வேகமான குற்றவிசாரணைச் சட்ட நடவடிக்கை ஒன்றின் மூலம் ட்ரம்பை வெள்ளை மாளிகையில் இருந்து தூக்குவதற்கான தீவிர ஆலோசனைகள் இன்னமும் நடைபெற்று வருகின்றன.

# முள்ளிவாய்க்கால் தூபி; அழிப்பின் அடையாளம்



சோபிகா

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி பற்றிய விடயம் தான் இப்போது எங்கும் பேசுபொருள்.

இந்த நினைவுத்தூபியை யாழ்.பல்கலைக்கழகத்தில் நிறுவக் கூடாது என்பதில் ஆரம்பம் முதலே பல இடையூறுகள், முட்டுக் கட்டைகள், அனுமதி மறுப்புகள் என்பவை பல்கலைக்கழக நிர்வாகத்தாலும், அரச உயர் மட்டத்தாலும் மேற்கொள்ளப் பட்டே வந்துள்ளன. ஆனாலும் மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளும், இந்த நினைவுத்தூபியை அமைத்தே தீருவது என்ற முடிவில் உறுதியாக நின்றார்கள்.

முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த படுகொலைகளுக்கு , யாழ்.பல்கலைக்கழத்தில் ஏன் தூபி வைக்க வேண்டும்? என்ற விதண்டா வாதக் கேள்வியும் அப்போது ஒரு சாரரால் முன்வைக்கப்பட்டது. போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அரசு அறிவித்த பின்னரும் கூட, போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூர இலங்கை அரசு அனுமதிக்கவேயில்லை. நல்லாட்சிக் காலத்தில் கொஞ்சம் தளர்வுப் போக்கு இருந்தபோதும் கண்காணிப்புகள் மத்தியிலேயே, ஒருவித பயத்தோடுதான் அஞ்சலிக்க முடிந்தது. எனவே முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டோரை நினைவேந்த , யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் ஒரு தூபி அமைப்பதே பொருத்தம் என மாணவர்கள் நினைத்தார்கள்.

அத்தோடு முள்ளிவாய்க்காலில் பல்கலைக்கழக மாணவர்கள், மாணவர்களின் உறவுகள் என்போரும் மாண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இங்கே பயில்கின்ற மாணவர்கள் அஞ்சலி செய்வதும் இந்த தூபி அமைக்கப்பட்டதன் இன்னொரு நோக்கம்.

ஆனால் அந்த நோக்கத்தை எப்படியேனும் தடுத்து விட ஆட்சியாளர்கள், பல்கலைக்கழக நிர்வாகத்தின் மூலம் முயன்று கொண்டே இருந்தார்கள். முன்னரும் ஒருதடவை அதனை அனுமதி பெறப்படவில்லை என்று முளையிலேயே அப்புறப்படுத்த காரியங்கள் நடந்தன. ஆயினும் மாணவர்கள் காட்டிய எதிர்ப்பால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. பின்னர் மாணவர்கள் , அதனை கட்டி முடித்து 2009 ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி திறந்து வைத்தார்கள். அதன் பின்னர் வந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் இந்தத் தூபிக்கு முன்னாலேயே பல்கலைக்கழக மாணவர்கள் அஞ்சலி செலுத்துவது வழக்கமானது. இப்படியே விட்டால், இனப்படுகொலையின் அடையாளமாக இந்தத் தூபி மாறிவிடுமோ என்ற அச்சத்தில், இதுவரை நாளும் பம்மிக் கொண்டிருந்த அதிகாரம், பல்கலைக்கழக நிர்வாகத்தை தூண்டி விட்டது. 'வைன்' கொடுத்த பொம்மையாக இயங்கும் நிர்வாகமும், தன் எஜமானர்களின் கட்டளையை சிரமேற்கொண்டு, இருளோடு இருளாக முள்ளிவாய்க்கால் தூபியை இருந்த இடம் தெரியாமல் இடித்து அழித்து விட்டு, திமிரோடு " அது அப்புறப்படுத்த வேண்டிய சட்டவிரோதக் கட்டடமே" என்று விளக்கம் வேறு சொல்கிறது.

ஆனால் இந்த விடயத்தை இப்படியே விட்டுவிட மாணவர்களும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் தயாராயில்லை. எப்படியும் மீண்டும் அதே இடத்தில் அதே போன்ற தூபியை அமைக்கும்வரை ஓயமாட்டோம் என்று சூளுரைத்துள்ளார்கள். அப்படி மீண்டும் முள்ளிவாய்க்கால் தூபி உருப்பெற அதை இடிக்கச் சொன்னவர்களும் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். பார்ப்போம், இந்த பரமபத ஆட்டத்திலாவது நீதி வெல்லுமா என்று.

## நினைவுகூர உரிமையில்லையா?



சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு தமிழினத்திற்கு எதிராக மேற்கொள்ளும் இன அழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே நாம் இதனை நோக்க வேண்டும். அன்று இரவோடு இரவாக தமிழினத்தின் அறிவுக் களஞ்சியமும் தெற்காசியாவின் முதன்மை நூலகமாகவும் விளங்கிய யாழ்ப்பாண பொது நூலகத்தை தீயிட்டு தமிழினத்தின் அறிவுக் களஞ்சியத்தை எரித்து இன அழிப்பை மேற்கொண்டார்கள். இனக்கலவரங்கள் மூலமாக தென்னிலங்கையில் வசித்த தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்தார்கள். முள்ளிவாய்க்காலில் கொத்து கொத்தாக தமிழர்களை கொன்று குவித்தார்கள். இன்று எஞ்சியிருக்கும் நாம் எம் உறவுகளை நினைவு கூர்வதற்கு அருகதையற்றவர்கள் எனும் தொனிப்பட சிங்களப் பேரினவாதத்தின் கைக்கூலிகள் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடித்து அழித்துள்ளார்கள்.

இலங்கைத் தீவில் தமிழர்களான எமக்கு சமவுரிமை இல்லையா? நாம் இந்நாட்டு மக்கள் இல்லையா? யுத்த வெற்றிச் சின்னம் அமைத்து வெற்றி விழாக் கொண்டாட முடியும் என்றால் நாம் ஏன் எம் உறவுகளுக்கு நினைவுத்தூபி அமைத்து நினைவுகூர முடியாது?

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கான சமவுரிமை மறுக்கப்பட்டதன் விளைவாகவே அன்றும் தமிழ் இளைஞர்கள் வலிந்து ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதை தென்னிலங்கை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தமிழினத்தின் பொறுமையை மீள மீள சோதிக்க வேண்டாம்.



2019 இல் முள்ளிவாய்க்கால் தூபி அமைக்கப்பட்டபோது...



இடிக்கப்பட்ட பின்னர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் காலம் காலமாக நினைவு கூரல்கள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் இதுவரையில் இருந்த எந்தவொரு துணைவேந்தரும் செய்யத் துணியாத ஓர் காரியத்தை எமது இன் றைய துணை வேந் தர் தனது பதவியை தக்கவைத்துக் கொள்வதற்காக செய்து தமிழினத்தின் இழிசொல்லுக்கு ஆளாகியுள்ளார்.

கசாப்புக் கடைக்காரனிடம் ஆடு நியாயம் கேட்க முடியுமா? அது போல தான் தமிழர்கள் நாம் எம் உறவுகளை நினைவு கூர தூபி அமைக்க தென்னிலங்கையிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டிய எந்த அவசியமும் இல்லை. இனப்படு கொலையாளிகள் எமது நினைவு கூரும் உரிமையை தடுக்க எம்மவர்களே துணை போகின்றமை வரலாற்றில் மன்னிக்க முடியாத பெரும் துரோகச் செய லாக அமைந்து விடுகின்றது.

**-எஸ்.பி.எஸ்.பபிலராஜ்**

*(2019 இல் முள்ளிவாய்க்கால் தூபி அமைக்கப்பட்டபோது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர்)*



## மாணவர்களை நம்பியிருக்கிறது சமூகம்

2009 க்கு முன்னர் நெருக்கடியான காலப்பகுதிகளிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம், மாணவர் ஒன்றியம் என அனைத்தும் இணைந்தே தமிழ் தேசியத்தின் பக்கம் செயற்பட்டன. அதன் பின்னரான காலப்பகுதியில் உயர்பதவியில் அமர்வதற்கான தகுதிகளில் ஒன்றாக அரசாங்கத்துக்கு அடிபணிந்து கதிரையில் அமர்பவர்களாக துணைவேந்தர்கள் அமைவதனால் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு கட்டுப்பட வேண்டியவர்களாகின்றனர். இதற்கு பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் தூபி அகற்றப்பட்டமை ஓர் எடுத்துக்காட்டு. இவ்வாறு பல்கலைக்கழக உயர் மட்டங்கள் அரசின் பங்காளிகளாக செயற்படுமிடத்து மாணவர்களால் தமிழ்த் தேசியம் சார்ந்து எவ்வாறு செயற்படமுடியும். ஆனாலும் மன்னிக்கவே முடியாத இத் தேசத்துரோக செயற்பாட்டில் பங்காற்றிய பல்கலைக்கழக உயர்மட்டத்தை எதிர்க்க வேண்டியது மாணவர்களின் கடமை. ஏனெனில் எம் சமூகம் பல்கலைக்கழகம் சார்பில் மாணவர்களையே நம்பியிருக்கின்றது. அதே வேளை மாணவர்களுக்கு பக்கபலமாக கரங் கோர்க்க வேண்டியது காலத்தின் தேவை.

**-கிரிஷாந்த்**

*(2019 இல் முள்ளிவாய்க்கால் தூபி அமைக்கப்பட்டபோது யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர்)*

## எம்மவர்களைக் கொண்டே அழிக்கப்படும் எம் நினைவுகள்

பல வழிகளில் இன்னமும் அரசு இனவழிப்பை தொடர்ந்தபடி இருக்கின்றது. சிங்கள இனத்தையே முதன்மைப்படுத்தி, ஏனைய இனங்களை வந்தேறு குடிகளாக சித்திரிக்க அரசு முனைகின்றது. இனப்படுகொலையின் அடையாளங்களை, எம்மவர்களை வைத்தே அழிக்கும் கைங்கரியத்திலும் அது இறங்கியுள்ளது. யாழ்.பல்கலைக்கழத்திலும் அதுவே நடந்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தலுக்கு கூட பல தடைகள் போடப்பட்டிருந்தன. இப்போது அந்தப் படுகொலையை நினைவுபடுத்தும் தூபியும் இடித்தழிக்கப்பட்டிருக்கிறது. இது மக்களினதும், பல்கலைக்கழக மாணவர்களின் மனங்களையும் உடைத்திருக்கிறது. மீண்டும் அதே இடத்தில் முள்ளிவாய்க்கால் தூபி அமைக்கப்பட வேண்டும். அதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்களின் நியாயமான போராட்டத்துக்கு நாமும் துணை நிற்போம்.

**அருட்தந்தை .லியோ ஆம்ஸ்ட்ரோங்**

(முள்ளிவாய்க்கால் நினவேந்தல் பேரவை)

# சொற்சிலம்பம் போட்டி 29

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | |
| 6 | | | | ■ | 7 | | ■ |
| 8 | | | | 9 | | | 10 |
| | ■ | | ■ | | ■ | 11 | |
| ■ | 12 | | 13 | ■ | 14 | | |
| 15 | | | | 16 | | | ■ |
| | ■ | 17 | | | | ■ | 18 |
| 19 | | ■ | 20 | | ■ | 21 | |

அனுப்புபவர் பெயர்:......................................................

முழுமையான தபால் விலாசம்: ....................................

..................................................................................

கையொப்பம்:...................................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.திங்கள் தோறும், 5.திறப்பு, 6.மனம், 7.தாண்டகுதிக்க, 8.கதாகாலட்சேபம் நிகழ்த்துவர், 11.பார்க்குமாறான ஏவல், 12.பந்த பாசங்களைக் கைவிட்டவர், 14.பிள்ளைப் பாக்கியம் அற்றவள், 15.பிள்ளையை வயிற்றில் சுமக்கும் கால இடைவெளி, 17.பௌத்த மதத்தவர் இவரது போதனைகளையே பின்பற்றுவர், 19. செல்வம், 20.நூலால் நெய்யப்படுவது, 21.உடலுக்கு வடிவம் கொடுப்பது எலும்புகளும் இதுவுமே

## மேலிருந்து கீழ்

1.இறந்த உறவுகளுக்காக மேற்கொள்ளும் பிதிர்க்கடன், 2.தந்தை மற்றும் தாயாரது தகப்பனார், 3.மாதமொன்றின் முதலாம் நாள், 4.இளைய சகோதரன், 5.அந்தி சாயும் பொழுது, 7.உறவைப் பலப்படுவது இந்த வலைதான், 9.மன்மதன் மனைவி, 10.தோண்டுமாறான ஏவல், 12.தீதானது, 13.எதிர்பாராது இடம்பெறும் அசம்பாவிதம், 14.அழகும் மணமும் கொண்டது, 15.வீட்டுப் பானைப் பொருள்களில் ஒன்று, 16.தோடு இந்த வகையைச் சேர்ந்தது, 18.ஒட்டிக்கொள்ளும் தன்மை கொண்டது

### சொற்சிலம்பம் போட்டி 27க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.தேகநலன், 4.பதி, 6.வதம், 7.கரட் 8.தூர், 9.விசுவமடு, 11.படலை, 12.பாரி, 14.பருப்பு, 15.பாண், 16.உடும்பு, 17.தேரடி, 18.மைதா, 19.அகதி

**மேலிருந்து கீழ்**

1.தேவதூதர், 2.கதர், 3.நம், 4.தீவிரமான, 5.திட்டு, 7.கவலை, 9.விபரி, 10.சுட, 12.பாரும், 13.கண்டி, 14.படுதா, 15.பாரதி, 16.உமை, 17.தேக

**சொற்சிலம்பம் போட்டி இல.29**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**16.01.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 27இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**க.தையல்நாயகி,**
இந்திரகிரி, வதிரி கரவெட்டி

**2 ஆம் பரிசு**
**பொன்.கனகரத்தினம்,**
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை

**3 ஆம் பரிசு**
**ந.பாலகுமார்,**
சிவன் வீதி, காரைநகர்.

**4 ஆம் பரிசு**
**உ.அப்சரா,**
திருப்புகலி, கைதடி கிழக்கு, கைதடி.

**5 ஆம் பரிசு**
**செல்வி கோ.டுலக்ஷனா,**
பங்களா வீதி, மல்லாகம்.

சஞ்சீவி

# மாணவர் கழகம்

**180**



**பெயர்:** ம.லக்சிதா
**முகவரி:** மீசாலை வடக்கு, கொடிகாமம்.
**பி. திகதி:** 2014.06.15
**பாடசாலை:** மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை.

**181**



**பெயர்:** சிவரூபன் டினோஜன்,
**முகவரி:** அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
**பி. திகதி:** 2011.11.22
**பாடசாலை:** யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.

**182**



**பெயர்:** தே.மஹறியா
**முகவரி:** 74ஏ, டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
**பி. திகதி:** 02.10.2013
**பாடசாலை:** யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.

**183**



**பெயர்:** கு.வகிஷனா,
**முகவரி:** அளவெட்டி கிழக்கு, கும்பலை.
**பி. திகதி:** 2008.06.04
**பாடசாலை:** யா/ மகாஜனக் கல்லூரி.

**184**



**பெயர்:** திவாகரன் யாதவன்,
**முகவரி:** 42/1, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2007.07.26
**பாடசாலை:** யாழ்.இந்துக் கல்லூரி.

**185**



**பெயர்:** சுகநிதா கோடிஸ்வரன்
**முகவரி:** மைலு வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2008.07.23
**பாடசாலை:** யா/ இந்து மகளிர் கல்லூரி.

**186**



**பெயர்:** பரணிகன் கோடீஸ்வரன்
**முகவரி:** மைலு வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2005.03.07
**பாடசாலை:** யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**187**



**பெயர்:** தி.பங்கயன்,
**முகவரி:** இல.271, கரும்புள்ளியான், நட்டாங்கண்டல்.
**பி. திகதி:** 2008.05.14
**பாடசாலை:** மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்.

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..........................................................
2. முகவரி: ..........................................................
..........................................................
3. பிறந்த திகதி: ..........................................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................
5. கற்கும் தரம்: ..........................................................
6. தொலைபேசி இலக்கம்: ..................................................

.............................. ..............................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

0773165555

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
*sanjeevi@uthayan.com*

போர்க்களத்தில் துணிச்சலாக நின்றவர்கள். வீரமாகப் போரிட்டவர்கள். களத்தில் வெற்றிகளையும் சாதனைகளையும் ஈட்டியவர்கள். அந்தப் போரிலே காயமடைந்தவர்கள். எல்லாமே நம்முடைய விடுதலைக்காக, நாம் கனவு கண்ட தேசமொன்றுக்காக. இப்பொழுது எல்லோரும் முதிர்கன்னிகளாகத் தனித்துக் கை விடப்பட்டுள்ளனர்.

சிக்மலிங்கம் றெஜினோல்ட்



# ஆர் கவனிப்பினம்?

கதை

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு தொலைபேசி அழைப்பு. புதிய இலக்கம். “அண்ணா, வணக்கம். நலமாக இருக் கி றீங்களா? என்னை யாரெண்டு தெரியுதா?” கேட்ட குரல் தான். ஆனால் சட்டென அது யாரென்று அடையாளம் காண முடியவில்லை. யாராக இருக்கும்?

ஒரு நிமிசம் அப்படியே அமைதியாக நான் நிற்க, “அண்ணா, நான்....” என்று அவர் தன்னை அறிமுகப்படுத்த முயன்றார். உடனேயே யாரென்று தெரிந்தது.

“ஓ...தெரியும். (அவருடைய பெயரைச் சொல்லி) எப்பிடியிருக்கிறியள்? எங்க இருக்கிறீங்கள்?” என்று கேட்டேன். அந்தக் கேள்வியை அவரிடம் கேட்க முடியாது. கேட்கவும் கூடாது. ஏனென்றால், அந்தக் கேள்விகளுக்கு அவரால் பதில் சொல்லவே முடியாது என்று எனக்குத் தெரியும். ஆனாலும் எதேச்சையாக வேறு வழியின்றி அப்படிக் கேட்டு விட்டேன்.

“இருக்கிறன்” என்றார் மிகச் சோர்வாக.

யுத்தத்தில் தப்பிப் பிழைத்து, ஏராளம் நெருக்கடிகள், பிரச்சினைகளையெல்லாம் சந்தித்து, யாரோ ஒரு தெரிந்தவரின் தயவில் வத்தளையிலிருந்தார். அப்படி ஒருவரின் உதவி கிடைத்திருந்தாலும் அவரால் அங்கிருக்க முடியாது. அப்படித்தானிருந்தாலும் தொடர்ந்தும் அங்கே இருக்கவியலாது என்று எனக்குத் தெரியும். அதையே அவரும் சொன்னார்.

காரணம், யுத்த காலத்திலேயே அவர் எழுந்து நடமாட முடியாத நிலையிலிருந்தார். போர்க்களத்தில் ஏற்பட்ட காயம், அவருடைய முள்ளந்தண்டை இயக்கமில்லாமல் செய்து விட்டது. அதனால் அவரை ஏனைய போராளிகளே கவனித்தனர். தேவையான ஏனைய ஏற்பாடுகளை இயக்கம் கவனித்துக் கொண்டது.

இப்பொழுது அதெற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. அவருக்குப் பெற்றோருமில்லை. சகோதரர்களும் இல்லை. இந்த நிலையில் இன்னொருவருடைய முழுமையான உதவியில்லாமல் தன்னுடைய அடிப்படைத் தேவைகளைக் கூடச் செய்ய முடியாமல் அவரால் எப்படி இருக்க முடியும்?

“வத்தளையில் தொடர்ந்தும் இருக்க வாய்ப்பில்லை அண்ணா” என்றவர், “கிளிநொச்சியில ஒரு காணி இருக்கு. அதில சின்னதாக ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கலாம் எண்டு யோசிக்கிறன். அதுக்கு உதவ முடியுமா?” எனக் கேட்டார்.

அவருடைய நிலைமை விளங்கியது. ஆனால், அவர் விரும்புவதைப்போல, அவருடைய காணியில் உடனடியாக ஒரு வீட்டைக் கட்டுவதும் அதிலே அவர் வந்து தனியாக இருப்பதும் எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்று தெரியவில்லை. ஆனாலும் அவருக்கு அதை விட வேறு வழிகளோ தெரிவுகளோ இல்லை என்றும் புரிந்தது.

இதற்கு என்ன செய்வது? அவருக்கு என்ன பதிலைச் சொல்வது? மாற்று ஏற்பாடாக எதைச் செய்வது? ஒன்றுமே எனக்குப் புரியவில்லை.

இந்த நிலையில் அந்தப் பெண் போராளி என்ன செய்வார்? இதையிட்டு அவரை விடத் துக்கமான நிலையில் இப்போது நானிருக்கிறேன். மனதில் விடையற்ற கேள்விகளே நிரம்பிக் கொண்டிருக்கின்றன. அவர் ஒரு பெண் போராளி. நடக்கவோ தனியாக இயங்கவோ முடியாதவர். இப்பொழுது அவருக்கு 45 வயதுக்கு மேலாகிறது. இந்த நிலையில் பிறருடைய தயவில் எத்தனை நாள்களுக்குத்தான் அவரால் தாக்குப் பிடித்து வாழ முடியும். உடல் உபாதைகள், பிரச்சினைகளை விட, உளரீதியாக அவர் எவ்வளவு அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் சந்தித்துக் கொண்டிருப்பார்? இப்படியிருக்கும் பெண் போராளிகள் ஒருத்தரோ ஒரு சிலரோ அல்ல. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர். எல்லோரும் 45 வயதைக் கடந்து கொண்டிருக்கிறார்கள். அதிகமானவர்களுக்கு போரிலேற்பட்ட உடற்காயங்கள். சிலருக்கு கையோ, காலோ, கண்ணோ இல்லை. சிலருக்குக் கையும் கண்ணுமில்லை. சிலருக்குக் காலும் கையுமில்லை. சிலருக்குக் கண்ணும் காலுமில்லை. சிலர் எழுந்து நடமாடவே முடியாமல் படுக்கையிலிருக்கிறார்கள்.

பாண்டவரின் வனவாசக் காலம் 12 ஆண்டுகள். அது வரையிலும் அவர்கள் ஏராளம் பாடுகளைச் சந்தித்தனர். அது முடிய அவர்கள் அஸ்தினாபுரத்தில் ஆட்சியை அமைத்தார்கள். எமக்கு யுத்தம் முடிந்து 12 ஆண்டுகள் முடியப்போகிறது. ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட பெண் போராளிகளின் வாழ்க்கையைக் குறித்துக் கூட நாம் சரியாகச் சிந்திக்கவில்லை இன்னும்.

ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் திக்கற்ற நிலையிலேயே உள்ளனர். சாதாரண பெண்களுடைய வாழ்க்கையே பல நெருக்கடிகளைக் கொண்டது. அப்படியிருக்கும்போது போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் நிலை எப்படியிருக்கும்? அவர்கள் தங்களுடைய படிப்பை இடையில் கைவிட்டவர்கள். இளமையின் நாட்களைப் பொது வாழ்விற்கென, மக்களின் விடுதலைக்கென அர்ப்பணித்துச் செயற்பட்டவர்கள். கடினங்களையெல்லாம் எதிர்கொண்டு போராடியவர்கள்.

போர்க்களத்தில் துணிச்சலாக நின்றவர்கள். வீரமாகப் போரிட்டவர்கள். களத்தில் வெற்றிகளையும் சாதனைகளையும் ஈட்டியவர்கள். அந்தப் போரிலே காயமடைந்தவர்கள். எல்லாமே நம்முடைய விடுதலைக்காக, நாம் கனவு கண்ட தேசமொன்றுக்காக. இப்பொழுது எல்லோரும் முதிர்கன்னிகளாகத் தனித்துக் கை விடப்பட்டுள்ளனர்.

இவர்களைப்பற்றி, இவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி, இவர்களின் எதிர்காலத்தைப்பற்றி இன்று நம்முடைய கவனமென்ன? கரிசனை என்ன? இவர்களுக்கு என்ன சொல்லப்போகிறோம்? என்ன கொடுக்கப் போகிறோம்? வழமையைப்போல வெறும் கை விரிப்புத்தானா? இதுவரையும் செய்ததைப்போல கண்டு கொள்ளாமலே கடந்து சென்றுவிடுதலா?

காட்சி

இப்போது அந்தப் பெண் போராளி வன்னிக்கு வந்து, இந்த மாதிரியான நிலையில் உள்ளோருக்கான ஒரு பராமரிப்பு நிலையத்திலிருக்கிறார். இவரைப்போல கதியற்ற பலர் இங்கேதானிருக்கிறார்கள். 30 போராளிகளுக்கு மேல். இது அவர்களைப் பொறுத்தவரையில் ஓரளவுக்கு ஆறுதலும் பாதுகாப்பும். ஆனால், . இங்கே எவ்வளவு காலம் இவர்களால் இருக்க முடியும் என்று தெரியவில்லை. என்றாலும் முடிந்த வரையில் அங்கே இருப்பது ஒன்றுதான் வழி. அதைவிட வேறில்லை. ஆனாலும் இப்படியே இங்கு தொடர்ந்தும் இருக்க முடியுமா? இப்படியே வாழ முடியுமா? என்பது கேள்வியே.

இந்தப் பராமரிப்பு நிலையம் புலம்பெயர் தேசத்திலிருக்கும் ஒருவரின் ஏற்பாட்டால் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதுவரையிலும் இவர்களை - இந்த நிலையத்தை எந்தக் கட்சியும் எட்டிப்பார்த்ததில்லை. எந்தத் தலைவருக்கும் இங்கே செல்ல வேணும் என்று தோன்றவில்லை. இவர்களுக்கோ, இந்த நிலையத்துக்கோ தங்கள் நிதியிலிருந்து ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் வரவுமில்லை.

ஆனால், எதையும் எதிர்பார்க்காமல் இந்த மாதிரிப் பாதிக்கப்பட்டோரைப் பராமரிக்கும் மூன்று நான்கு நிலையங்கள் தன்னார்வம் கொண்ட மனிதாபிமானிகள் சிலரால் நடத்தப்படுகின்றன. அவர்களாலும் எவ்வளவு காலத்துக்குத் தனித்து இதைச் செய்ய முடியும் என்று தெரியவில்லை. எப்படியும் இவற்றை இப்படியே தொடர்ந்து செய்ய முடியாது. இதற்கு ஒரு நிரந்தரத்தீர்வு காண வேண்டும் என்பதே உண்மை.

நிலை

2009 க்குப் பிறகு பெண் போராளிகளின் நிலைமையைப் பற்றி நம்முடைய சமூகம் கரிசனையே கொள்ளவில்லை என்பது துயரமே. அதை விட இது வெட்கக்கேடானது. இவர்களைப் பற்றிக் கரிசனை கொண்டு கவனமெடுத்திருந்தால், பலருக்கு நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கியிருக்க முடியும். அவர்களுடைய தனிமையைப் போக்கி, குடும்ப வாழ்க்கையில் இணைத்திருக்கலாம். தொழில் வாய்ப்புகளை உருவாக்கியிருக்கலாம். நிரந்தர உதவி தேவைப்படுவோருக்கு பொருத்தமான உதவி அல்லது ஆதரவுக் கட்டமைப்பை உருவாக்கியிருக்க முடியும். இதெல்லாம் நிச்சயமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டியவை. ஏனெனில் நம்முடைய கனவுகளுக்காகத் தங்களுடைய உயிருள்ள வாழ்க்கையை அர்ப்பணித்த பெண்கள், போராளிகள், பெண் தேவதைகள் இவர்கள்.

ஆனால், நாங்கள் என்ன செய்தோம்?

“இயக்கமிருந்திருந்தால், போராட்டத்தில நாங்கள் வெற்றியடைஞ்சிருந்தால், எங்கடை கதை வேறாக இருந்திருக்கும். அப்ப எங்களை எல்லாரும் மதிச்சிருப்பினம்... இப்ப, இந்த நிலையில ஆர்தான் கவனிக்கப்போகினம்?....” என்று கண்களில் கண்ணீர் தளும்பச் சொன்னார், இன்னொரு பெண் போராளி. அவருக்கு ஒரு கையும் கண்ணொன்றுமில்லை. அதைத் தின்றதும் நம்முடைய தேசவிடுதலைக் கனவுதான்.


நாமோ கண்ணிருந்தும் குருடராக... காலிருந்தும் முடவராக... கையிருந்தும் விளங்காதோராக...



பதற வைக்கும் பகீர் தகவல்கள்

# மருதனார்மடம்

## சந்தைக் கொத்தணி



# யார் பொறுப்பு?

பாதிக்கப்பட்டோருக்கு பதில் கூறுவது யார்?

## நடவடிக்கை எடுக்க வடக்கு ஆளுநர் தயங்குவது ஏன்?

### கூட்டுப் பொறுப்பில் விரிசல்

உசிலமணி

முடிவு தெரியாமல் ஓடிக் கொண்டிருக்கும் நதிபோல, விரிந்து விசாலமாகப் பரவிக் கொண்டே போகின்றது மருதனார்மடம் கொத்தணியின் தொற்றாளர்கள் எண்ணிக்கை. மருதனார்மடம் சந்தைக் கொத்தணி உப கொத்தணிக் குட்டிகளையும் போடும் அபாயம் இல்லாமல் இல்லை. ஆபத்துடன் கூடவே வாழ்ந்து கொண்டிருந்தாலும் 'மருதனார்மடம் சந்தைக் கொத்தணியை' சிந்தனையில் ஏற்றாது தனது இயல்பு வாழ்வுடன் நகர்கின்றது யாழ்ப்பாணம். தன் வாசல் படியை 'கொரோனா' தட்டும் வரையில் பொதுச் சிந்தனை என்பது யாழ்ப்பாணத்தவர் எவருக்கும் உதிக்கப் போவதில்லைத்தான்.

**மருதனார்மடம் சந்தை**

வலிகாமத்தின் இதயபூமியில் மருதனார்மடம் சந்தியில் அமைந்துள்ளது மருதனார்மடம் பொதுச் சந்தை. வளம் கொழிக்கும் வலிகாமத்தில் உற்பத்தியாகும் விவசாயப் பொருள்களின் சங்கமம் இங்குதான். இலங்கைக்கு ஓர் தம்புள்ள போல யாழ்ப்பாணத்தின் குட்டித் தம்புள்ளவாக இயங்கிக் கொண்டிருந்தது மருதனார்மடம் பொதுச் சந்தை.

சூரியன் கண் விழிக்க முன்னரே களை கட்டத் தொடங்கிவிடும் மருதனார்மடம் சந்தை. சராசரியாக ஒரு நாளைக்கு 3 ஆயிரம் பேர் வரையில் நுகர்வுக்காக வந்து செல்கின்றனர். திருமணக் காலங்களில் விசேட நிகழ்வுகளின் காலத்தில் இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகம்.

240 மரக்கறி வியாபாரிகள் கடை வைத்துள்ளனர். சராசரியாக உள்ளூர் விவசாயிகள் 300பேர் வரையில் தமது உற்பத்திப் பொருள்களை இங்கு வந்து விற்பனை செய்கின்றனர். மருதனார்மடம் சந்தையை குத்தகைக்கு கொடுப்பதன் ஊடாக வலி. தெற்கு பிரதேச சபை ஒரு நாளைக்குப் பெற்றுக் கொள்ளும் வருமானம் 65 ஆயிரம் ரூபா. சந்தையில் நடக்கும் வியாபாரத்தின் ஒட்டுமொத்த லாபம் ஒரு நாளைக்கு ஒரு லட்சத்தைத் தாண்டும்.

சந்தையின் வெளிப்புறமாக பிரதேச சபைக்குச் சொந்தமான 39 கடைகள் உள்ளன. மருதனார்மடம் பொதுச் சந்தையில் மொத்தமாக 350பேர் வரையில் வர்த்தகர்கள், உதவியாளர்கள் என இயங்குகிறார்கள்.

**பூர்த்தியாகும் ஒரு மாதம்**

இன்னும் இரண்டு நாள்களில் தனது பிறப்பின் முதலாவது மாதத்தை பூர்த்தி செய்கின்றது 'மருதனார்மடம் சந்தைக் கொத்தணி'. ஆனால் இதுவரையில் இந்தக் கொத்தணியின் மூலவேர் கண்டறியப்படவுமில்லை, அதற்கான நோக்கங்களும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பரவல் தனித்து தமிழர்களின் மாவட்டமான யாழ்ப்பாணத்தில் வீரியம் காட்டியதால் ஆட்சிப் பீடத்தின் அசிரத்தை தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

ஒரு மாதமாக மூடப்பட்டிருக்கின்றன மருதனார்மடம் சந்தையும் அதனோடு இணைந்த வர்த்தக நிலையங்களும். பிட்டுக்கு மண் சுமக்க வந்த சிவபெருமான் முதுகில் விழுந்த அடி எல்லோர் முதுகிலும் விழுந்ததைப் போன்று, மருதனார்மடம் சந்தையால் வடக்கின் எல்லாச் சந்தைகளுமே மூடு விழாக்கண்டன.

இந்த ஒரு மாதத்தில் ஏற்பட்ட இழப்புக்களை இவற்றை மூட உத்தரவு போட்ட அதிகாரிகளோ, மக்களின் பிரதிநிதிகள் என்று மகுடம் சூட்டிக் கொண்டவர்களோ கணக்கிடவில்லை. விவசாயி தொடங்கி வர்த்தகர் வரையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் வகையான நட்டங்கள்.







**இழப்புக்கள்**

மருதனார்மடம் சந்தையால் தனிமைப்படுத்தல், தொற்றாளராக உறுதியானால் சிகிச்சை நிலையம், குடும்பத்தினர் தனிமைப்படுத்தல் என்று ஒட்டுமொத்தமாக ஒதுக்கி வைக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் வருமான இழப்புக்கு 'கொடையளிக்கும் கோத்தா அரசின்' 5 ஆயிரம் ரூபா போதுமா? போட்டதைப்போட்டபடி விட்டு விட்டு குண்டுத் தாக்குதலுக்கு பயந்தோடியதைப் போன்று, அதிகாரிகளின் தடாலடி அறிவிப்பால் மூடப்பட்ட வர்த்தக நிலையங்களிலிருந்த எத்தனை பொருள்கள் தங்கள் காலாவதித் திகதியைக் கடந்திருக்கும்.


குப்பைத் தொட் டிக்குள் போகும் அவற்றுக் குப்போட்ட முதலீட்டை, வர்த்தகர்களுக்கு யார் கொடுப்பார்கள்?
வீதிகளைச் சந்தைகளாக்கி விட்ட பெருமை, குளிரூட்டிய அறைக்குள் சுழல் கதிரைகளிலிருந்து முடிவுகளை எடுக்கும் 'சம்பளத்துக்கு கடமை செய்யும்' அதிகாரிகளையே சாரும். அப்படி அவர்களால் வீதியோரம் முளைக்கும் 'நவீன சந்தை' வியாபாரிகள் கேட்கும் விலைக்கு கொடுத்து விட்டு, மரக்கறிக்குரிய இறைப்புக் கூலியைக் கூட பெற முடியாமல் தவிக்கும் விவசாயியின் இழப்புக்கு யார் பதில் சொல்வார்?

## பொறுப்பற்றதனம்


மருதனார்மடம் சந்தைக் கொத்தணி தொடர்பில் துறைசார் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் பொறுப்பற்றதனமே இன்று பல லட்சம் பேருக்கு மில்லியன் கணக்கான ரூபா இழப்புக்களை ஏற்படுத்தி நிற்கின்றது. முடிவு தெரியாத இந்தக் கொத்தணியால் பலர் வீதிக்கு வரும் நிலைமையும் வரலாம். ஆனால் இது உருவாகுவதற்கு காரணமாக இருந்தவர்கள் தொடர்பில் எந்தவொரு தரப்பும் கவனத்தைக் குவிக்கவில்லை. மாகாண நிர்வா கத்தின் கீழ் முழுமையான இந்த விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் கூட ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இதுவும் அதிகாரிகளின் பொறுப்பற்றதனத்துக்கு ஊக்குவிப்புப் பரிசு வழங்குவதாக இருக்கின்றது.



மருதனார்மடம் கொத்தணி ஏற்பட முன்னர் 20.11.2020 அன்று நீதிமன்றுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் முன்வைத்த அறிக்கை



மருதனார்மடம் சந்தை தொடர்பில் 18.05.2020 அன்று பொதுச் சுகாதார பரிசோதகர் அனுப்பிய கடிதம்.



கொரோனா இரண்டாம் அலையின் பின்னர் 02.11.2020 அன்று பொதுச் சுகாதார பரிசோதகர் அனுப்பிய கடிதம்.

## எச்சரிக்கை

கொரோனா முதலாவது அலை முடிந்த சில நாள்களிலேயே மருதனார்மடம் சந்தை , கொரோனாப் பரவலுக்கு ஏதுவாகக் காணப்படுகின்றது என்ற எச்சரிக்கைக் கடிதம் முதன் முதலில், அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் உடுவில் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டிருந்தது.
'11.05.2020 இலிருந்து பொதுச் சந்தையின் நிர்வகிப்பு தொடர்பில் சட்ட அதிகாரங்களையும், ஆளணிகளையும் கொண்டுள்ள பிரதேச சபையானது, பொதுச் சந்தையை கொரோனா கட்டுப்பாட்டுக்கு ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தாமையும் கொரோனா கட்டுப்பாடு தொடர்பில் தாக்கம் செலுத்தும் காரணியாகவுமுள்ளதாக' அந்தக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொடர் கடிதங்கள்

கொரோனா இரண்டாம் அலை உருவாகிய பின்னரும் மருதனார்மடம் சந்தையின் ஆபத்துக்கள் குறித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிக்கு 12.10.2020, 26.10.2020, 02.11.2020 ஆகிய தினங்களில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
'பல தடவைகள் பரிசோதனை அறிக்கை ஊடாக வலி. தெற்கு பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தும், அவை பெரும்பாலும் நிவர்த்தி செய்யப்படாது தொடர்ந்தும் கொரோனா பரவுவதற்கான ஏதுவான ஆபத்துக் காரணிகளுடன் மருதனார்மடம் பொதுச் சந்தை இயங்கி வந்துள்ளது.
இங்கிருந்து பல வியாபாரிகள் தம்புள்ள, கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்று மரக்கறிகளைக் கொண்டு வருவதுடன் இங்கிருந்து மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்காக வேறு இடங்களில் உள்ளவர்களும் வந்து செல்கின்றனர்.
தற்போதைய கொரோனா வேகமான பரவல் நிலைமையை கருத்தில் கொண்டு அதற்கான ஆபத்துக் காரணிகளை குறைக்கும்பொருட்டு மருதனார் மடம் பொதுச் சந்தையின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். தவறுமிடத்து பலருக்கு தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு' என்று மருதனார்மடம் கொத்தணி கண்டுபிடிக்கப்படுவதற்கு சரியாக 39 நாள்களுக்கு முன்னரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

## வழக்கு

மருதனார்மடம் பொதுச் சந்தையால் கொரோனா பரவல் அபாயம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 20.11.2020 அன்று, பொதுச் சுகாதார பரிசோதகரால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் கொரோனாப் பரவலுக்கு ஏதுவான காரணிகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
'இங்கு வெளி இடங்களான தம்புள்ள மற்றும் கொரோனா நோய் தீவிரமாக பரவுகின்ற கொழும்பு போன்ற இடங்களிலிருந்து பல வியாபாரிகள் தமது வியாபாரப் பொருள்களை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இத்தகையவர்கள் ஊடாக சந்தையுடன் தொடர்புபட்டவர்களுக்கு கொரோனா கடத்தப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு நோய்த் தாக்கம் ஏற்படுமாயின் அது பெரியளவிலான சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்பதுடன் அதன் பின் கட்டுப்படுத்துவது கடினமாகும்' என்று முற்கூட்டிய எச்சரிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பிட்டுள்ளது. கொரோனாத் தொற்று அபாயத்தை தடுப்பதற்கு 9 விடயங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற பரிந்துரை பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.
'சந்தையை புதிய கட்டடத்துக்கு மாற்றுதல், வெளிமாவட்ட வியாபாரிகள் வந்து செல்ல ஒரு நேரமும், உள்ளூர் வியாபாரிகள் வந்து செல்ல பிறிதொரு நேரமும், நுகர்வோர் வந்து செல்ல இன்னொரு நேரமும் ஒதுக்கி அந்த நேர அட்டவணையைக் காட்சிப்படுத்தல், வெளிமாவட்டம் சென்று வரும் வியாபாரிகளின் பதிவுகளைப் பேணல், மொத்த வியாபாரிகள் மற்றும் விவசாய உற்பத்திகளைக் கொண்டு வருவோர் உள்நுழைய, வெளியேற தனியான வழிகளும், நுகர்வோர் உள்நுழைய வெளியேற தனியான வழிகளும் அடையாளப்படுத்தப்படவேண்டும், பொதுச் சந்தைக்குள் நுழையும் ஒவ்வொரு இடத்திலும் 4 குழாய் நீர் தொகுதிகள் வைக்கப்பட்டு அங்கு சவர்காரம் தொடர்ச்சியாக வைக்கப்படவேண்டும் என்பதுடன் இவை தொடர்பில் தொடர் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும்' என்ற முக்கிய பரிந்துரைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் முன்வைக்கப்பட்டிருந்தது. மன்று அதனை நடைமுறைப்படுத்துமாறும் கட்டளையிட்டிருந்தது.

## முன்னேற்றம் இல்லை

இதன் பின்னர் 25.11.2020 அன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நீதிமன்றுக்கு முன் வைத்த அறிக்கையில், தாம் முன்வைத்த முக்கிய பரிந்துரைகள் செயற்படுத்தப் படவில்லை என்று கூறியுள்ளார். இதன் பின்னரும் 09.12.2020 அன்று நீதிமன்றுக்கு முன்வைத்த அறிக்கையிலும், விலை கூறும் இடத்தில் அதிகளவானோர் ஒன்று கூடுகின்றனர் என்பதும், நேர அட்டவணை காட்சிப்படுத்தப்படவில்லை என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒத்துழைப்பின்மை

பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாத இவ்வாறானதொரு சூழலிலேயே, எழுமாற்றுப் பரிசோதனையில் மருதனார்மடம் சந்தையில் வியாபாரம் செய்பவரும், மருதனார்மடம் சந்தியில் முச்சக்கர வண்டிச் சாரதியுமாக உள்ளவர் கொரோனாத் தொற்றுடன் 11.12.2020 அன்று அடையாளம் காணப்பட்டார்.
உடனடியாகச் சந்தை வியாபாரிகள் அதனுடன் தொடர்புடையோர் என்று பல தரப்பினருக்கும் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 151பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட, மருதனார்மடத்தில் புதிய கொரோனாக் கொத்தணி கண்டுபிடிக்கப்பட்டது.

## குற்றச்சாட்டுக்கள்

மருதனார்மடம் சந்தைக்கு பொறுப்பாக இருப்பது சுன்னாகம் வலி.தெற்கு பிரதேச சபை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட சபை. தவிசாளர் தர்சன் தங்கள் சபை மீது வேண்டுமென்று களங்கம் கற்பிப்பதற்காகவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன என்று கூறுகின்றார்.
'மருதனார்மடம் புதிய சந்தைக் கட்டடத் திறப்பு விழாவைத் தடுப்பதற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகவே இதனை நாம் சந்தேகிக் கின்றோம். பிரதேச சபையின் பெயரைக் கெடுப்பதற்காக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை இது' என்று தர்சன் குறிப்பிடுகின்றார்.
பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அனுப்பப்பட்ட முன்னெச்சரிக்கைக் கடிதங்கள், உடுவில் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரியிடமிருந்து தமது சபையின் செயலருக்கு கிடைத்ததை ஏற்றுக் கொள்ளும் அவர், அந்தக் கடிதங்கள் சுன்னாகம்

(21ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவி சிறுகதை

# தெய்வம்...



○ மனோ சின்னத்துரை

இரவு பதினொரு மணியிருக்கும். சதீஸிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. நடுங்கும் குரலில் பேசினான். தெளிவாக இருக்கவில்லை. வீட்டில் தனியாக இருக்கிறான். என்ன ஆபத்தோ தெரியவில்லை. நானும் போக முடியாது. தடுமாறிக்கொண்டிருந்தேன்.

“என்ன சதீஸ் ஏதாவது பிரச்சினையா?”

ஏதோ சொல்ல முயன்றான். புரியவில்லை. திரும்பவும் அழுத்திக்கேட்டேன்.

“திரான்ஸி வைத்தியசாலையில் நிற்கிறேன் எனச் சொன்னான்.

“ஏன் அங்க போனனீங்கள்?”

“ எனக்கு ஏலாம வந்து, பொம்பியே வந்து கொண்டுபோனது”

“ஏன்? என்ன பிரச்சினை?”

அவனிடமிருந்து பதிலில்லை.

எனக்கு நெஞ்சு படபடத்தது.

“சதீஸ் ஏதாவது பிரச்சினையா?”

அவன் ஈனக்குரலில் மெதுமெதுவாக அனுங்கினான்,

“அண்ணை வீட்டை போகவேணும். ஏதாவது உதவி செய்வீங்களா?”

“இப்ப ஏன் உங்க போனனீங்கள்?”

“அண்ண, அதுதானே சொன்னன் ஏலாம வந்து பொம்பியே வந்ததெண்டு...”

அவனது குரலில் மெல்லிய எரிச்சல் கலந்திருந்தது.

“இப்ப எப்பிடி இருக்கு?”

“இப்ப ‘ஓகே’ என்று டொக்டர் சொல்றார்”.

“அவை ஏதாவது ரெஸ்ற் செய்தவையே?”

“செய்தவை”

“பிரச்சினை ஒண்டும் இல்லைத்தானே?” ஆர்வமும் பயமும் தொடரக் கேட்டேன்.

“இல்லை பொசிற்றிவ்வாம்”

“என்ன... என்ன??!” எனது குரல் உயர்ந்தது.

“இல்ல, பொசிற்றிவ்வாம்” அவனது குரல் சோர்ந்திருந்தது.

எனக்குத் ‘திக்’ கென்றது.

“அப்ப ஏன் வீட்டை?”

“ ஹொஸ்பிற்றல்ல இடமில்லையாம்”

“அப்ப, அவை கொண்டு போய் விடமாட்டினமாமோ?”

“இல்லையாம். நான் தனிய மெல்லமெல்லப் போவன். ஆனால் பஸ் எடுத்து, ட்ராம் எடுத்துப் போக மற்ற ஆக்களுக்குத் தொத்தியிடுமே எண்டுதான் யோசிக்கிறன்”

இந்த நிலையிலும் அடுத்தவர் மேலுள்ள அவனது அக்கறை என்னைக் கசியச்செய்தது. அதேவேளை இந்தப்பெரிய நாட்டினது அரச இயந்திரத்தின் பொறுப்பற்ற தன்மையை நினைக்கக் கோபம் கோபமாக வந்தது.

பிறகு என்ன..? தனிமைப்படுத்தல், சங்கிலி உடைத்தல் என்ற வறுத்தெடுத்தல்கள்! இயலாமை என்பது வேறு,பொறுப்பற்ற தனம் என்பது வேறு.

என்னைப் பயம் தொற்றிக்கொண்டது. நோய் இல்லையென்றால் பிரச்சினையில்லை.

கொரோனா நோயாளியான சதீஸுக்கு நான் எப்படி உதவுவது? இந்த இடத்தில் நான் எப்படி அவனைத் தவிக்க விடுவது? அவன் இலகுவில் உதவி கேட்கக் கூடிய ஆள் இல்லை. இப்போ கேட்டுவிட்டான். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

அந்தக்கணத்தில் நான் சதீஸுடன் என்ன உரையாடினேன் என்பது நினைவில்லை. சம்பந்த சம்பந்தமில்லாமல் ஏதேதோ அலம்பியிருப்பேன். அவனுக்கு உண்மையில் உதவ விரும்பினேன். ஆனால், பயம் என்னை விரட்டியது. சிறிது நேரத்தில் அவனது தொலைபேசி துண்டித்துக்கொண்டது. விபத்தா அல்லது அவனாகத் துண்டித்தானா தெரியவில்லை.

குற்ற உணர்வில் நான் துவண்டேன். அன்று இரவு முழுவதும் அவனை மாறிமாறி அழைத்துக் கொண்டிருந்தேன். தொடர்பில்லை.

தொடர்ந்து நான்கு நாட்கள். ஐந்தாவது நாள் ‘ஹலோ’ என்றான். கடவுளைக் கண்டது போல இருந்தது.

“சதீஸ் என்ன நடந்தது அண்டைக்கு?” ஆவல் மேலிடக் கேட்டேன்.

“இல்லை அண்ணை, உங்கட இடத்தில நானிருந்தாலும் வந்திருக்க மாட்டேன் “என்று அவன் சொன்னபோது மெதுவாக ஆசுவாசம் அடைந்தேன். அவன் யதார்த்தத்தை, நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துகொண்டிருந்தான்.

“ பிறகு எப்பிடி வீட்டை போன்னீங்கள்?”

“றஷீத்துக்கு போன் பண்ணினனான். அவன் றிஸ்க் எடுத்து வந்தான்” என்றவன் தனது மீதிக் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

★ ★ ★ ★ ★ ★

றஷீத் வந்தபோது நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

நான் வைத்தியசாலை வரவேற்பறையில் ஒதுங்கியிருந்தேன். காலில் போட்டிருந்த வீட்டுச்செருப்புடன். நோய்த்தொற்று என்னில் இருக்கும் செய்தி வைத்தியசாலையின் அந்த வட்டத்துக்குப் பரவியிருந்தது.

எல்லோரும் பயத்தோடும் வெருட்சியோடும் என்னைப் பார்த்தனர். அங்குள்ள தாதிமாரிடம் உதவிகேட்டபோது அவர்கள் கேளாதது போல பயத்தில் விலகினர். மூக்கு அடைப்பது போலிருந்தது. சீறினேன். இரத்தம் வந்தது. எழுந்து அந்தக் கடுதாசியைப் போடப் போகக் கூடப் பயமாக இருந்தது. மடித்து பொக்கற்றினுள் வைத்தேன்.

றஷீத் அழைத்தான். அவனது கார் பலத்த பாதுகாப்பாக இருந்தது. அவன் கையுறை, முகக்கவசம் எல்லாம் அணிந்திருந்தான். அவனை அடையாளம் காண்பது அவ்வளவு இலகுவானதல்ல. காரின் பின் ஆசனத்தை பொலித்தீனால் கவர் பண்ணியிருந்தான். காரில் தொடாது நான் ஏறுவதற்காக அவன் பின் கதவைத்திறந்து வைத்திருந்தான் . தனக்கும் எனக்கும் இடையில் கண்ணாடி மறைப்பொன்றைப் போட்டிருந்தான். வீடு திரும்பியதும் எப்படியும் காரைக் கழுவுவான் என்பதை ஊகித்துக்கொண்டேன் .

கார்ப் பயணத்தின் போது றஷீத் எனக்கு நம்பிக்கை தரும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டே வந்தான். அவை எனக்கு மிகுந்த தென்பைத்தந்தன. இந்த வேளை அவன் எனக்குத் தெய்வம் போலவே இருந்தான்.

கார் வீட்டை அடைந்தது. அவன் இறங்கிவந்து மிகக்கவனமாக பின்கதவைத் திறந்துவிட்டான். கேற்றிலிருந்து எனது வீடு 50 மீற்றர் தூரத்தில் இருந்தது. அவன் என்னுடன் உள்ளேவர எத்தனித்தான். நான் அனுமதிக்கவில்லை. அதற்கு மேலும் அவனைத் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. றஷீத் நான் போய்க் கதவு திறக்கும் வரை என்னையே பார்த்தபடி நின்றான். உள்ளே போனதும் கட்டிலில் விழுந்தேன். றஷீத் என் கனவில் சஞ்சரித்துக்கொண்டிருந்தான். என் கண்கள் நனைந்தன.

அடுத்தநாள் காலை எழுந்தேன் . பசிப்பதுபோல இருந்தது. இல்லாவிட்டாலும் சாப்பிடவேண்டும் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. எழுந்து சமைக்க முடியவில்லை. நான் இருந்த அதே வளவுக்குள் என் வீட்டு உரிமையாளரும் வசித்தார்; அவரும் ஒரு தமிழர். நான் வசித்த சிறிய வசிப்பிடத்தின் முன்புறமாக அவரது வீடு இருந்தது. எனது வசிப்பிடத்திற்கும் அவரது வீட்டுக்கும் இடையில் 30 மீற்றர் நடைபாதை இருந்தது. நடுத்தர வயதான அவர் தனது குடும்பத்துடன் வசித்து வந்தார். நான் கூச்சத்தைவிட்டு அவரிடம் உதவி கோரினேன். இடியப்பமும் சொதியும் சாப்பிட்டால் நல்லது போல இருந்தது. ஆனால் நான் கேட்கவில்லை. எதையாவது தந்தாலும் பரவாயில்லை என்றே தோன்றியது.

“தம்பி குறைநினைக்காதேயும்” என்றார்.

“அங்கிள் நீங்கள் நடுவழியில கொண்டந்து வைச்சிட்டுப் போனால் போதும். நான் வந்து எடுத்துக் கொள்கிறேன்” என்றேன்.


“பாத்திரங்கள்கூட நீங்கள் பாவிக்கத் தேவையில்லை. ஒரு பொலித்தீன் பைக்குள் போட்டுத் தந்தால் போதும்” என்று மேலதிக பாதுகாப்பு ஆலோசனையையும் வழங்கினேன்.

“இல்லை தம்பி, இஞ்ச பிள்ளயளும் இருக்கினம். நானும் வருத்தக்காரன் வேறை” என்று தெளிவாகவே முடித்துக்கொண்டார்.

“இல்ல பரவாயில்லை அங்கிள். நான் விளங்கிக் கொள்கிறேன்” என்றேன். உண்மையில் நான் அவரது நிலையைப் புரிந்துகொண்டேன். அவரில் எனக்குக் கோபம் வரவில்லை. வருத்தமாயிருந்தது. அழுகையழுகையாக வந்தது. கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தேன்.

தொலைபேசி அடித்தது. வாசலில் றஷீத் நின்றுகொண்டிருந்தான். அவனது கையில் சாப்பாட்டுப் பார்சல் இருந்தது. நான் கிட்டப்போய் அவனைக் கட்டி அணைக்கத் துடித்தேன். அவனைக் கட்டியணைத்து அழ வேண்டும் போலிருந்தது.

வேகமாக நடந்து 2 மீற்றர் தொலைவில் சடுதியாக நின்றேன். எனக்குள் வார்த்தைகள் வரவில்லை.



குனிந்தபடி நின்றேன். கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் ஓடியது. அவன் சிரித்தான். என்னைத் தேற்றினான். ஆறுதல் வார்த்தைகள் பேசினான்; அவை எனக்கு மீண்டும் மீண்டும் தெம்பைத்தந்தன. கேற்றில் உணவைக் கொழுவிவிடச் சொன்னேன். அவன் விடைபெற்றான். அவனது உணவு இரண்டு நாட்களுக்குப் போதுமாயிருந்தது . அவனது தாயார் மூலமாக பக்குவமாகச் சமைத்து, தனித்தனிப் பாத்திரங்களில் கொண்டு வந்திருந்தான். வரண்டு போன நாவுக்கு அவை அமிர்தமாயிருந்தன. அடிக்கடி அவன் தொலைபேசியில் உரையாடி எனது தேவைகளை அறிந்த வண்ணமிருந்தான். இப்போது நான் மெதுமெதுவாகச் சமைக்கத் தொடங்கிவிட்டேன். நேற்று முழுகியதிலிருந்து நான் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டேன் என உணர்கிறேன்

★ ★ ★ ★ ★ ★

தன் கதையைச் சொல்லிவிட்டு அவன் வழமை போல சிரிக்கத்தொடங்கினான். அவனது சிரிப்பில் மலர்க் கொத்தொன்று சிலிர்த்தது.

நன்றி :
கொரோனா வீட்டுக் கதைகள்
சிறுகதைத் தொகுப்பு

தில்லைநாதன் கோபிநாத்

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

## 1990 - 1995




19

அறிவுக்களஞ்சியம் வெளியாகத் தொடங்கிய சில மாதங்களில் சமூக அறிவியல் ஏடு எனக் குறிப்பிடப்பட்டு நங்கூரம் வெளியாகத் தொடங்கியது. அறிவுக்களஞ்சியம் போலவே நங்கூரமும் பாடசாலைகள் ஊடாகப் பெருமளவில் விநியோகிக்கப்பட்டது. "இன்றைய மாணவர்களே எமது மண்ணின் பயிர்கள். மாணவர்களை வளங்கொழிக்க வைப்பதும் அவர்களிலிருந்து அதிஉச்ச அறுவடையை சமூகத்துக்குப் பெற்றுக்கொடுப்பதும் எங்கள் கடமையேயாகும்" எனக் குறிப்பிட்டு அதற்கான பங்களிப்பை வழங்குவதாக நங்கூரம் ஆரம்பிக்கப்பட்டது.




1992 ஐப்பசியில் நங்கூரத்தின் முதலாவது இதழ் வெளியானது. இரண்டாம் பக்கத்தில் ஒரு விலங்கு தொடர்பான தகவல், மூன்றாம் பக்கத்தில் ஆசிரிய தலையங்கம், அதனைத் தொடர்ந்து அறிவியற் கட்டுரைகள், நடுப்பக்கங்களில் சமூகப் பொறுப்புணர்வுமிக்க பத்தி, அதற்கடுத்த மூன்று பக்கங்களில் சிறு தகவல்களைக் கொண்ட தகவல் களஞ்சியம், மாணவர் ஒருவரின் கவிதை, கேள்வி பதில் பகுதி, இறுதி இரு பக்கங்களில் ஒரு விடயம் தொடர்பான தகவற் சுருக்கங்கள் என 32 பக்கங்களில் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் நங்கூரம் அமைந்திருந்தது.

உள்ளடக்கம் மட்டுமன்றி, தளக்கோலத்திலும் அச்சமைப்பிலும் கூட மிகுந்த நேர்த்தியாக நங்கூரம் வடிவமைக்கப்பட்டிருந்தது. புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சான நங்கூரத்தில் பொருத்தமான பல எழுத்துருக்கள் பயன்படுத்தப்பட்டன. உட்பக்கங்களிலும் ஓரிரு நிறங்கள் அச்சானது. புளொக்குகள் மூலம் பல்வேறு கோட்டுப் படங்களும் ஓவியங்களும் புகைப்படங்களும் நங்கூரத்தில் இடம் பெற்றன.

முதற் பக்கத்தில் கருத்தாழம் மிக்க கோட்டுப்படமும் கடைசிப் பக்கத்தில் சிந்தனையைத் தூண்டும் வகையிலான முழு அளவிலான கறுப்பு வெள்ளைப் புகைப்படமும் இடம் பெற்றிருந்தன.


அப்புகைப்படம் உருவாக்கும் எண்ணங்களைக் கவிதைகளாக எழுதுவதற்கான போட்டியும் நடத்தப்பட்டது.

சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குவதில் நங்கூரம் பெருமளவு கவனத்தைச் செலுத்தியது. நங்கூரத்தின் இரண்டாவது இதழ் சூழல் சிறப்பிதழாக வெளிவந்ததோடு பல இதழ்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான கட்டுரைகளும், கோட்டுப்படங்களும் தொடர்ந்து வெளியாகின. நங்கூரத்தின் ஆசிரியரான பொ. ஐங்கரநேசன் பிற்காலத்தில் வட மாகாணத்தின் சூழல் தொடர்பான அமைச்சராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாதம் தவறாமல் தொடர்ச்சியாக வெளியான நங்கூரத்தின் ஆண்டு மலர்கள் அதிக பக்கங்களுடன் வெளியாகின. 1995 புரட்டாதி மாத இதழ் (இதழ்- 36) மூன்றாவது ஆண்டு மலராக வெளியானது. அதுவே இடம்பெயர்வுக்கு முன்னரான கடைசி இதழாகவும் அமைந்தது. 2012 இல் இரு மாதங்களுக்கொரு இதழாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மேலும் 9 இதழ்கள் வெளியாகியதுடன் நங்கூரம் தனது பயணத்தை முடித்துக் கொண்டது.

அறிவுக்களஞ்சியம், நங்கூரம் என்பவற்றைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான மேலும் பல இதழ்கள் தொடக்கப்பட்டன. இவற்றில் யாதுமூரானை ஆசிரியராகக் கொண்டு தமிழ்த்தாய் மன்றத்தால் வெளியிடப்பட்ட 'மாற்றம்' இதழ் அதன் ஆசிரியர் கொழும்பு சென்றதால் 1995லேயே கொழும்பிலிருந்து வெளியாகும் சஞ்சிகை ஆனது. 1994இல் கந்தர்மடத்திலிருந்து வெளியாகத் தொடங்கிய 'வானோசை' எனும் இதழ் நங்கூரத்தைப் போன்றே சிறந்த வடிவமைப்பு, விரிவான கட்டுரைகள், நிறப் பயன்பாடு எனச் சீரிய முறையில் வெளியானது.


இவை தவிர பெரிய அளவில் சிறந்த வடிவமைப்பில் 'சிட்டு' எனும் இதழ் சு. சிறீகுமரன் (இயல்வாணன்), தி. தவபாலன், மு. கிருபானந்தம் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு 1994இல் தொடங்கப்பட்டு சில இதழ்கள் வெளியாகின. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியராக இருந்த க. தவமணிதாசனால் 'வைகை' எனும் சஞ்சிகையின் சில இதழ்கள் வெளியிடப்பட்டன. 1994இல் 'அறிவாயுதம்' எனும் ஓர் இதழும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது. இந்த இதழ்கள் அனைத்துமே பாடசாலை மாணவர்களுக்கென வெளியிடப்பட்டவை அல்ல என்ற போதிலும், மாணவர் மத்தியில் நன்கு பிரபலமாக விற்பனையான இதழ்கள் ஆகும். இவை தவிர வேறு இதழ்களும் வெளியாகியிருக்கலாம். நங்கூரம் முதலிதழ் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட் டட்டமை போல வானொலி, தொலைக்காட்சிச் சாத னங்கள் மூட்டை கட்டி வைக்கப்பட்டிருந்த காலத்தில் மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு இந்த இதழ்கள் நன்கு பயன்பட்டன. 1995 ஒக்ரோபர் இடப்பெயர்வுடன் இவை அனைத்தும் தடைப்பட்டுப் போயின.



# குமிழி:

## ஒரு பார்வை சில வார்த்தைகள்

இராகவன்




வெளிவந்திருக்க வேண்டிய காலங்கடந்து வெளிவந்திருக்கிறது 'குமிழி'. உரியகாலத்தில் வெளிவந்திருந்தால் "புதியதோர் உலகம்" பெற்றிருக்கும் இடத்தைக் 'குமிழி'யும் பெற்றிருக்கக்கூடும். எனினும் இப்பொழுது குமிழி போன்ற பிரதிகள் வெளிவரும்போது ஒரு சலசலப்பும் படபடப்பும் ஏற்படத்தான் செய்கின்றன. இதையும் கடந்து இதைப்போன்ற பிரதிகள்கொண்டிருக்கும் முக்கியத்துவம் என்ன? என்ற கேள்விதான் பிரதானமானது. அநேகமாக இவ்வகைப்பிரதிகள் எல்லாமே காலங்கடந்த ஞானத்தை வெளிப்படுத்துவனவாகவே அமைந்திருக்கக் காண்கிறோம். இதற்காகத்தான் வெளிவந்திருக்க வேண்டிய காலங்கடந்து வெளி வந்திருப்பதாகக் குறிப்பிட வேண்டியிருக்கிறது.



> ஈழவிடுதலைப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான சில அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணங்களைக் குமிழி வெகுஇயல்பாகவும் நேர்மையாகவும் பதிவு செய்திருக்கிறது.

ஈழவிடுதலைப் போராட்டமானது தோல்வியடைந்தமைக்கான சில அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணங்களைக் குமிழி வெகுஇயல்பாகவும் நேர்மையாகவும் பதிவு செய்திருக்கிறது. பேரினவாத அரசுக்கு எதிராக தொடங்கப்பட்ட ஈழவிடுதலைப் போராட்டமானது காலப்போக்கில் மக்களுக்கும் சகோதர இயக்கங்களுக்கும் எதிராக மாறிப்போனது எந்த அளவுக்கு அபத்தமானது என்பது சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியதொன்று. ஈழவிடுதலைப் போராட்டத்தில் இந்தியா எத்தகைய பங்கினை வகித்திருந்தது? தனது பிராந்திய நலனைப் பாதுகாக்க இந்தியா ஈழ விடுதலைப் போராட்டத்தை எவ்வாறு கையாள முற்பட்டது? என்பதெல்லாம் இன்னமும் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை என்பதுதான் முழு உண்மை. புதியதோர் உலகம் (கோவிந்தன்), UP83 (எஸ். ஏ உதயன்) போன்ற பிரதிகள் இவை குறித்து ஓரளவுக்குப் பதிவு செய்திருக்கின்றன. குமிழியிலும் இதை அவதானிக்க முடிகின்றது. இதைக் குறித்து புனைவாக்கத்தில் பதிவு செய்வதைக் காட்டிலும், ஒரு முழுமையான ஆய்வாக முன்னெடுக்க வேண்டியது அவசியமானது. ஆய்வாளர் இதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

குமிழியைப் புதியதோர் உலகத்துடன் ஒப்பிடும்போது, கதைப் போக்கில் அழகியல் குன்றியிருப்பதாகத் தோன்றலாம். புதியதோர் உலகம் ஒருவித மனோரதியப் பாங்கில் புனையப்பட்டிருப்பது இதற்குக் காரணமாகலாம். குமிழியின் தொடக்கமும் அவ்வாறானதொரு சாயலுடன் தான் தொடங்குகிறது. குறிப்பாக வேப்பமரம் கதை சொல்லியாக வருவதைக் குறிப்பிடலாம். ஆனால் அந்த வேப்பமரம் தொடர்ந்தும் கதை சொல்லியாக வரவில்லை. வந்திருந்தால் புதியதோர் உலகத்தில் விரவிய மனோரதியப்பாங்கு குமிழியிலும் விரவியிருக்கக்கூடும். அதையும் தவிர்த்து நோக்குமிடத்து குமிழி தன்னளவில் நேர்மையான பிரதியாக அமைந்திருப்பதுதான் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியதாகத் தோன்றுகிறது.

# கொரோனா வந்து குணமடைந்தவருடன் இயல்பாக பழகலாமா?





மருத்துவர்
ப்ரியா கமலசிங்கம்
(இரனைவில கொவிட் சிறப்பு சிகிச்சை மருத்துவமனை, யாழ்.போதனா மருத்துவமனை, - சிலாபம் மாவட்டப் பொது மருத்துவமனை)




**1**

**எனது அயலவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொழும்பு IDH வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பரிபூரண சுகமடைந்த தாக கூறி வீடு திரும்பியுள்ளார். எனது பிள்ளைகள் அயல் வீட்டுக்கு சென்று வரு வது ஒரு பிரச்சினையுமில்லையா? ஒரு முறை கொரோனா தொற் றுக்குள்ளானபடியால் மறுபடியும் அது தொற்றாது என்று கூறு கின்றனர். எனக்கு பயமாகவுள்ளது. இது சம்பந்தமான விளக் கத்தை அளிப்பீர்களா?**

என்னைப் பொறுத்தவரை கொரோனா சம்பந்தமாக, நம் வயிற்றில் பாலை வார்க்கக் கூடிய 3 விடயங்கள் உள்ளன.

1. கொரோனா காற்றினால் பரவாது
2. செல்லப்பிராணிகளிலிருந்து எமக்கு கொரோனா வரவியலாது.
3. ஒருமுறை தொற்றுக்குள்ளாகி பரிபூரணமாக சுகமடைந்த ஒருவருக்கு மீண்டும் தொற்று ஏற்படும் சாத்தியக்கூறு மிகமிகக் குறைவு. (இல்லையென்றே கூறலாம்- இன்றைய கள நிலவரப்படி)

**Humoral Immunity** - நமது எலும்பு மஜ்ஜையிலிருந்து உருவாகும் **humoral antibodies**- இவை காண்பிக்கும் நோய் எதிர்ப்பு சக்தியானது வீரியமாக, உடனடியாக, அதி ரடியாக இருக்கும்.

**Cellular immunity** - ஒருமுறை ஏற்பட்ட தொற்றை, மறுமுறை எதிர்கொண்டு ,நோய் எதிர்ப்பு சக்தியை எமது உடலிலுள்ள T-Cellகள் காட்டுவது!!

கொரோனா சம்பந்தமான உங்களுடைய எந்தக் கேள்விக்குமான பதில் இன்றைய களநிலவரப்படி, இன்று மட்டும் **WHO** வின் அதிகாரபூர்வமான ஆய்வுத் தகவல்களின்படியே என்பதை ,நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாளை இந்த நிலை/ முடிவுகள் மாறாமலிருக்கும் என்பதற்கு எந்த வொரு உத்தரவாதமுமில்லை.

- தொற்று ஏற்பட்டவுடன் ஏறும் **IgM, IgG** அன்டிபாடிகளின் அளவானது 2 மாதத்தில் சுமார் 50% குறைந்து, பிறகு சமநிலையை எட்டும்.
- நோய்த் தொற்று ஏற்பட்டு 6 மாதங்களுக்குப் பிறகும் கூட Cellular immunity அத்தொற்றுக்குள்ளானவருக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- நோய்த்தொற்றுக்குள்ளானவர்களில் யாருக்கெல்லாம் அதிக அறிகுறிகள் இருந்தனவோ, **(Symptomatic)** அவர்களுக்கு அறிகுறியின்றி **(asymptomatic)** தொற்றுக்குள்ளா னவர்களுடன் ஒப்பிடுகையில், 50% அதிகமான எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளது.

இங்கே சிக்கலான விடயம் என்னவென்றால் இத்தொற்று ஏற்பட்டவர்களுக்கு அவர்கள் பெற்றுக் கொண்ட நோயெதிர்ப்பு சக்தியானது அவர்களை எவ்வளவு காலத்துக்கு மறு தொற்றிலிருந்து காப்பாற்றும் என்றும் உறுதியான ஆய்வு முடிவுகள் ஏதும் இன்னமும் பெறப்படவில்லை.!!!!!

**எமது மக்களின் மனப்பாங்கு நான் நன்கறிந்தவொரு விடயம். எனக்கு ஒருமுறை தொற்று ஏற்பட்டுவிட்டது. இனித் தொற்று ஏற்படாது. எனவே நான் இனி மாஸ்க் அணியத் தேவையில்லை , கை கழுவத் தேவையில்லை என்று செயற்பட முற்படுவர். வாழ்க்கை கேலிக்கூத்தல்ல. கொரோனாத் தொற்று அனைவருக்கும் உண்டு என்று நம்பியே நடக்க வேண்டும். எனது பதிலானது உங்களுக்கு ஆறுதலைத் தரலாம். ஆனால் இந்தக் கட்டுரை அலட்சியத்தை உருவாக்கிவிடக் கூடாது.**

**2**

**இன்று உருமாறியுள்ள இங்கிலாந்தில் பரவியுள்ள covid 19 new strain, பழைய வைரஸ் போன்றதா? ஆபத்தானதா?**

ஊடகங்களில்/ சமூக வலைத்தளங்களில் 'உருமாறிய கொரோனா' என்ற பதம் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இது தவறான சொற்பிரயோகம் என்று நான் நினைக்கிறேன். பலநேரங்களில் மருத்துவ விடயங்களை மொழிபெயர்க்கையில், வரும் சிக்கல் இது.

கொரோனா வைரஸ் வேறொன்றாக உருமாறவில்லை. மாறாக தன்னகத்தே சிறு மாற்றங்களுக்குள்ளாகி வருகின்றது. உதாரணமாக எமது சூழ்நிலைகளுக்கேற்ப, பொருளாதார நிலைகளுக்கேற்ப, இன்னமும் பல சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, எமது நடையுடை பாவனைகள் மாறுவது இயல்பு. உங்களது முதலாவது முகப் புத்தக profile pictureஐ பாருங்கள். இன்றைய உங்களது படத்தையும் பாருங்கள். நான் கூற வருவது உங்களுக்கு இலகுவாகப் புரியும். அங்கே அன்றும் இன்றும் இருப்பது நீங்கள்தான். தன்னகத்தே சிறு மாற்றங்கள் எழும்போது அதை variety or Variant என்றே கூற வேண்டும். '

"உருமாறிய கொரோனா வைரஸ் "என்பது வீண் வில்லங்கங்களை மனதில் எழச் செய்யும் சொற்பதமாகும்.

New Strain என்பது தவறு. Different Variant என்பது தான் சரி. இந்த சொற் பிரயோகத்தை மாற்றியமைத்தாலே உங்களது கேள்விக்கான விளக்கம் அரைவாசி கிடைத்துவிடும். இன்னுமொரு வைரஸாக கொரோனா உருமாறவில்லை. இதை எழுதிக்கொண்டிருக்கையில்உலகின்ஏதோவொரு மூலையில் கொரோனா வைரஸ் தனக்குள் ஒரு சிறிய மாற்றத்துக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் என்பது தான் உண்மை. இது தலைமுறை தலைமுறையாக நம் வழித்தோன்றல்கள் உயிர் பிழைப்பதற்கு/ தக்கன பிழைத்து கொள்வதற்கு எம்மில் ஏற்படும் மாற்றங்கள் போன்றதேயன்றி,வேறொன்றுமில்லை.

**இன்றைய களநிலைவரப்படி இந்த புதிய varient அதிக அளவு மரணத்தை (முன்னைய covid 19 உடன் ஒப்பிடுகையில்) ஏற்படுத்துவதாக ஆய்வறிக்கைகளில்லை. ஆனால் முன்னைய covid 19 ஐ விட மிக வேகமாக பரவும் சக்தி கொண்டதாக இனம் காணப்பட்டுள்ளது.**

ஒன்றைத் தெளிவாக புரிந்து கொள்ளுங்கள். இனி நமது வாழ்க்கை கொரோனாவுடன் தான் அமையப் போகிறது. adapting to the New Normal என்னும் சொற்பதத்தை புரிந்து கொள்ளுங்கள். அதாவது 'புதிய வரையறையுடன் கூடிய வாழ்க்கை' இதற்குத் தேவையானது **Pandemic appropriate behaviour.**

அதாவது கொரோனா போன்ற சமூக தொற்றுக்குள்ளான சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை !!!

**Epidemic** - ஒரு குறித்த காலப்பகுதியில் ஒரு குறித்த இடத்தில் மட்டும் பரவும் கொள்ளை நோய்.
**Endemic** - அதே தொற்று சதாகாலமும் ஒரு பூகோளப்பகுதியில் காணப்படுவது.
**Pandemic** : அதே தொற்றானது உலகின் பல பகுதிகளுக்கும் பரவி, கொள்ளை நோயாக உருவெடுக்கும் தன்மை !!
கொவிட் 19 ஒரு பண்டமிக் நோயாகும்.

இத்தகைய பண்டமிக் நோய்கள் உலகத்துக்கு புதிதல்ல. 1918- இன்புளுவென்சா 3 அலைகளாக பெண்டமிக் நோயாகியது. இப்பொழுது நமக்கு இருக்கும் நவீன வசதி வாய்ப்புக்கள் அப்போது இருக்கவில்லை. சமூக வலைத்தளங்கள் இவ்வாறு இருக்கவில்லை. விழிப்புணர்வு ஏற்படுத்த மருத்துவ சமூகம் திக்குமுக்காடியது. வைரஸ் கூட அவர்களின் கண்ணனுக்கு எட்டவில்லை; ஏனென்றால் 1930 இல் தான் எலக்ரான் மைக்ரோஸ்கோப் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் மனித சமுதாயம் தப்பிப் பிழைத்தது. ஏனென்றால் இந்த மேற்கூறிய Pandemic appropriate Behaviour ஒழுங்காக, நேர்த்தியாக, கடைப்பிடிக்கப்பட்டது. நாம் எதை சிந்திக்கிறோமா, அதுவே எமது செயற்பாடாகும். இறுதியில் நமது வாழ்க்கையுமாகிறது. இதனை Social and Behavioral Change Strategies என்கிறோம். அதாவது ஒரு சமூகத்தின் சிந்திக்கும் வித்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அந்த சமூகத்தின் நடத்தையை மாற்றி (அச்சமூகத்தை காப்பாற்றுவது) இதற்கு சிறந்த இலகுவான உதாரணம் "போலியோ சொட்டு மருந்து".

**போலியோ சொட்டு மருந்தை தன் குழந்தைக்கு அளிப்பதனால் தனது குழந்தை முடமாவதை தவிர்க்க முடியும் என்று ஒவ்வொரு பெற்றோரும் முதலில் நம்பினார்கள். போலியோ சொட்டு மருந்தை கிரமமாக குழந்தைகளுக்கு பெற்றுக் கொடுத்தனர் எனவே எம்மால் போலியோவை அடியுடன் ஒழிக்க முடிந்தது. இதேபோன்ற ஒரு நடத்தையைத்தான் இப்போது நாம், மருத்துவ சமூகம் மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். கொரோனாவிலிருந்து தன்னையும் மற்றவர்களையும் காப்பாற்றும் சமூகப் பிரஜையாக நீங்கள் இருத்தல் வேண்டும். உரிய நடைமுறைகளை ஒழுங்காக அலட்சியமின்றி கடைப்பிடித்து கொவிட்- 19 ஐ ஒழிப்பதற்கு தயவு செய்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்!!!!!.**


---

மௌனா

## மணிக்கதை
## ஆதாரம்



**"நான் வீடற்றவன்...விதி கெட்டவன்" என புலம்பிக் கொண்டி ருந்தான் ஒரு அநாதை**
**"நான் நாடற்றவன் .... நாதியற்றவன்... என புலம்பிக்கொண்டி ருந்தான் ஒரு அகதி .**
**"நான் வாழ்வற்றவன்.... வசதியற்றவன் எனப் புலம்பிக் கொண்டிருந்தான் ஒரு ஏழை.**
**இவர்கள் அனைவரும் சலித்துப் பேசும் வார்த்தைகளை கேட்டபடி சுழன்று கொண்டிருந்த பூமி சொல்லிக் கொண்டது. "இவர்கள் அனைவரையும் பொறுமையுடன் தாங்கிக்கொண்டிருக்கும் என்னை மறந்துவிட்டார்களே! இவர்களுக்காக பரந்த இந்த உலகம் இவர்கள் காலடியில் கிடப்பதை புரிந்துகொள்ள வில்லையே..." எனக் கவலைப்பட்டபடி தன் கடமை யைச் செய்துகொண் டிருந்தது பூமி**



ஔண்யன்

# தீ அணைவதில்லை

## முன்னை இட்ட தீ..!

1981.05.01

அள்ள அள்ளக் குறையாத அறிவுச் சுரங்கம் எப்படி இருக்க முடியும் தமிழ் மண்ணில்? பெரும்பான்மையினர் என்றும், முதன்மைக் குடிகள் என்றும் சொல்வோரிடம் கூட இப்படியொரு பொக்கிஷம் இல்லையே. நம்மிடம் இல்லாத எதுவும் அற்ப சிறுபான்மையிடம் இருக்கவே கூடாதல்லவா? பெரும்பான்மை விஷம் தலைக்கேறிய கூட்டம் திட்டம் போட்டது. வாலில் தீமூட்டிய சீருடை அனுமன்கள், நவீன துட்டகைமுனுக்களின் கண்ணசைவுப்படி யாழ். பொது நூலகத்தில் தீமூட்டி விளையாடின. கணநேரத்தில் அங்கிருந்த அத்தனை புத்தகங்களையும் ஆசையோடு பற்றிக் கொண்ட தீயின் கொழுந்துகள் வானோக்கி எழ, தமிழர்களின் மனங்களில் படிந்தன புகையும், நூற்றாண்டு காலச் சாம்பலும்.

காலம் ஓடியது.
தீ தின்று, சிதைந்த சடலமாக எலும்புக் கம்பிகளும், நொருங்கிப் போன சிமெந்துத் தசைகளோடும் கூனிக் குறுகிக் கிடந்த நூலகக் கட்டடம், தமிழர் தேசத்துக்கு வருவோருக்கெல்லாம் " இத்தனை சிறுமையும், கொடுமையும் கொண்டவையா பெரும்பான்மைப் பிசாசுகள்?" என்ற எண்ணத்தை விதைத்தது. இனியும் அப்படியே வைத்திருந்தால், இன்னும் தம் பெயர் நாறிவிடும் என்பது சிங்களத்துக்கு தெரிந்தது.
"முழுப்பூசணிக்காயை உடனே மறைக்குக சோற்றில்!"
ஆணை பிறக்க, அசுரகதியில் அலுவல்கள் நடந்தன. தப்பித் தவறிக்கூட , எரிந்த தழும்புகள் தெரிந்துவிடக் கூடாது என்று, நூலகத்துக்கு அதிநுணுக்கமான 'பிளாஸ்ரிக் சேர்ஜரி' செய்து முடிந்தது. நூலகம் மீண்டும் உயிர்த்தது.
" நாமே உயிர் கொடுத்தோம்"
சிங்களம் வரலாற்றை மாற்றி, இடுப்பில் கை வைத்தபடி தலை நிமிர்ந்து சொல்லிக் கொண்டது. நாம் தலைகுனிந்து கொண்டோம். இப்படியாக ஒரு பெரும் அழிப்பின் எச்சத்தை கழுவித் துடைத்தது பேரினம்.

## நாங்கள் இட்ட தீ..!

1987.07.05


வடமராட்சி. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். வானரங்களின் கூடாரமாகியிருந்தது.
'ஒப்பிரேஷன் லிபரேஷன்' என்ற பேரோடு பெரும் போர். வானரங்களின் கண்களில் தமிழர் தேசம் முழுதையும் கபளீகரம் செய்யும் கனவு. கை தொடும் தூரத்தில் கனவிருக்கையில், எழுந்தது பேரோசை.
மில்லர் என்றொரு வேங்கை வெடித்துச் சிதறி தொடங்கி வைத்த புதிய சரிதத்தின் முதற் பக்கத்திலேயே, நூற்றுக்கணக்கான வானரங்களின் சாவோடு, கூடாரம் போட்டிருந்த கட்டடமும் சிதறிப் போனது.
நீண்டு வந்த பின்னாட்களில் ஊரறியாமல் உறங்கியவர்களின் பேராண்மையை செத்துக் கிடந்த அந்தக் கட்டடம் சொல்லி நின்றது. தமிழர் நெஞ்சு நிமிர்ந்தது.
அதெப்படி சிறுபான்மைக் கூட்டம் திமிர்கொள்ளலாம்?
மீண்டும் அதே இனவாத விஷம் பருகியவர்கள் கண்களை , சாவினைத் தோள் மீது சுமந்தவர்களின் சரித்திரத்தை பெருமையோடு சொல்லிக் கொண்டிருந்த அந்தச் சிதைந்த கட்டடம் உறுத்தியது.
பூசிமெழுக வேண்டியதுதான்.
" இந்த இடிந்த கட்டடத்தை அகற்றினால் பெரிய கட்டடங்கள் அமைத்து பாடசாலையை இன்னும் சிறப்பாக்குவேன்"
ஆளுநர் சந்திரசிறி ஆசைத்தூண்டிலை வீசினார். மீன் சிக்கியது. உலகையே ஆச்சரியத்தோடு உற்றுப் பார்க்க வைத்த உயிராயுதங்களின் பெருமை பேசிய அந்தக் கட்டடம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது.

## நெஞ்சில் இட்ட தீ..!

குருதி தறித்த , இரத்தம் தெறித்த சதுப்புநிலம். பெயர் முள்ளிவாய்க்கால்.
கொத்துக் குண்டுகளாலும், கொலைகார விமானங்களாலும், சுடுகலன்களாலும், நிர்வாணமாக்கியும், கழுத்தறுத்தும், கட்டையால் அடித்தும், பட்டினி போட்டும் கொத்துக் கொத்தாய் தமிழர் கொன்றொழிக்கப்பட்ட மண். ஒவ்வொரு மண் துணிக்கையிலும் குருதி. ஒவ்வொரு அங்குலத்திலும் ஒரு சாவு. புழுக்கூட்டம் தின்றது போக, எஞ்சிக் கிடந்த உடல்களையெல்லாம் கூட்டியள்ளி, கொளுத்தி, இரசாயனத் தூள் விசிறி , ஒரு எலும்பு விடாமல் பொறுக்கியெடுத்து, சிரமதானம் செய்துவிட்டு "இங்கே இனப்படுகொலை நடக்கவேயில்லை" என்று சொல்லி, தன் பின்பக்கத்தில் குருதிக்கறையைத் துடைத்துக் கொண்டது அதிகாரம். உலகக் கண்முன்னே நிகழ்ந்தேறிய மனிதவேள்வியை, மறைத்துவிட்டதாக தன் திறமையை எண்ணி வியந்து கொண்டது சிங்களம். அடிவருடிகளும் தாளம் போட, யுத்தவெற்றிக் கூத்து தொடர்ந்தது.
அந்தக் கூத்து நெடுநேரம் நீடிக்கவில்லை. நஞ்சூறிக் கிடந்த முள்ளிவாய்க்காலிலும், தமிழகத்திலும், யாழ்.பல்கலைக்கழகத்திலும் தூபிகள் எழுந்தன. மனித வேள்வியை ஒவ்வொரு கணமும் நினைவூட்டின. வலியின் தீயை எல்லோர் மனங்களிலும் மீள மீள எரியச் செய்தன.
தாம் பற்றவைத்த நெருப்பு பின்னாள்களில் பற்றியெரிக்க தம்மையே கேட்கும் என்பது பேரினப் பிசாசுகளுக்கு தெரியும். தீயை அணைக்க வேண்டும். இல்லாவிட்டால் ஜெனிவா,போர்க்குற்றம், விசாரணை என்றெல்லாம் தீயின் வெம்மை பிசாசுகளின் தோலைக் கருக்கிவிடும்.
எறியப்பட்டது எலும்பு. வாலாட்டிக் கொண்டே விசுவாசிகள், இருட்டின் துணையோடு, இயந்திரயானை கொண்டு இடித்தனர் கண்ணீர் கலந்து கட்டப்பட்ட தூபியை. ஒரு தீபத்தை ஊதி அணைத்து விட்டதாக மகிழ்ந்தனர்.
ஆனால் தொட்ட இடம் பிழை. தீக்குள் விரலை வைத்தால் தாங்கமுடியுமா என்ன?பொங்கு தமிழாகி, பொங்கியெழுந்த இடமல்லவா? பேரலையாக எழுந்த எதிர்ப்பு இன்னும் எரிகிறது பெரு நெருப்பாய். இந்த நெருப்பின் வெம்மையிலாவது, பேரினப் பிசாசுகள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்,

*"தீபங்கள் அணையலாம், தீ அணைவதில்லை!"*

# பல்கலைக்கழகத்தின் கரிநாள்



ஜெரா


இலங்கையானது விநோதமான முறைகளில் எல்லாம் இனவழிப்பு செய்யும் நாடாக அறிமுகப்பட்டிருக்கிறது. ஓரினத்தை முற்றாக அழிப்பதற்குத் திட்டமிடும் அரசுகள், பல்வேறு படிமுறைகளை செயற்படுத்துகின்றன.
தரப்படுத்தல் மாதிரியான வடிகட்டல் முறைமைகளை நடைமுறைப்படுத்துவது, கலவரங்களை ஏற்படுத்தி சொத்தழிப்பு செய்வது, பொருளாதார ரீதியான பின்னடைவுகளை ஏற்படுத்துவது, அச்சுறுத்தலை ஏற்படுத்தி தாய்நிலத்தை விட்டுப் புலம்பெயரச் செய்வது, குறித்தவோர் இனத்தை எல்லாவகையிலும் நலிவுறச் செய்தபின்னர், குண்டுகளை வீசிக் கொன்றொழிப்பது, அதிலும் ஆண்களை இலக்கு வைத்து அந்த இனக் குழுமத்தின் ஆண்களை இல்லாமல் செய்வது போன்ற நடவடிக்கைகள் இனவழிப்புச் செயற்பாடுகளாகக் கொள்ளப்படும்.
இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் 2010 வரைக்கும் இடம்பெற்றதை அவதானித்திருக்கிறோம். 2010 ஆம் ஆண்டின் பின்னர் இந்த இனவழிப்பு வடிவங்கள் வேறுவடிவம் பெற்றிருக்கின்றன. போதைப்பொருள் பயன்பாட்டு ஊக்குவிப்பு, பண்பாட்டுச் சிதைப்பு, நிலத்தின் பௌதீகவெளியை மாற்றக்கூடிய விதத்தில் பௌத்தமயமாக்கல், சுற்றுச்சூழல் அழிப்பு, பாரம்பரிய உணவுக் கலாசார மறுப்பு, நினைவேந்தல் மறுப்பு, நினைவுத்தூபி சிதைப்பு என இந்தப் பட்டியல் நீளும். இவை ஒவ்வொன்றுமே இனவழிப்புக் குறித்த தனித்தனி ஆய்வுக்குரியவை. இதில் நினைவுத்தூபி அழிப்புக்களை மாத்திரம் பார்க்கலாம்.
ஈழப் போர் முடிவுக்கு வந்த கையுடன் அரச படைகள் செய்த முதற்காரியம் எதுவெனில், தமிழர் தாயக நிலப் பகுதியில் நிறுவப்பட்டிருந்த மாவீரர் நினைவு இல்லங்கள், மாவீரர் நினைவுத்தூபிகள், படுகொலை நினைவுத்தூபிகள், கட் -அவுட்கள், படுகொலையை நினைவுபடுத்தும் பேருந்து நினைவிடங்கள் போன்றவற்றை அழித்தமைதான். கடந்தகாலம்தொடர்பில்நினைவையேற்படுத்தும் அனைத்து நினைவில்லங்களும் இரவோடிரவாகவே இடித்தழிக்கப்பட்டன. இவ்வாறு ஏன் இவை இடித்தழிக்கப்பட்டன? பொதுவாகத் தமிழ்ப் பண்பாட்டில் இறந்தோர் வழிபாடு முக்கியமிக்கப் பண்பாட்டு நிகழ்வாக இருக்கிறது. இறந்தோரை முழுமையாக மண் தாழியொன்றினுள் வைத்து அவர் இறந்த பின்னர் வாழ்வதற்குரிய அனைத்துப் பொருள்களையும் அதனுள் இட்டு மண்ணுள் புதைத்த ஈமத்தாழி தொடக்கம் நடுகல் வரைக்கும் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் இதற்கு உண்டு. அதாவது இறந்தவர்கள் இறைவராவார் என்கிற சித்தாந்தத்தின் அடிப்படையில் இவ்வெண்ணம் சந்ததி கடத்தப்பட்டிருக்கிறது. இந்த நற்பண்பானது நம் அரசியலையும் வழிநடத்தக்ககூடியது. அது இனம்சார் உளவியல் கட்டமைப்புடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருப்பது. எனவேதான் இன அழிப்பாளர்களின் முதற்தெரிவாக நினைவில்ல அழிப்புக்கள் இருக்கின்றன.
அந்தவகையில் தமிழர் தாயக நிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த நினைவில்லங்கள், நினைவுத்தூபிகள் அழிக்கப்பட்டாயிற்று. அவ்விடத்தில் நினைவுகள் மட்டும் கனதிமிக்கவையாக இருக்கின்றன. அந்த நினைவுகளுக்கு நீண்ட ஆயுள் கிடைக்கப்போவதில்லை. ஏனெனில் கடந்த காலம் பற்றிய கற்பித்தல் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு தெளிவாகக் கற்பிக்கப்படவில்லை. நம்மை நாமே சுயதணிக்கைக்குட்படுத்தி பழக்கிக்கொண்ட வாழ்வுப் பொறிமுறை இந்தக் கற்பித்தலை தடைசெய்தே வந்திருக்கின்றது. எனவே கடந்த காலங்களைக் கற்பிக்கும் நினைவுசார்ந்த இடங்களை அழிக்கும்போதெல்லாம் வெளிப்படையாகப் பேச முடியவில்லை. இனமாகக் கூட்டுத்திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்த முடியவில்லை. ஒவ்வொருவரும் மனதளவில் குமுறி உளநோய்வாய்ப்பட்டிருக்கின்றனர்.
இவ்வாறு தமிழ்த் தேச வெளியில் இருந்த அனைத்து நினைவு இடங்களும் அழிக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் எஞ்சியிருக்கும் நினைவில்லங்கள் மாத்திரமே அழிக்கப்படாமல் இருந்தன. மற்றைய இடங்களில் செயற்பட்டதைப் போல இராணுவத்தால் அடாவடியாக இறங்கி அழிக்கமுடியாத சூழல் நிலவியது. எனவே அடிமை சேவகம் செய்யக்கூடிய தரப்பொன்றை பல்கலைக்கழக உயர்பதவிகளில் அமர்த்தியபின் அந்தக் காரியங்கள் நிறைவுசெய்யப்பட்டிருக்கின்றன. சட்டத்துக்குப் புறம்பான கட்டடங்கள் என யாழ்ப்பாண




பல்கலைக்கழக துணைவேந்தரால் அடையாளப்படுத்தப்பட்ட முள்ளிவாய்க்காலில் இனவழிப்புக்குள்ளான லட்சக்கணக்கான தமிழ் மக்களின் நினைவாக மாணவர்களால் அமைக்கப்பட்ட நினைவேந்தல் தூபி திருட்டுத்தனமாக இருட்டில் அழிக்கப்பட்டுள்ளது. அதனைத் தடுக்க முனைந்தவர்களை "பெக்கோவை ஏற்றிக்கொல்லுவோம்" என்ற மிரட்டல் பத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு, பல்கலைக்கழக அதிகாரிகள் மிலேச்சத்தனமாக செயற்பட்டிருக்கின்றனர். இவையெல்லாம் இருட்டில் இடம்பெற்றாலும் ஊடக வெளிச்சங்களுக்கு முன்னால் நிகழ்த்தப்பட்டவை. இந்த தான்தோன்றித்தனமான அதிகாரம் அறிவுஜீவிகளுக்கு கிடைக்க வேண்டுமெனில், அதற்குப் பலமான பின்னணி இருக்க வேண்டும். அதனையும் துணைவேந்தர் தன் ஒலிக்குறிப்பில், "பல்வேறு அழுத்தங்கள்" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.
எனவே துணைவேந்தருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் எந்த விடயத்தையும் செய்துவிடமுடியும் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அத்தோடு கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளில் இராணுவமும், சிங்கள மாணவர்களும் அமைத்திருக்கும் போர் வெற்றி நினைவில்லங்களையும், பௌத்த விகாரைகளையும் சட்டரீதியானவை என்பதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.
இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்புக்கு எதிராக இரவிரவாக மாணவர்களும், அரசியல்வாதிகளும், செயற்பாட்டாளர்களும் கூடியும் அதற்கு பல்கலைக்கழகம் எவ்விதப் பொறுப்பான பதில்களையும் வழங்கவில்லை. இராணுவத்தையும் பொலிஸாரையும் பல்கலைக்கழகத்துக்கு உள்ளே எடுத்துக்கொண்டு, மாணவர்களைத் தெருவில் விட்டு கதவைப் பூட்டும் இழிகாரியத்தையே பல்கலைக்கழகத்தால் செய்யமுடிந்திருக்கிறது. யாழ். பல்கலைக்கழக வரலாற்றின் கறுப்புப் பக்கத்தின் முதற்தொடக்கமாகவே இந்த நிகழ்வுகளைப் பதிவுசெய்யவேண்டியிருக்கிறது. இதுபோதாதென்று அதற்கு எதிராகக் குரல் கொடுத்த மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டதுடன், களத்தில் நிற்பவர்கள் மீது கொரோனா தனிமைப்படுத்தல் சட்டம் பாயும் எனப் பொதுவெளியில் அறிவிப்பும் விடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் இந்த நாடு சர்வதேச நோய்ப்பரவல் நிலமைகளைத் தன் இனவழிப்பு அரசியலுக்கு எவ்வாறெல்லாம் பயன்படுத்துகிறது என்பதையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. தமிழர் பகுதியின் புலமைசார் இதயமாகக் கொள்ளப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் இச்செயற்பாடு, இனநலன் சார்ந்து சிந்திக்கத் தலைப்படாத பதவி மோகர்களின் தற்குறித்தனம். இந்தத் தற்குறித்தனமானது இனத்தின் வலியை, அந்த வலி ஏற்படுத்தித்தரும் வலிமிகு அரசியலை அழித்திருக்கிறது. எமதினத்தையும், இனத்தின் அடையாளங்களையும், நினைவுகளையும் அழிக்க கங்கணம் கட்டிநிற்கும் சக்திகளுக்கு ஏவல்பேய் வேலைபார்த்திருக்கிறது. ஆயினும் இதில் இருக்கம் ஒரு நம்பிக்கை என்னவெனில், இது மாதிரியான சம்பவங்களே, தமிழர்களுக்கு நடந்துகொண்டிருக்கும் இனவழிப்பை இன்னமும் உலகுக்கு அறிக்கைப்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதுதான். அதற்கு இந்தச் சம்பவம் இடம்பெற்று 24 மணிநேரத்துக்குள் வெளியான கனேடிய நகரொன்றின் நகர மேயரின் ருவீற்றர் குறிப்பே சான்றாகும்.

**கடந்த காலங்களைக் கற்பிக்கும் நினைவுசார்ந்த இடங்களை அழிக்கும்போதெல்லாம் வெளிப்படையாகப் பேச முடியவில்லை. இனமாகக் கூட்டுத்திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்த முடியவில்லை. ஒவ்வொருவரும் மனதளவில் குமுறி உளநோய்வாய்ப்பட்டிருக்கின்றனர்.**

# கர்ப்பத் தொட்டி



தேன் கூடு

O ம.பா. மகாலிங்கசிவம்

சங்க காலத்தை பேராசிரியர் கைலாசபதி வீரயுகக் காலம் என்று கூறுவார். வீரம் முதன்மைப்படுத்தப் பட்டிருந்த அன்றைய காலத்தில் பெண்களும் பல்வேறு வகைகளில் வீரத்தை வெளிப்படுத்தினர்.

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோ என வினவுதி" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் உன் மகன் எங்கே இருக்கின்றான். எனக் கேட்ட ஒருவருக்கு விடையளிக்கும் கூற்றாக இருக்கிறது.

"ஈன்ற வயிறோ இதுவே, தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" எனப் பாடல் நிறைவுறுகிறது. அதாவது பெற்ற வயிறு இங்கே இருக்கிறது. அவன் போர்க்களத்திலே காணப்படுவான் என்பது இதன் பொருளாகும்.
ஆனால் நீ பெற்ற பிள்ளை எங்கே என்று கேட்கும் வைத்தியருக்கு,
"ஈன்ற வயிறோ இதுவே, தோன்றுவன் மாதோ புதைகுழித் தானே" என்று பெண்களில் சிலர் கூறும் நிலை அதிகரித்து வருகிறதோ என்று ஐயப்பட வைக்கின்றன அண்மைய செய்திகள். தவறான உறவால் குழந்தை பிறந்துவிட, ஈன்ற வயிற்றில் ஏற்படும் கிருமித் தொற்றால் வைத்தியசாலைக்குச் செல்லும்போதே குழந்தை புதைகுழியில் புதைக்கப்பட்ட தகவல்கள் வெளிவருகின்றன. இத்தகைய தாய்மார் திருமணமாகாதவர்களாக, விதவைகளாக, கணவன் வெளிநாட்டில் இருப்பவர்களாக அல்லது கணவனைப் பிரிந்து இருப்பவர்களாகவே பெரும்பாலும் காணப்படுகின்றனர்.
விதி படத்தில் வழக்கு விசாரணையின்போது ஜெயசங்கர் சொன்ன பஞ்ச் டயலொக் ஒன்று இவ்விடத்தில் நினைவுக்கு வருகிறது. 'பத்து வருடம் ஆனாலும் ஆண் ஆணாகவே இருக்கின்றான். ஆனால் பத்து மாதம் சென்று விட்டாலோ, பெண் ஒரு குழந்தைக்குத் தாயாகி விடுகிறாள் என்பதே அந்த டயலொக் ஆகும்.
இது நிறைந்த அர்த்தங்களைக் கொண்டது. ஆணும் பெண்ணும் சமமெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி வையம் தழைக்குமாம் என்று பாரதி ஆண்- பெண் சமத்துவத்தை வலியுறுத்தியிருந்தாலும், இந்த விடயத்தில் ஆண் பெண் சமத்துவம் எடுபடுவதில்லை. ஆணும் பெண்ணும் இணைந்தே தவறான உறவில் ஈடுபட்டாலும், ஆண் எந்தச் சுவடும் இன்றித் தப்பித்துக்கொள்ள, பெண்ணோ கரு உருவாக்கம் காரணமாக மாட்டிக் கொள்கிறார். இத்தகைய தவறான உறவுகளின் அதிகரிப்பால் குப்பைத் தொட்டிக் குழந்தைகளும் புதைகுழிக் குழந்தைகளும் அதிகரித்துச் செல்கின்றன. இவ்விடயம் தொடர்பான இணுவையூர் சக்திதாசனின் 'கர்ப்பத்தொட்டி' எனும் கவிதை இன்றைய தேன் கூட்டில் இடம்பெறுகிறது.

**கர்ப்பத்தடை**
**இல்லா**
**குப்பைத் தொட்டியே!**

**மனித எச்சங்களுக்கெல்லாம்**
**வாழ்வு கொடுக்கும் வித்தையை**
**எங்கு கற்றாய்?**

**மிச்சம் மீதியெல்லாம்**
**உனக்குத்தான் வருமென்பதால்**
**நீயும் பிரசவிக்க தொடங்கி விட்டாயோ**

**வாரியள்ளி கொடுக்குமினம்**
**என்பதினால்**
**பிள்ளையைக் கூட**
**உனக்கு இனாமாகவே**
**கொடுத்திருக்கிறார்கள்**

**ஆனால் என்ன**
**இன்பத்தை அனுபவிக்க தெரிந்த**
**அவர்களால்**
**அதனால் கிடைத்த**
**சொந்தத்தை**
**அனுபவிக்க தெரியவில்லை**

**அந்த தைரியம் இல்லாததினால்**
**அவர்கள்**
**குப்பைத் தொட்டியாகி விட்டார்கள்!**



தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கனகசபாபதி சக்திதாசன். இணுவிலை வாழ்விடம் ஆக்கியதால் இணுவையூர் சக்திதாசன் என்னும் புனைபெயர் தரித்தவர். தற்போது புலம்பெயர்ந்து டென்மார்க் தேசத்திலிருந்து தமிழ் இலக்கியப் பணி ஆற்றி வருபவர். 'தொட்டுவிடும் தூரத்தில் தொலைந்த கனவுகளும் தொலையாத கவிதைகளும்' 'நெஞ்ச நெருடல்', 'காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்', 'ஓர் அகதியின் கைரேகை' முதலிய நூல்களைத் தந்தவர். அவரது 'கர்ப்பத்தொட்டி' என்னும் கவிதையில் குப்பைத் தொட்டி குழந்தையைப் பிரசவிப்பதால் கர்ப்பத் தொட்டியாக உருவகிக்கப்படுகிறது.
**''கர்ப்பத்தடை**
**இல்லாக்**
**குப்பைத் தொட்டியே...''** எனக் கவிஞர் குப்பைத் தொட்டியை விழித்துக் கவிதையை ஆரம்பிக்கின்றார். காலாதி காலமாய்க் கள்ளத்தனமாகப் பிறக்கும் குழந்தைகளுக்குப் புகலிடம் கொடுத்து வருவதால் அது கர்ப்பத்தடை இல்லாத் தொட்டியாகக் கூறப்படுகிறது. குந்தியின் கர்ணனுடன் தொடங்கிய இந்தப் பாரம்பரியம் இன்றுவரை தொடர்ந்து வருகிறது.
**''மிச்சம் மீதியெல்லாம்**
**உனக்குத்தான் வரும் என்பதால்**
**நீயும்**
**பிரசவிக்கத் தொடங்கிவிட்டாயே?''** என்ற கவிஞரின் வினா மிகுந்த பொருள் ஆழம் நிறைந்தது. பயன்படுத்தி இனித் தேவையில்லை என்று கருதுபவற்றை நாம் குப்பையில் போடுவோம். அந்தப் பழக்கத்தால் தான் தேவையில்லாத குழந்தையையும் குப்பைத் தொட்டியில் இடுகிறோமோ என்று கவிஞர் சிந்திக்கின்றார்.
**''வாரியள்ளிக் கொடுக்குமினம்**
**என்பதால்**
**பிள்ளையைக் கூட**
**உனக்கு இனாமாகவே**
**கொடுத்திருக்கிறார்கள்''** எனும் பாடலடிகள் தமிழினத்தின் உயர்ந்த கொடைப் பண்புகளுடன் இந்த இழிந்த' கொடையை ஒப்பிடுகின்றன. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, மயிலுக்கு போர்வை கொடுத்த போகன் என் போருடன் குப்பைத் தொட்டிக்குப் பிள்ளை கொடுத்த இவர்களையும் கவிஞர் முரண் நிலையில் ஒப்பிடுகிறார்.
முறையான வாய்ப்பற்ற பெண்களின் பாலியல் இச்சை, அல்லது காமம் என்பது பாம்பாட்டியின் பாம்பு போன்றது. அது கூடைக்குள் அடங்கிப் படுத்திருக்கும் வரை ஆபத்தில்லை. ஆனால் கூடையைத் திறந்து புறப்பட்டால் மகுடியின் இயக்கத்துக்கேற்ப ஆடத் தொடங்கும். இந்நிலை மிகவும் அபாயகரமானது. பாம்பாட்டியின் செயற்பாடுகளைக் காணக் கூடாத நிலையில் கண்டுவிட்ட தனது பிள்ளையைக் கொல்லக்கூட பல இடங்களில் தாயே அனுமதி வழங்க மகுடி மீதான பிரேமை உந்தித் தள்ளியுள்ளது. எனவே தவறான உறவு, சம்பந்தப்பட்ட பெண்களின் உயிருக்கே உலை வைத்துள்ளதைப் பத்திரிகைச் செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன. குழந்தை உருவாகிய பின் தம்மைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்திய பெண்கள், தவறு நடப்பதாகக் கணவனால் அறிந்து கொள்ளப்பட்ட பெண்கள், ஏன் முறையான வைத்தியப் பராமரிப்பின்றி இரகசியமாகப் பிரசவம் நிகழ்த்திய பெண்கள் ஆகியோர் இறுதியில் மரணத்தையே சந்தித்துள்ளனர். எனவே சம்பந்தப்பட்டவர்களை மட்டுமன்றி தற்செயலாகக் கண்டுவிட்டவர்களையும் கூடச் சாட்சியாகி விடுவார்களோ என்ற சந்தேகத்தால் மரணப் பொறியை நோக்கி அழைத்துச் செல்லும் **இந்த இழிந்த ஒழுக்கத்தைக் கைவிடுவோம். மறுமணம் முதலிய நேர்வழிகள் பற்றிச் சிந்திப்போம்.** ■



## வித்துவான் பதில்கள்!



**வித்தூ அண்ணை... எப்ப பார்த்தாலும் கொரோனா மரணம், விபத்து மரணம், கொலை, கொள்ளை இப்படிச் செய்திகளைத்தானே பத்திரிகைகள் வெளியிடுகின்றன. நல்ல செய்திகளே இல்லையா?**

*விஜயரூபன், சுழிபுரம்.*

வச்சுக்கொண்டா வஞ்சகம் செய்கிறார்கள்? இருந்தால் பிரசுரிக்க மாட்டார்களா?

**வித்தூஸ்... 2020 டைரியில் ஏதாவது எழுதினீங்களா? என்ன எழுதுனீங்க?**

*சிந்துஜா, மாதகல்.*

தந்த துன்பங்கள் போதும் சென்று வா இரண்டாயிரத்து இருபதே. அடுத்த ஆண்டையாவது மருந்துடன் அனுப்பு.



**வித்துவானே! கொரானோவைப் பற்றி நச் கவிதை ஒன்று சொல்லுங்களேன்.**

*குணாளன், தெல்லிப்பழை.*

அரச சம்பளத்தில் வீட்டில் வேலை குழந்தை.




வித்து ஐயா... நீங்கள் ஒரு நாள் பிரதமரானால் என்ன செய்வீர்கள்?

*க.கவிநயா, உடுவில்*

அரசியல் கைதிகளை வீட்டுக்கு அனுப்பி விடுவேன்.

# எதிர்ப்புக் குரல்கள்

○ தருமராசா அஜந்தகுமார்



படைப்பாளியின் உள்ளத்தில் எழுகின்ற முரண்களே படைப் பொன்றின் ஆதார சுருதி. தான் வாழும் அமைப்பை, உறவு களை, அதிகார வர்க் கத்தை, குடும்பத்தை, சில நேரம் தன்னைத்தானே விசா ரணைக்கு உட்படுத்தும் புள்ளி யில் படைப்புக் கருக்கொள்கின் றது. ஆனால் சங்க இலக்கியங் களை வெறும் பாராட்டு உரைக் காகவும், பரிசில் விண்ணப்பத் துக்குமான எழுத்துகளாகவும், அதிகாரத்தின் தூண்களாகவும் சிலர் சித்திரிக்கின்றார்கள். அவற் றுக்கு உரிய ஆதாரங்கள் சங்கப் புறப்பாடல்களில் தாராளமாகச் சிந்திக் கிடக்கின்றன.

"யானே பெறுக அவன்தாள் நிழல் வாழ்க்கை
அவனே பெறுக என் நா இசை நுவறல்"
(புறம் 379)

அதாவது அரசனுடைய செல்வங் களை நான் பெறவேண்டும். என் னுடைய புகழ்மொழிகளை அவன் பெறவேண்டும் என்று பாடுகின்றார் புறத்திணை நன்னா கனார் என்ற புலவர்.
ஆனால் புகழையோ, மறுமை இன்பத்தையோ கருதாமல் அர சர்கள் இருந்திருக்கின்றார்கள் என்று புலவர் ஒருவர் பாடுகின்றார். சிலவேளை அதுவும் ஒரு புகழ்ச்சி உத்தி என்று வாசிப்புச் செய்யலாம்.

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே.
(புறம் 134)

இங்கு வணிகர்களைப் போல இலாபம் கருதி அரசன் செயற்படவில்லை என்பதைப்போல புலவனும் தன்னை வணிகன் இல்லை என்று துணிவாகக் கூறி யிருந்திருக்கின்றான். தொல்காப்பியத்தில் பரிசில் கடைநிலை என்றும், புறப்பொருள் வெண்பாமா லையில் பரிசில்நிலை என்றும் ஒரு துறை இருக்கின் றது. பரிசில் கடைநிலை என்பதே கடாநிலை என்று திரிந்தது. அதாவது அரண்மனை வாயிலில் உள்ள காவலனிடம் தனது வறுமைநிலையை அரசர்க்குக் கூறியனுப்புவதாகும். புறநானூற்றில் இத்துறையில் 17 பாடல்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலும் அரசர் புரவலர் மீதான எதிர்ப்புணர்வு வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்.

"சேய் வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க்கு உரைத்த கடைநிலையானும்"
*(தொல்காப்பியம் புறத்திணையியல் 29)*

"புரவலன் மகிழ் தூங்க
இரவலன் கடைக் கூடின்று"
(புறப்பொருள் வெண்பாமாலை 213)

இவ்வாறு வாயிலில் நிற்கும்போது அரசன் அவர்க ளைப் பார்க்காமலே பொருளைக் கொடுத்தனுப்பப் பலரும் பெற்றுச் சென்றிருக்கலாம். ஆனால் அதிய மான் நெடுமான் அஞ்சியிடம் சென்ற பெருஞ்சித்தி ரானார் என்ற புலவருக்கு தன்னைக் காணாமல் அவன் பொருளை மட்டும் கொடுத்தனுப்பியதை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. இது அரசன் மீதான தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு மாதிரியாக அமை கின்றது. தனது திறமையைக் காணாமல், பாராட்டா மல் பொருளை மட்டும் கொடுத்தனுப்பியதைக் கண்டிக்கின்றார் புலவர். தான் ஒரு வாணிகப் பரிசி லேன் அல்லேன் என்று உரக்கக் கூறிப் பரிசிலை மறுக்கின்றார். குன்றும் மலையும் தாண்டி வறுமை யைத் தாண்டுவதற்காக அவனிடம் வந்த புலவர், தனது திறமையை மதிக்காத அவன் செயலை எதிர்க் கின்றார். இதனைப் புறநானூற்றின் 208 ஆவது பாட லில் காணலாம்.

"குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்குஎன
நின்ற என்நயந்து அருளி இதுகொண்டு
ஈங்கனம் செல்க தான்என என்னை
யாங்குஅறிந் தனனோ தாங்கரும் காவலன்?
காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்
தினையனைத்து ஆயினும் இனிதுஅவர்
துணைஅளவு அறிந்து நல்கினர் விடினே"

அதே அதியமானிடம் மிக நெருக்கமாக இருந்த ஔவைக் குக்கூட பரிசில் ஒருபொழுது தாமதமாகியது. அப் பொழுது ஔவை, அவன் மீதுள்ள நம்பிக்கையை இழக்காமல், யானையின் தும்பிக்கைக்குச் சென்ற உணவுத்திரள் அதன் வாய்க்கு எவ்வாறு நிச்சயமாகச் செல்லுமோ, அவ்வாறே அவன் கையில் உள்ள கொடைப்பொருள் தன் கைக்கு வந்து சேரும் என்று புறநானூறு 101 ஆவது பாடலில் பாடியுள்ளார். ஆனால் இன்னொரு சந்தர்ப்பத்திலே அவன் மீதான எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளார். தனது தரத் தையும் எமது தரத்தையும் அவர் அறியமாட்டாரோ என்று கோபங்கொள்கின்றார். தச்சுத்தொழில் செய் வோர் காட்டுக்குச் சென்றால் ஏதாவது மரம் கிடைக்கா மல் இருக்குமா? அதைப் போல நாம் எங்கு சென் றாலும் எமக்குச் சோறு கட்டாயம் கிடைக்கும். நீதான் எமக்கு வழங்கவேண்டும் என்றில்லை என்று தனது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றார்.

"வாயிலோயே! வாயிலோயே! "என்று தொடங்கும் அந் தப் பாடல் இவ்வாறு முடிகின்றது.
"மரம் கொல் தச்சன் கை வல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே"

சிலப்பதிகாரத்திலே கோவலன் பாண்டியனால் கொல்லப்பட்ட செய்தி அறிந்ததும் கண்ணகி பொங்கியெழுந்தாள். பாண்டியன் அரண்மனை வாயில் சென்றாள். அங்கு நின்ற காவலனைப் பார்த் துப் பின்வருமாறு கூறுகின்றாள்.

"வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே"

ஔவையின் எதிர்ப்புக்குரல் வாயிலோயே என்று தொடங்குவதைப் போலவே, இளங்கோவடிகளும் கண்ணகியின் எதிர்ப்பை வாயிலோனுக்கு ஊடாக எடுத்துரைக்கும் தொடர்ச்சியைக் காண்கின்றோம். இதே போல சோழவேந்தனைக் கம்பர் எதிர்த்ததான இரண்டு பாடல்கள் முக்கியமானவை. அவை எத்தி சைச் செல்லினும் அத்திசைச் சோறே என்ற ஔவை யாரின் தொடர்ச்சி எனலாம்.

"காதமிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல் கொண்டொளித்ததோ– மேதினியில்
கொல்லிமலை நாடாளும் கொற்றவா நீ முனிந்தால்
இல்லையோ எங்கட்கிடம்.
"மன்னவனும் நீயோ? வளநாடும்
நின்னதுவோ?
உன்னை அறிந்தோ தமிழை
ஓதினேனென்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத
வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?

கணியன் புங்குன்றனாரின் பெரி யோரை வியத்தலும் இலமே என்ற வரிகளைக்கூட, எதிர்ப்பு ணர்வின் வரிகள் என்று விளங் கிக் கொள்ளலாம். மார்க்சியம் என்ற கோட்பாடு, இவ்வாறான அதிகார வர்க்கங்களை எதிர்த் துக் குரல் கொடுக்கும் நிலை தான். இதற்கு முன்னரேயே புகழ்ச்சிகளுக்கு நடுவே எத்த னையோ எதிர்ப்புணர்வுகள் வெளிப்பட்டு இருப்பதை நாம் மறக்கமுடியாது. அறம் பாடு தல் என்பது ஒருவரை அழிந்து போகும்படி பாடுவது. இதுவும் எதிர்ப்பிலக்கியத்தின் வகைதான். வசைபாடுதலையும் இதற்குள் சேர்த்து வாசிக்கலாம். நாட்டார் இலக்கியத்தில் இத்தன்மை யான ஏராளமான பாடல்கள் இருப்பதை இனங் காட்டமுடியும். மலையக இலக்கியங்களிலும், போர் இலக்கியங்களிலும் எதிர்ப்பிலக்கியத்தை இன்னும் அதிகம் காணலாம். இலங்கையின் போர் முடிவுக்கு வந்தபோது கவிஞர் சேரன் பின்வருமாறு அறம்பாடினார்.



"நெல்லும் உயிரல்ல
நீரும் உயிரல்ல
முல்லை நிலத்தில்
அலைந்து உழன்றவரை
கொல்லும் எறிகணைகள்
கூட்டாக வீசியவன்
மன்னாதி மன்னனென
மார்தட்டிக் கொள்ளுகிறான்

+++++

## பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள் 7



குழந்தைகளின்
மென்கரத்தை
அரிந்து
நெருப்பில்
எறிந்தவனுக்குத்
தாம்பூலம் தந்து
தாலாட்டுப் பாடி
கால்கள் வருடி
தலைமயிருக்கு நிறம் தீட்டி
அவன் பாழ் வயிற்றை
வழிபட்ட
அப்பாலும் அடிசார்ந்தோர்
இப்பாலும் இருப்போர்கள்
முப்பத்து முக்கோடி
படையினர்கள் எல்லோரும்
பட்டழிவதன்றி
வேறென்ன கேட்கும்
என் கவிதை?

■

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)



பிரதேச சபைக்கு மாத்திரம் விசேடமாக அங்கீகரிக்கப்பட்ட ஆளணியாக உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டதாகச் சொல்கின்றார்.
தமது சபைக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகரே அவற்றை நடைமுறைப்படுத்தியிருக்கவேண்டும் என்றும், நீதிமன்றுக்கு இந்த விடயம் செல்லும் வரையில் அவரிடமிருந்து எந்தவொரு அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் எவையும் தனக்கோ சபையின் செயலருக்கோ கிடைக்கவில்லை எனவும் தர்சன் தெரிவித்தார்.
உடுவில் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரியுடன் தொலைபேசியூடாக அடிக்கடி தொடர்பில் இருந்ததாகவும் , அவர் கூட மருதனார்மடம் சந்தை தொடர்பில் குறைகளைச் சொல்லவில்லை எனவும், தனது சபைக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் எதுவும் அறிக்கையிடாததால், மருதனர்மடம் சந்தை பிரச்சினை இல்லாமல் இயங்கியதாகத் தான் நம்பியதாகவும் தவிசாளர் கூறுகின்றார்.

### பக்கச் சார்பு

மருதனார்மடம் கொத்தணிக்கு எமது சபைக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகரே பொறுப்பு என்று சபையின் அமர்வில் பெரும்பாலான உறுப்பினர்கள் கூறியதாகவும், இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
'பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சந்தைக்கு வருபவர்களின் விவரங்களைப் பதிவு செய்யக் கூறுகின்றனர். அது சாத்தியமற்றது. எமது சந்தையை விட திருநெல்வேலி பொதுச் சந்தையிலேயே அதிகளவானோர் தம்புள்ள சென்று வருகின்றனர். அங்கு இவ்வாறான எந்தவொரு பரிந்துரைகளும் முன்வைக்கப்படவில்லை. எமது பிரதேச சபையைக் குற்றம் சுமத்தவேண்டும் என்பதற்காகவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன' என்றும் தர்சன் தெரிவித்தார்.
மருதனார்மடம் சந்தை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். சோதனை செய்வதற்கு வியாபாரிகள் விவரங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கோரப்பட்டதை ஏற்றுக் கொள்ளும் தவிசாளர், அதனை தாம் வழங்கத் தயாராக இருந்தோம் என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், 'நாளை பி.சி.ஆர். செய்யப் போகின்றோம் தாருங்கள்' என்றால் வழங்கியிருப்போம் எனவும் குறிப்பிடுகின்றார்.

### வழக்கில் ஆர்வம்

அதனை விட தமது சந்தையில் தொற்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே ஏனைய சந்தைகளில் உள்ள வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.
எழுமாற்றுப் பரிசோதனைக்கு எம்மிடமிருந்து விவரங்களைப் பெற்றுச் சோதனை செய்யவேண்டியதில்லை என்றும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சந்தை வியாபாரிகளையும் எழுமாற்றாகச் சோதனைக்கு உட்படுத்தியிருக்க முடியும் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.
வியாபாரிகளின் நேர ஒழுங்கு தொடர்பான விடயத்தை காட்சிப்படுத்துமாறு முன்வைக்கப்பட்ட பரிந்துரையை செயற்படுத்த சபையின் செயலர் ஒரு வார கால அவகாசம் தேவை என்று நீதிமன்றுக்கு முன்வைத்த பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள போதும் அது செயற்படுத்தப்படவில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மன்றுக்கு அறிக்கையிட்டுள்ளார். 'இதனைச் செயற்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது' என்று கூறும் தவிசாளர், இந்த வழக்குத் தொடர்பில் நீதிமன்றம் தன்னை அழைக்கவில்லை எனவும், எனினும் தான் வழக்கில் முன்னிலையாவதற்கான ஆர்வத்தை கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

### கடிதங்கள் வரவில்லை

தவிசாளர் குறிப்பிடுவதைப் போன்று மருதனார்மடம் சந்தைக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரால், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, சுன்னாகம் பிரதேச சபையின் செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் எவையும் தனக்கு வரவில்லை என்று சுன்னாகம் பிரதேச சபைக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.கார்த்தீபன் கூறுகின்றார்.
'ஒரு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை இன்னொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேவ முடியாது. இருப்பினும் மே மாதம் யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் மருதனார்மடம் சந்தை தொடர்பில் இடம்பெற்ற கூட்டத்தில் குறைபாடுகள் தொடர்பான விடயங்கள் என்னால் சுட்டிக்காட்டப்பட்டன' என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.
மல்லாகம் நீதிமன்றில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்ட பின்னரே சுன்னாகம் பிரதேச சபையின் செயலரால் 23.11.2020அன்று தனக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் அன்றிலிருந்து 08.12.2020 அன்று வரை மருதனார்மடம் சந்தை மற்றும் சுன்னாகம் பொதுச் சந்தை தொடர்பான அறிக்கைகள் அனுப்பப்பட்டதாகவும் கூறுகின்றார். இரண்டு சந்தைகளிலும் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் தானும் பரிந்துரைத்தபோதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

### பிடுங்கப்பட்ட அதிகாரங்கள்

"சுன்னாகம் பிரதேச சபைக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகராக இருந்தபோதும், எனக்கு இருந்த அதிகாரங்கள் பல, 2018ஆம் ஆண்டு சபையை தவிசாளர் பொறுப்பேற்ற பின்னர் பிடுங்கப்பட்டு விட்டன. வேலையாள்கள் கட்டுப்பாடு கூட மீளப்பெறப்பட்டன" என்கிறார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கார்த்தீபன்.
23.11.2020அன்று நீதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தானும், மருதனார்மடம் சந்தைக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகரும் பி.ப. 2 மணியளவில் சந்தையில் வைத்து, சுன்னாகம் பிரதேச சபையின் செயலருக்கு அங்கு செய்ய முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை விளக்கமளித்துக் கொண்டிருந்ததாகவும், அங்கு வந்த சபையின் தவிசாளரும் மூன்று உறுப்பினர்களும், பொதுமக்கள், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்னிலையில் தன்னுடன் முரண்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

### கூட்டுப் பொறுப்பு

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பிரதேச சபையின் செயலர், பிரதேச சபையின் தவிசாளர் என்று கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டிய இடத்தில் அது தவறவிடப்பட்டுள்ளது. சந்தையிலுள்ள சுகாதாரக் குறைபாடுகளை சுகாதாரத்துறையினர் உரிய வேளையில் சுட்டிக்காட்டியிருந்தபோதும், உள்ளூராட்சி தரப்பு அதை ஒழுங்காக நடைமுறைப்படுத்தவில்லை. கூட்டுப் பொறுப்புடன் பணியாற்ற வேண்டிய அதிகாரிகளிடையேயான இடைவெளியே புதிய கொத்தணியைப் பிறப்பித்திருக்கின்றது.

### அசிரத்தை

மருதனார்மடம் புதிய சந்தையின் கட்டுமானங்கள் முடிவுற்றும் அது நீண்ட காலம் திறக்கப்படவில்லை. சந்தையில் நெருக்கடியான நிலைமை நிலவியதற்கு இதுவும் காரணம். சந்தை வியாபாரிகள் தொடர்பான விவரங்கள் தெளிவாகவும், துல்லியமாகவும் பிரதேச சபையால் பேணப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக தம்புள்ள உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்குச் சென்று வரும் வியாபாரிகள் தொடர்பான தரவுகள் பிரதேச சபையிடம் சரிவர இருக்கவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை, அரசியல் கண்ணோட்டத்துடன் அணுகியதால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்பட்ட அசிரத்தை என்பனவும் மருதனார்மடம் கொத்தணிக்கு அடிப்படையாக அமைந்து விட்டது.

## செய்வீர்களா?

இந்தக் கொத்தணிக்கான ஆபத்துக்கள் தொடர்பில் போதுமான முன்னெச்சரிக்கைள் விடுக்கப்பட்டும் அது தடுக்கப்படவில்லை. முன்னெச்சரிக்கைகளை கவனத்தில் கொள்ளாது, இந்தக் கொத்தணியைத் தடுக்கத் தவறிய குற்றவாளி அல்லது குற்றவாளிகள் யாவர்? கொத்தணியால் ஏற்பட்டுள்ள இழப்புக்கு பதில் கூறப்போவது யார்? எந்தவொரு பிரச்சி னையையும் அரசியல் சாயம் பூசி விடயங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் பிற்போக்கான மனநிலையிலிருந்து எப்போது வெளியே வரப்போகின்றோம்? வெறுமனே இந்தக் கொத்தணியையும் சாதாரணமாக கடந்து விடப்போகின்றோமா?
மாகாணத்துக்குரிய உள்ளூராட்சி மற்றும் சுகாதாரத்துறையுடன் மாத்திரம் முழுமையாகத் தங்கியுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் நடவடிக்கை எடுக்காமல் மௌனம் சாதிப்பது ஏன்? கொரோனாப் பரவலைத் தடுக்க முடியாது என்ற போதிலும் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அதனைத் தவற விட்ட தரப்புகளுக்கு எதிராக நிர்வாக ரீதியாக இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன்? வடக்கு ஆளுநர் இனியாவது கண் திறந்து மருதனார்மடம் கொத்தணி தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துவாரா? ■

---

# சிவ வேடதாரி....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது, இரசாயனங்கள் செயற்கைப் பொருள்கள், தீங்கு விளைவிக்கக் கூடிய புதிய உள்ளீடுகள் என்பவற்றைப் பயன்படுத்தி விபூதி, சந்தனம்கு, ங்குமமம் முதலியவற்றை உற்பத்தி செய்வதனால் ஏற்படும்; சருமப் பிரச்சினைகள் உள்ளிட்ட வியாதிகளின் உருவாக்கம். சமயவாதிகளுக்கு இப்போதெல்லாம் இதில் அக்கறை இல்லாவிட்டாலும், இவ்விடயத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சமூக மருத்துவத் துறையினர் இன்னும் ஏன் கவனஞ் செலுத்தாமல் உள்ளனர் என்பது புரியவில்லை.
மூன்றாவதாகச் சுற்றுச்சூழற் பிரச்சினைகள். பூவரச இலைப் பாவனையை விபூதிப் பிரசாத வழங்கற் செயற்பாட்டில் இருந்து விலக்கியதன் மூலம் சைவசமய மரபுரிமை அழிப்பு நிகழ்வது மட்டுமன்றி சூழலியல் ரீதியாக நட்புடைய சுற்றுச் சூழலை பாதுகாக்கக் கூடிய இலைக்குப் பதிலாக சுற்றுச் சூழல் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தத்தக்க பொலித்தீன், பிளாஸ்ரிக் முதலியவற்றின் தேவையற்ற பாவனையை அதிகரித்துள்ளோம். அதனூடாக நாம் வாழும் உலகை மனிதர்கள் வாழத் தகுதியற்றதாக்கும் கைங்கரியத்திலும் ஈடுபடுகிறோமல்லவா ?
இது வெறுமனே மரபுரிமை சார்ந்ததோ சுகாதார , மருத்துவப் பிரச்சனையோ அல்லது சுற்றாடல் சார்ந்த ஒரு பிரச்சினையோ மட்டுமல்ல. இவற்றைச் சீர்படுத்துவதன் ஊடாக உள்ளூர் வர்த்தகத்தையும் விருத்தி செய்ய முடியும். 2017களில் இந்திய அமேசனில் சாண வறட்டி விற்பனைக்கு வந்திருந்தமையை அவதானிக்க முடிகிறது. 2019களின் கடைசிக்காலங்களில் அமெரிக்காவிலுள்ள பல்பொருள் அங்காடிகளில் 10 சாண வறட்டிகள் இலங்கை விலையில் ஏறத்தாழ 530 ரூபா வரை விற்பட்டமையை ரிரிஎன் இணையத்தளச் செய்தி பதிவு செய்திருக்கிறது..
எங்களிடம் பெருந்தொகையான மாடுகள் இல்லாவிட்டாலும் கூட, இருப்பவற்றில் இருந்து ஏன் நாங்கள் ஒரு முறையான விபூதித் தொழிற்சாலையை அல்லது பல உற்பத்தி மையங்களை உருவாக்கக் கூடாது.? கிராமிய மட்டத்தில் இதற்கான முன்னெடுப்புக்களைச் செய்வது பயன்தரும். கிராமியக் குழுக்கள், மகளிர் உற்பத்திக் குழுக்கள், விவசாயச் சேவை வழிகாட்டிகள் இவை தொடர்பாகச் சிந்திக்க முடியும். மெய்யான சமூக - சமயச் செயற்பாட்டாளர்கள் இது தொடர்பான முன்னெடுப்புக்களைச் செய்வதன் மூலம் இந்த நிலவரங்களை மாற்றி அமைக்க முடியும். இதே வகையிலேயே சந்தனம், குங்கும உற்பத்திகள் பற்றியும் சிந்திக்கலாம். இவற்றோடு தொடர்புபடக் கூடிய அரச பொது அமைப்புக்கள் இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள், தரநிர்ணயங்களை ஏற்படுத்தலாம். இவை வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதோடு போரின் பின்னணியில் தங்குநிலைச் சமூகக் குணங்குறிகளை காட்டும் உள்ளூர்ச் சமூகத்தை உற்பத்திச் சமூகமாக மாற்றும் செயற்பாட்டுக்கு சிறிய அளவிலேனும் உதவமுடியும்.
இவ்வாறு எல்லாம் புதிய சமூக நிலவரங்களின் கீழாக புதிய தொழில் துறைகளைத் தொடங்கவும், அதனூடாக குறிப்பிட்ட இனக்குழுக்களின் மரபுரிமை சூழலியற் பாதுகாப்பையும் செய்யக் கூடிய வாய்ப்புக்களைப் பெருக்காமல், நிவாரணச் சமூகத்தையே கட்டி எழுப்புவதை நிறுத்த முயற்சிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். ■

# குழைக்காட்டு கதைகள் II

கோகுலராகவன்

மார்க்கண்டுக் கிழவனுக்கு அறுபது எழுபது மாடுகள் பட்டியில் நின்றன. மாட்டோடு திரிவதே அவரது தொழிலாக இருந்தது. அவரது பட்டி மாட்டின் குறி 'மாதிபி' என்று இருக்கும். 'மார்க்கண்டு தில்லையம்பலப் பிள்ளையார்' என்பதன் சுருக்கமே அது. அந்தக் காலத்தில் வரணிப் பக்கமாக இருக்கும் தில்லையம்பலப் பிள்ளையாரை மனதில் கொண்டு மாடுகளை வளர்த்தார்கள். நோய் நொடி வராமல் ,கள்ளர் காவாலிகள் பிடிக்காமல், மாடு- கன்று பட்டியில் பெருக வேண்டுமென்ற நேர்த்தி காரணமாக தில்லையம்பலப் பிள்ளையார் பெயரை தமது மாட்டுக்கு குறியாகச் சேர்த்துச் சுடுவார்கள். 'சிதிபி', 'மதிபி', 'விதிபி' என்ற பல வகைக் குறியோடு எங்களூரில் மாடுகள் திரிவதைக் கண்டிருக்கின்றேன்.

மாட்டுக்கு குறி சுடுவது எங்கள் ஊரைப் பொறுத்தவரையில் ஒரு சடங்குதான். ஐம்பது, அறுபது மாடுகளுக்கு குறி சுட்டு முடிக்க இரண்டு மணியாகி விடும். எழுத்துக்களை குறியாக எழுத வளைவுகளைக் கொண்ட கம்பிகள் தயாரித்து வைப்பார்கள். நன்றாக தென்னம் பொச்சு நெருப்பில் சூடாக்க வேண்டும்.

நெருப்பை சுளகால் மளமள வென்று விசுக்கும்போது கம்பி விரைவாகச் சூடேறும். மாட்டில்சூடு வைக்கும்போது, அதன் தோல் பொரிந்து அவியும்போது ஒரு சுட்ட வாசம் கிளம்பும். மாடு மெதுவாக 'அம்மா' என முனகும். எழுத்துக் குறி, கன்னக்குறி, பட்டிக் குறி, தொடைச் சீப்புக்குறி போன்ற குறிகள் சுடப்படும். கன்னச் சூடு, பட்டிக்குறி போன்றவை தமிழ்ப் பிராமி எழுத்துக்களாக இருக்கலாம் என நினைக்கிறேன்.

கிழவன் மார்க்கண்டு ஒரு தைப்பூசத்துக்கு 40,50 மாடுகளுக்கு குறி வைத்தார்.

நாலைந்து பேர் சேர்ந்து மாடுகளின் கால்களை கட்டி, பாட்டில் விழுத்தி குறி வைத்தார்கள். நாம்பன் மாடு என்றால் அதைப் பழக்கி முடிய, குறி வைத்தே எருதுக் தேரலத்துக்கு கொண்டு வரவேண்டும். பின்தொடையில் திருநீற்றுக் குறி இழுத்தது போல மூன்று தடித்த அகலமான குறி இரண்டு தொடைப்பக்கமும் சுட வேண்டும். இது மாட்டை அழகாக்கவும், மாட்டை புஷ்டி ஆக்கவும், பின்பக்கத்தை அகலமாக்கவும் வைக்கப்படும் குறி என்பார்கள். குறி வைத்த புண் ஆற பத்து, பதினைந்து நாள்கள் செல்லும். பட்டை கழன்று தொங்கும்.

இந்தக் குறி சுடும் மரபு இலங்கையில் மட்டும் இருப்பதாகவே நான் நம்புகின்றேன். தமிழ் நாட்டின் சினிமாவில் மாடுகளில் இவ்வாறு எருதுகளுக்கு குறி இருப்பதைக் காண முடியவில்லை.

கிழவன் மார்க்கண்டு மாடுகளுக்கு குறி வைத்ததை அவரது பேரன் திரவியம் தனது நண்பர்களோடு வேடிக்கை பார்த்தான். அவர்கள் தான் நெருப்பு மூள சுளகும் விசுக்கிக் கொடுத்தார்கள். அவர்களுக்கு வயது பத்து, பன்னிரண்டுதான் வரும்.

மறுநாள் திரவியம் நண்பர்களோடு விளையாடும்போது அவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது.

" டேய் குறி சுட்டு விளையாடுவோமாடா"

"ஓமடா"

நண்பர்கள் ஆமோதித்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை எடுத்தார்கள். பொச்சுக் கொண்டு வர, சுளகு கொண்டு வர, நெருப்புப் பெட்டி கொண்டு வர, ஓடிப் போனார்கள். மார்க்கண்டு கிழவனின் சூட்டுக் கோல்களை எடுத்துக் கொண்டு வந்தான் திரவியம்.

மாடுதான் இல்லை. ஒரு மாட்டுக் கன்றைப் பிடிக்கக் கலைத்தார்கள். அது தப்பி ஓடி விட்டது. மாட்டுக்கு என்ன செய்வது? மாடு இல்லையே.

"டேய் யாராவது ஒருவர் மாடாக நடிப்போம்"

எல்லோரும் மெதுவாக நழுவினார்கள்.

"சரி நான் நடிக்கின்றேன்"

திரவியம், விளையாட்டு குழம்பக் கூடாது என்பதற்காக மாடாக நடிக்க ஒத்துக் கொண்டான்.

" நாம்பன் மாட்டின் பின்பக்க குறியை முதலில் சுடுவம். நெருப்பை மூட்டு"



மாட்டுக்கு குறி சுடுவது எங்கள் ஊரைப் பொறுத்தவரையில் ஒரு சடங்குதான். ஐம்பது, அறுபது மாடுகளுக்கு குறி சுட்டு முடிக்க இரண்டு மணியாகி விடும். எழுத்துக்களை குறியாக எழுத வளைவுகளைக் கொண்ட கம்பிகள் தயாரித்து வைப்பார்கள்.

நெருப்பு மூட்டி சூட்டுக் கோல்கள் நன்றாகக் காய வைக்கப்பட்டன. கோல்கள் சிவப்பாக பளபளவென்று மினுங்கத் தொடங்கின.

திரவியம் குறி சுடுவதற்கு தயாரானான். இரண்டு பேர் கையையும் இரண்டு பேர் காலையும் பிடிக்க ஆயத்தமானார்கள்.

அடுத்தவன் குறி சுடத் தயாரானான். குறி சுட முன்னர் திரவியம் சொன்னான்,


"மாடு திமிறும் .எகிறும் .பறிக்கும். விடக்கூடாது. சரியோ?"

திரவியம் குப்புறப் படுக்க நாலு பேர் கையையும் காலையும் பிடிக்க காற்சட்டையை கொஞ்சம் பதித்துவிட்டு குறிவைப்பவன் சூட்டுக் கம்பியை திரவியத்தின் மீது வைத்தான்.

"என்ரை ஐயோ................"

திரவியம் கத்திய சத்தம் ஏழு கட்டைக்குக் கேட்டதாம். பொடியன் பிடியில் இருந்து திமிறிக்கொண்டோடி, குளத்தில் போய் விழுந்தான்.

பாவம் தாய் புண் மாறும் மட்டும் நல்லெண்ணையும் மஞ்சளும் தடவிக் களைத்துவிட்டாள்.




சனத்

# ஆயிரம் 'சூழ்ச்சி'!

மலையகப்பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கோஷம் கடந்த 6 வருடங்களாக எழுப்பட்டு வருகின்றது.எனினும், இன்னும் தீர்வு காணப்படவில்லை. இது விடயத்தில் தொடரும் இழுபறிக்கு முடிவுகட்டி, தீர்வைப் பெற்றுக்கொடுப்பதில் தொழிற்சங்கங்கள் தோல்வி கண்டுள்ளன. பேரம் பேசும் சக்தியை இழந்துள்ளன.

ஆரம்பத்தில் அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா எனக் கூறப்பட்டாலும், அதன்பின்னர் அனைத்துக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய வகையில் ( வரவுக் கொடுப்பனவு,தேயிலை விலைக்கேற்ற கொடுப்பனவு, உற்பத்திக்கொடுப்பனவு) ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா அல்லாது, அனைத்துக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய வகையில் ஆயிரம் ரூபாவை வழங்குவதென்பது தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும். ஏனெனில் தோட்ட நிர்வாகங்கள் இலகுவில் அடைய முடியாத தொழில் நிபந்தனைகளையே வழமையாக முன்வைப்பன. இம்முறையும் அவ்வாறானதொரு சம்பள உயர்வுச் சூத்திரமே (சூழ்ச்சியே) வகுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2020 மார்ச் முதல் குறைந்தபட்ச நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்ற ஆணையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிறப்பித்திருந்தார். ஆனால் அவரின் கட்டளை எடுபடவில்லை. தன்னுடையது அறிவிப்பு தான் சுற்றுநிரூபம் அல்ல என பாகுபலி பாணியில் அவர் வீரவசனம் பேசினாலும் சம்பள விடயத்தில் அது எடுபடவில்லை.

ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்ற முன்மொழிவு வரவு செலவுத் திட்டத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, கம்பனிகள் வழங்க மறுக்கும்பட்சத்தில்கூட, அரசால் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் தொழிலாளர்களுக்கு கொடுப்பனவை வழங்கமுடியும். ஆனால் அதற்கு அரசு தயாரில்லை. கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் இதற்கான அழுத்தத்தை பிரயோகிப்பதற்கு தயாரில்லை.

சம்பள உயர்வு தொடர்பில் நடைபெற்ற ஐந்து சுற்று பேச்சுகளும் தோல்வி கண்டுள்ளன. இது தொழிற்சங்கங்களுக்கு ஏற்பட்ட பெரும் அடி. தொழிலாளர்கள் மத்தியிலும் எதிர்ப்புகள் வலுத்துள்ளன. இந்நிலையில் தமது இயலாமையை, படுதோல்வியை மூடிமறைப்பதற்காகவே கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறவுள்ளோம் என்ற அறிவிப்பை தொழிற்சங்கங்கள் விடுத்துள்ளன. இதுகூட காலம் கடத்தும் நாடகத்தின் மற்றுமொரு அங்கமாகும்.

தற்போது ஆயிரம் ரூபா கதை மறைந்து, தொழிற்சங்கங்கள் வெளியேறுமா, இல்லையா என்ற வாதமே மேலோங்கியுள்ளது.

பெருந்தோட்டங்களின் நில உரிமை அரசின் வசமே இருக்கின்றது. நிறுவனங்களுக்கு குத்தகைக்குதான் வழங்கப்பட்டுள்ளன. கம்பனிகள் அடங்க மறுக்கும்பட்சத்தில் சட்டத் திருத்தத்தின் ஊடாக முகாமைத்துவத்தைக்கூட மாற்றலாம். எனவே, அரசிடம் அஸ்திரம் இருந்தும், அதனை ஏவாமல், ஏவுவதற்கு அழுத்தம் கொடுக்காமல், வெளியேறுவோம் எனக் கூறி சமாளிப்பது இயலாமையின் உச்சக் கட்டமாகும். வெளியேற்றம் என்பது நடக்காது, ஆனாலும் அதற்கான தற்போதைய அவசர ஒத்திகையென்பது தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கும், காலம் கடத்துவதற்குமே என்பதனை தொழிலாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அடிப்படை நாள் சம்பளமாக 500 ரூபா வழங்கப்பட்டது. இதர கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக நாளாந்தம் 730 ரூபா கிடைத்தது. அதன்பின்னர் 2019 இல் 750 ரூபா கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதாவது வெறும் 20 ரூபா சம்பள உயர்வே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட உரிமையாளர்களாக்கினால் அவர்களால் தோட்டங்களை நிர்வகிக்கமுடியும். ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் உழைக்க முடியும். உப தொழில்களையும் முன்னெடுக்கலாம். அதற்கான யோசனையும் இரு அரசுகளாலும் முன்வைக்கப்பட்டன. எனவே, கம்பனிகள் தொடர்ந்தும் கண்ணாம்மூச்சி விளையாட்டில் ஈடுபட்டால் ஆளுந்தரப்பு, கடும் நடவடிக்கையில் இறங்கவேண்டும்.

உதயன் – சஞ்சீவியில் வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்ற, 'தடயத்தை தேடி' பகுதியில், இதுவரை வெளிவந்த குற்றங்கள் அல்லது துயர் நிகழ்வுகளின் தற்போதைய நிலை என்ன என்று அறிய ஒரு உந்தல் இருக்கும். அதனால் அவை பற்றிய ஒரு மீள்புலனாய்வை மேற்கொண்டு, அவற்றைச் சுருக்கமாக வாசகர்களுக்குத் தருகின்றோம்.

# குற்றங்களுக்கு பின்னால்...!

○ உளவாளி

14.03.2020




### முன்கதை

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு செம்மணி வீதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் , பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டார். இதனை அவருடன் வாழ்ந்துவரும் பெண் (மனைவியல்ல) மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையிட்டார். இதனையடுத்து அவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிகிச்சை பெறும்போது அங்கிருந்து அவர் தப்பியோடி விட்டார். வாள்வெட்டுக் குழுக்கள் பற்றிய தகவல்களைப் பொலிஸாருக்கு குறித்த நபர் வழங்கி வந்துள்ளார். பின்னர் அவருக்கும் பொலிஸாருக்கும் இடையே முரண்பாடுவரவே, அதற்குப் பழிவாங்கவே இப்படி அவரைக் கைது செய்து , மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார் என்று கூறப்பட்டது. இதுபற்றி ஒரு பன்முகப்பார்வையாக உண்மைகளை வெளிப்படுத்தினோம்.

### இப்போது...!

பொலிஸாரால் தாக்குதலுக்குள்ளாகி, மருத்துவமனையில் இருந்தபோது 'கம்பி நீட்டிய' குறித்த நபர், பின்னர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டார். சில வாரங்களின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் அவர் கல்வியங்காடு பகுதியில் வைத்து, வாள்வெட்டுக் குழுவொன்றால், தாக்கப்பட்டார். இதன்போது கடுமையான வாள்வெட்டுக் காயங்களுக்கு உள்ளான அவர், இப்போதும் சிகிச்சை பெற்று வருகிறார்.

29.08.2020




### முன்கதை....

சுவிஸில் இருந்து யாழ் .வந்த மத போதகருடாக தாவடியைச் சேர்ந்த ஒருவர் முதலாவது கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தார் . பின்னர் அரியாலையிலும் சிலர் கண்டுபிடிக்கப்பட்டனர். கொரோனா தொற்று ஏற்பட்டு அவர்களின் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள், மனநிலை மாற்றம், சமூகம் அவர்களை எதிர்கொண்ட விதம் , கொரோனாச் சிகிச்சை அனுபவம் என்பவற்றை இரண்டு வாரங்களாக விரிவாக ஒரு அனுபவப் பகிர்வாக வெளிப்படுத்தியிருந்தோம்.

### இப்போது...!

கொரோனா வைரஸ் தொற்று இப்போது அதிகளவு பரவலாக உள்ளது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு முன்னரே கூறியிருந்தோம். "எங்களைக் கண்டவுடன் முகக் கவசங்களை அணிந்து விலகி நின்றவர்களிடம், "எங்களை கண்டவுடன் அல்ல எப்போதும் முக கவசம் அணியுங்கள். ஒருவருக்கொருவர் இடைவெளி பேணுங்கள்"" என்று கூறியிருந்தோம். இப்போது நாங்கள் அச்சத்துடனும் விழிப்புடனும் இருக்கிறோம். வீட்டு முற்றத்துக்கு வருவது என்றால் கூட முகக் கவசம் அணியாமல் வருவதில்லை. எல்லோரையும் அவ்வாறு நடந்துகொள்ளுமாறு அன்பாக வேண்டிக்கொள்கிறோம்" என்று தங்கள் எதிர்பார்ப்பை வெளியிடுகின்றனர் கொரோனாவில் இருந்து மீண்டவர்கள்.

15.08.2020

## 16 வயதினிலே...!



### முன் கதை

வடமராட்சி, வல்வெட்டித்துறை பகுதியில் தொடர் கொள்ளைகளால் மக்கள் அச்சத்தில் உறைந்திருந்தனர். எதிர்பாராத விதமாக அந்தக் கொள்ளைக் கும்பல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது அந்த கொள்ளைக் கும்பலின் தலைவனாக 16 வயது மாணவன் செயற்பட்ட அதிர்ச்சியூட்டும் உண்மை வெளிவந்தது. இன்னொரு மாணவனை அச்சுறுத்தி அவனை வைத்தே அவனது வீட்டின் நகைகள் திருடப்பட்டமை தொடர்பிலும், பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து மறைந்து திரிந்தவனை பொலிஸார் எவ்வாறு கைது செய்தனர் என்பது பற்றி விரிவாக ஆராய்ந்திருந்தோம். அதேவேளை இந்த 16 வயதுக்காரன் தலைமையிலான கொள்ளைக் கும்பலின் நகைகளை சில ஆயிரம் ரூபாவோடு அமுக்கிய பெண் பற்றியும் குறிப்பிட்டிருந்தோம்.

### இப்போது...!

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட அனைவரும் பிணையில் விடுதலையாகி வந்துள்ளனர். நகைகள் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரது சகோதரர்களும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து கொள்ளையிடப்பட்ட நகைகள் மீட்கப்படவில்லை. இவர்களது வீட்டுக்கு மாலை வேளையில் அதிகளவான ஆண்களின் நடமாட்டம் இருக்கின்றது எனவும் தொடர்ந்து கஞ்சா விற்பனை நடைபெற்று வருகிறது என சந்தேகம் உள்ளது எனவும் கூறப்படுகின்றது.

11.09.2020

## "ஹெரோய்ன் பிடிக்குள் கிளிநொச்சி"

### முன்கதை....

கிளிநொச்சி பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன். நான்கு மாணவர்கள் கிளிநொச்சி குற்றத்தடுப்பு பிரிவிரால் கைது செய்யப்பட்ட செய்தியால் வட மாகாணமே மிரண்டு போனது. மாணவர்களிடமே ஹெரோயின் பாவனையா... என்ன நடந்தது என ஆராய்ந்தபோது போதைப்பொருள் வலையமைப்பு எவ்வளவு தூரம் கிளிநொச்சியில் இறுக்கமாகப்பரவியுள்ளது என்ற பயங்கரமான உண்மைகள் வெளிவந்தன.

### இப்போது......!

கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.தொடர்ச்சியாக ஹெரோய்ன் பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டபோதும் விற்பனை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கஞ்சா மற்றும் கசிப்பு பாவனையும் அதிகரித்தே காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

# ஓராண்டுகால...

ஆனால் எல்லாவற்றையும் இலகுவாகக் கடப்பதற்கு அவர்களுக்கு இன முரண்பாடுகள் உதவும்.ஜெனிவாக் கூட்டத் தொடரை முன்வைத்து ஓர் இன அலையைத் தட்டியெழுப்பினால் அது ஒன்றே அவர்களுக்குப் போதும்.இப்படிப் பார்த்தால் 2020 இல்அவர்களுடைய வெற்றிக்கு அடிப்படையாக இருந்த கொவிட்19 இப்பொழுது அவர்களுக்கு எதிரான உணர்வலைகளைத் திரட்டும் விவகாரமாக மாறி இருந்தாலும்கூட, தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான உணர்வுகளை ஒன்றுதிரட்டுவதன் மூலம் அவர்கள் கொவிட்19இன் தீய விளைவுகளை இலகுவாகக் கடந்துவிடுவார்கள்.

எனவே தொகுத்துப் பார்த்தால் ராஜபக்சக்களின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் முதலாவது ஆண்டின் முடிவில் நமக்கு கிடைக்கும் சித்திரம் மிகவும் தெளிவானது. அது என்னவெனில் அவர்கள் முன்னைய ஆட்சியின் தொடர்ச்சியாகவே இந்த முறையும் சிந்திக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் தங்களுடைய சொந்த வெற்றியின் கைதிகள். யுத்த வெற்றிதான் அவர்களுடைய அடிப்படைப் பலம். அதேசமயம் அந்த வெற்றியின் கைதிகளும் அவர்கள். அந்த வெற்றிக்கு வெளியே அவர்களால் சிந்திக்க முடியாது. அந்த வெற்றியை தலைமுறைகள் தோறும் பாதுகாப்பதன் மூலம் அல்லது அந்த வெற்றிக்கான உரிமையை தலைமுறைகள் தோறும் பாதுகாப்பதன் மூலம் ஒரு வம்ச ஆட்சியைத்தான் அவர்கள் ஸ்தாபிக்க முடியும்..

எனவே கடந்த ஓராண்டு கால ஆட்சியைத் தொகுத்துப் பார்த்தால் அவர்கள் இறந்த காலத்தில் இருந்து பாடங்களைப் பெற்றிருந்தாலும் அந்த பாடங்களின் அடிப்படையில் ஒரு புதிய காலத்தை கட்டமைக்கவும் திட்டமிடவும் முடியாதபடிக்கு அவர்கள் தங்களுடைய சொந்த வெற்றிகளின் கைதிகளாக காணப்படுகிறார்கள்.2005 இலிருந்து தொடங்கி 2015 வரையிலான அவர்களுடைய முதலாவது ஆட்சிக்காலத்தில் அவர்கள் செய்த அதே தவறுகளைத்தான் இந்த முறையும் செய்யப்போகிறார்களா?



# வெள்ளை முகாபே!

ஆர்.பிரகாஷ்

உலகின் ஆகப்பழைமையான ஜனநாயக நாடு' என்று தன்னைத்தானே தம் பட்டம் அடித்துக்கொள்ளும் அமெரிக்காவின் மீது மிகப் பெரும் கரும்புள்ளி குத்தப் பட்டுள்ளது. அந்த நாட்டின் நாடாளுமன்றக் கட்டடம் ட்ரம்பின் ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட ஆட்சிக் கவிழ்ப்புக்கு நிகரான சதி இது.

பொதுவாக ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்குத் தேசங்களில் இடம்பெறும் இந்த இழிசெயல் இம்முறை அமெரிக்காவில் இடம்பெற்றிருப்பதை உலகின் எட்டாவது அதியம் என்றும் கூடக் கொள்ளலாம். அந்த அளவுக்குக் கனதியானது. ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்காவுக்குப் புதிதல்ல. ட்ரம்பின் ஆட்சியில் கடந்த வருடம்



புளொட் என்னும் கறுப்பினத்தவர் கொல்லப்பட்டதை அடுத்து கறுப்பினத்தவர்கள் தமக்கு நீதிகேட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சில போராட்டங்கள் கலவரங்களாக மாற்றம் பெற்றன. ஆனால் அது வேறு இது வேறு. தற்போது நடைபெற்றுள்ளது மக்கள் ஆணையை மீறிய செயல். நாட்டின் அதிஉயர் சபை மீதான தாக்குதல். ஆதலால் இது மற்றைய அனைத்திலும் பாரதூரமானது.

### ட்ரம்பே காரணம்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் உச்சக் கட்ட ஜனநாயகத்துவம் வாய்ந்தது. 50 மாநில மக்களின் விருப்பமும் 50 க்கும் மேற்பட்ட தேர்தல் சபைகள் மூலமாக அறியப்படுகின்றது. அங்கு வாக்கு மோசடிகள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அதேபோன்று இதுவரை இடம்பெற்ற தேர்தல்களில் எல்லாம் வெற்றிபெற்ற தரப்பினருக்கு ஆட்சியைக் கைமாற்றுவதெல்லம் அதியுயர் நாகரீகத்துடன்தான் இடம்பெற்றது. ஆனால் இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளில் இருந்து ட்ரம்ப் மிகுந்த வேறுபாட்டைக் காட்டிவிட்டார். எதிலும் கேலிக்கூத்தை வெளிப்படுத்தும் அவர் இதிலும் அவ்வாறே நடந்துகொண்டார். 'தேர்தல் முடிவுகள் தவறானவை. வாக்களிப்பில் ஒட்டுமாட்டு இடம்பெற்றுள்ளது. இந்த முடிவுகளை ஏற்க மாட்டேன்' என்று ட்ரம்ப் தெரிவித்துச் சர்ச்சையை ஏற்படுத்தினார். சர்வதேச அரங்கில் அமெரிக்காவுக்குப் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியது இந்த அறிவிப்பு. அத்துடன் ட்ரம்ப் நிற்கவில்லை. 'ஆட்சியை ஒப்படைக்க மாட்டேன். நீதிமன்றத்தை நாடுவேன்' என்று தெரிவித்து பைடனின் வெற்றிக்கு எதிராக நீதி மன்றத்தையும் நாடினார். ஆனால் ட்ரம்பின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று தெரிவித்த அமெரிக்க நீதிமன்றங்கள், அவரால் தொடுக்கப்பட்ட வழக்குகளைத் தள்ளுபடி செய்தன. அதன் பின்னரும் 'தேர்தல் முறைகேடு' என்ற தேய்ந்த ரெக்கோர்டை திரும்பத் திரும்ப ஒலிக்க விடுவதைத்தான் ட்ரம்ப் செய்துகொண்டிருந்தார். கடந்த வியாழன்று பைடனின் வெற்றியை உறுதிப்படுத்திச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அமெரிக்க நாடாளுமன்றத்தில் இடம்பெறுவதாக இருந்தது. இதைத் தடுக்கும் வகையிலேயே பல்லாயிரம் கலகக்காரர்களால் இந்த வெறிச்செயல் அரங்கேற்றப்பட்டது. ட்ரம்பின் தொடர்ச்சியான காழ்ப்புணர்வுப் பதிவுகள்தான் இந்தக் கலவரத்தைத் தூண்டின என்கின்றனர் அவதானிகள்.

உலக்உலா

### ஆபிரிக்காவும் அமெரிக்காவும்

பொதுவாக இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கள் ஆபிரிக்க நாடுகளில்தான் இடம்பெறும். சிம்பாப்வேயை சில தசாப்தங்களாக ஆட்சிசெய்த றொபேர்ட் முகாபே என்ற சர்வாதிகார ஜனாதிபதிக்கு எதிராக அந்த நாட்டு இராணுவம் பொதுமக்களுடன் இணைந்து கடந்த மூன்று வருடங்களின் முன்னர் ஆட்சிக் கவிழ்ப்பை முன்னெடுத்தமை பலருக்கு நினைவிருக்க லாம். அதுமட்டுமல்லாமல் மாலி, சோமாலியா தேசங்களில்தான் இத்தகைய கலவரங்கள் இடம்பெறும். தற்போது அது அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது. எத்தகைய வல்லரசாக இருந்தாலும் ஜனநாயக பன்மைத்துவம் கொண்டிருந்தாலும் தேசத்தின் நலனில் அக்கறையில்லாத ஒருவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தால் அது எவ்வளவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு இந்த காட்டுமிராண்டிக் கூட்டம் ஒரு எடுத்துக்காட்டு.

### ட்ரம்புக்குப் புதிதல்ல

இத்தகைய் சர்ச்சை ட்ரம்புக்குப் புதிதல்ல. மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைத்தமை, அமெரிக்கக் கறுப்பினத்தவர்களை அருவருக்கத்தக்க எலிகள் என்றமை, கறுப்பினத்தவர்களின் போராட்டத்தை கண்டும் காணாமலும் இருந்தமை, ஆபிரிக்க நாடுகளுக்குப் பயணத்தடைகளை விதித்தமை, அகதிகள் நுழைவதற்குத் தடை விதித்தமை, ஐ.நாவில் இருந்து வெளியேறியமை, அதன் நிதியை நிறுத்தியமை, பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியமை என்று இந்த நீண்ட திருகுதாளப் பட்டியலில் தற்போது இந்த ஜனநாயகக் கொலையும் இடம்பெறுகின்றது. ஒன்றுமட்டும் உண்மை. ட்ரம்ப் ஒரு வெள்ளையின முகாபே கூடவே அவர் ஒரு வரலாற்று எச்சில்.

## விளையாட்டு

ஆர்.லயனல்

# கலங்காதே!

இந்திய அணிக்கு உலகமெங்கும் பரந்துவிரிந்த ரசிகர்கள் பட்டாளம். அதே போன்று வெறுப்பாளர்களுக்கும் குறைவில்லை. எனினும் இந்திய அணியிலேயே வெறுப்பாளர்கள் இல்லாத இரு வீரர்கள் உள்ளனர். ஒருவர் தமிழக வீரர் நடராஜன். இன்னொருவர் மொகமட் சிராஜ். இருவரும் மிகமிக வறுமையான பின்னணியில் இருந்து வந்தவர்கள். இவர்களில் தற்போது இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ள சிராஜின் நிகழ்கால வாழ்க்கைப் போராட்டம் மிகக் கடுமையானதும் கொடுமையானதுமாகும். தற்போது சமூக வெளியெங்கும் இவர் தொடர்பான தகவல்கள்தான்.



சாதாரண ஓட்டோ செலுத்துநரின் மகன்தான் இந்த சிராஜ். இவர் இந்திய அணியுடன் இணைந்து ஆஸ்திரேலியாவில் முகாமிட்டிருந்தபோது சிராஜின் தந்தை உயிரிழந்தார். ஆனால் சிராஜ் நாடு திரும்பவில்லை. அவ்வாறு இந்தியா திரும்பினால் சிராஜுக்கான வாய்ப்புக்கள் இனி இல்லாது போகலாம். ஆதலால் அணியுடன் இருப்பது என்ற கடினமான முடிவெடுக்கும் நிலைக்கு சிராஜ் தள்ளப்பட்டார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெறுவதற்கு சிராஜ் முக்கிய காரணமாக இருந்தார். இதையடுத்து அணியில் அவரின் இடம் உறுதிப்படுத்தப்பட்டது. சிட்னியில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய தேசிய கீதம் இசைக்கும்போது சிராஜ் கண்கலங்கினார். இதையடுத்து சிராஜின் வாழ்க்கைப் பின்னணியை வெளிப்படுத்தி அவரைத் தூக்கிக் கொண்டாடி வருகின்றனர் ரசிகர்கள்.

**' கண்ணீர் ஒரு நாள் வெல்லும்'**

# பந்தைப் பிடியுங்கள் பண்ட்

இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் ரிஷப் பண்ட் மீது இந்திய ரசிகர்களே கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். பிடியெடுப்புக்களை அவர் தவறவிட்டதை அடுத்தே அவர் மீது இந்தக் காய்ச்சல்.

சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக இலக்குக் காப்பில் ஈடுபடுவதற்குப் பண்ட் தடுமாறுகின்றார் என்பது அண்மைக்காலமாக முன்வைக்கப்படும் பொதுவான விமர்சனம்தான். ஆனால் சகா துடுப்பாட்டத்தில் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியதை அடுத்து அவர் நீக்கப்பட்டு பண்ட் சேர்க்கப்பட்டார். பண்ட் துடுப்பாட்டத்தில் சொல்லிக்கொள்ளும் படியாக விளையாடிய போதிலும் களத்தடுப்பில் மோசமான நிலையையே தொடர்ந்து வெளிப்படுத்துகின்றார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மூன்று பிடியெடுப்புக்களைத் தவறவிட்ட பண்ட், கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரு பிடியெடுப்புக்களைத் தவறவிட்டார். மாறாக ஆஸ்திரேலிய வீரர்களை வார்த்தைகளால் சீண்டுவதில்தான் பண்ட் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றார். இலக்குக் காப்பாளர் கவனம் செலுத்த வேண்டியது அதிலல்ல. அனேகமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் பண்ட் நீக்கப்பட்டு மீண்டும் சகா களமிறக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

**'என்ன பிடிக்கிறாய் அந்தோனி?
எலி பிடிக்கிறன் சிஞ்ஞோரே!'**

